304

OM

Tamil—

# VEDANTA : : :
# : : PHILOSOPHY

வேதாந்த தத்துவம்

304
2·43

17 APR 1923

A New Book of

## SWAMI VIVEKANANDA

[A Lecture and interesting Conversation with the learned professors and students of the Harward University.]

SRI SADHU RATHNA SARGURU BOOK-DEPOT.,
*Park Town : : : : MADRAS.*

*All Rights Reserved*] [*Price As. Eight.*

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை
நெ. 4/34 நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன் P. O., சென்னை

# சச்சிதானந்தசிவம்

[ஸ்ரீஜத் சுப்பிரமணிய சிவம் முதல் முறை 6 வருட காலம் சிறைவாசத்திலிருந்தபோது இயற்றியது.]

[நூலாசிரியரால் திருத்தப்பட்ட 3-ஆம் பதிப்பு]

[இஃது குரு—சிஷ்ய சம்பாஷணை ரூபமான அநுபவ வேதாந்த பொக்கிஷம்.]

"எனது பிரார்த்தனை" சிவம் பாடியது.

குருஸ்துதி, தியானுஷ்டகம், முதற்பதிப்பின் முகவுரை 2 ஆம் பதிப்பின் முகவுரை, 3-ஆம் பதிப்பின் முகவுரை சமர்ப்பணம், லக்ஷ்மீ நரசிம்ஹ ஸ்தோத்ரம், 1. சுகமே லக்ஷியம் 2. ஜீவ விளக்கம், 3. முமுட்சுத்துவ கஷ்டங்கள், 4. குருபக்தி விசேஷம், 5. வேஷதாரி குருக்கள், 6. சற்குரு தர்சனம், 7. நம்பிக்கையே பிரதானம், 8. வெறும் நம்பிக்கையும் வீண் போகாது, 9. உத்தம உபதேசம், 10. விவர்த்தவாத வெற்றி 11. "உடைமையை" ஒழி, 12. சரீரம் ஒரு மலமூட்டை, 13 மாயாவிளக்கம், 14. மன நிரோதமே வேண்டும்; 15. குருவே நாரதர், 16. சரீரதிட அவசியம், 17. மஹான்கள் இருவகை, 18. ஜாதிக்கும் மோக்ஷத்திற்கும் சம்பந்தமேயில்லை, 19. வாசனு சக்தி, 20. ஜாதி தர்ம ரகசியம், 21. உயர்வு தாழ்வு இல்லை, 22. அரியதொரு உண்மை, 23. ஆனந்த சொரூபமே ஆத்மா, 24. புறத்துறவு அவசியமாயினும் போதாது, 25. சித்திகள், அற்பமாம், 26. க்ஷேத்திரங்கள் அவசியமாம், 27. பக்தியும ஞானமும் ஒன்றே, 28. இராஜயோகசித்திகள், 29. பரிபக்குவ பரீக்ஷை, 30. இராஜயோக அனுபவம், 31. வித்தையும் அவித்தையும் ஒன்றே, 32. இன்மையாம் கர்ம சக்தி, 33. பலனைக் கருதாதே, 34. வெறும் படிப்பு வீணே, 35. மாயையின் மயக்கம், 36. ஜீவகாருண்யம், 37. சுற்றுதல் நிற்க, 38. ஜிதேந்திரிய மகிமை, 39. ஆச்ரம பேதங்கள், 40. சந்யாச மகிமை.

இதன் முதற்பதிப்பு விரைவில் செலவழிந்துவிட்டது. இரண்டாம் பதிப்பும் செலவாய்விட்டது. இதைவிட வேறு அத்தாக்ஷி என்ன? மூன்றும் பதிப்புப் புஸ்தகங்கள் அநேகமாகச் செலவாய் வருகின்றன. மிகு சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. நூலாசிரியர் படங்களுடன் ஸ்ரீ சாது இரத்தின சற்குரு படங்களுடனும் உயர்ந்த பயிண்டுடன் விலை ரூபா-1 2 0



ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்.

"LET THE LION OF VEDANTA ROAR"

"Arise! Awake! Stop Not till You reach the Goal"

"Let me tell you, strength, strength is what we want, And the first step in getting strength is to uphold the Upanishads, and believe that I am the Atmans."

**Swami Vivekananda.**

17 APR 1922
MADRAS

ஸ்ரீ ஸ்வாமி

விவேகாநந்தர்

# வேதாந்த தத்துவம்

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் ஹிந்துமதப் பிரசங்கமான புஸ்தகங்கள் (புதிய தமிழ் மொழி பெயர்ப்பு)

| | ரூ. | அ. |
|---|---|---|
| விவேகாநந்தர் விஜயம் | 1 | 12 |
| ஆத்மஞான ரத்னம் என்னும் 1004-உபதேச மொழிகள் | 2 | 0 |
| அருள்மொழிகள் (அமெரிக்காவில் செய்த உபதேசங்கள்) | 1 | 8 |
| ஞானரத்நாவளி 1-ம்பாகம் 1 8 0 ஷை 2-ம் பாகம் | 1 | 8 |
| இலங்கையில் செய்த பிரசங்கம் 0 3 0 கிழக்கும் மேற்கும் | 0 | 8 |
| எனது குருநாதர் 0 8 0 கடிதங்கள் 1-2ம் பாகம் | 1 | 0 |
| எதிரொலிகள் (சிவாஜி மகாராஜாவின் ஆத்மஞானரகசியம்0 | 8 | 0 |
| தற்கால இந்தியா 0 10 0 சம்பாஷணைகள் | 0 | 8 |
| கர்மயோகம் விரிவான எட்டு பிரசங்கங்களடங்கியது | 1 | 0 |
| இராஜயோகமும் பதஞ்சலியோகமும் | 2 | 4 |
| ஞானத்திரட்டு 1 0 0 எதிர்காலநிலைமை | 0 | 4 |
| நமதுபூமியே புண்ணியபூமி 0 1 0 வேதாந்த ரகஸ்யம் | 2 | 0 |
| பக்தியோகம் 0 12 0 வேதாந்த தத்துவம் | 0 | 8 |
| சச்சிதானந்தசிவம்—குரு சிஷ்ய சம்பாஷணை ரூபமான அநுபவ வேதாந்த பொக்கிஷம் ஸ்ரீஜத் சுப்பிரமணிய சிவம் சிறைச்சாலைக்குள் இயற்றியது படத்துடன் | 1 | 2 |
| மோக்ஷசாதன ரஹஸ்யம் ஷையாரியற்றியது | 0 | 4 |
| ஸ்ரீ இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம் 1 4 0 2-ம் பாகம் | 3 | 0 |
| ஸ்ரீ சங்கர் அருளிய அத்வைத உபதேச பஞ்சரத்னம் | 0 | 6 |
| வீராத்நபாஜிப்ர தேவ்ஷ பாண்டே | 0 | 3 |
| ராமகிருஷ்ண பரமஅம்ஸர் விரிவான சரித்ரம் [ஸ்யம் | 2 | 0 |
| ஷை 1001 உபதேசமொழி 2 0 0 லண்டன் மாளிகை ரக | 0 | 12 |
| நாலாயிர திவ்யபிரபந்தம் 4 0 0 நாலடியார்உரையுடன் | 1 | 4 |
| கைவல்ய நவநீதவசனம் வினா விடை விரிவுரையுடன் ஹிந்து திரொஜிகல் ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் சாது சே.r. வடிவேலு செட்டியர்ர் இயற்றியது | 2 | 8 |
| நளவீம பாகசாஸ்திரம் | 1 | 8 |
| நாமாவளி கதம்பம்—இதில் விஷ்ணு சகஸ்ர நாமாவளி 1ம் அஷ்டோத்ர சதநாமாவளி 10-ம் அடங்கியது (பாக்கெட் அளவு) | 0 | 8 |

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,
நெம் 4-34, நயினியப்பநாயக்கன் வீதி,
பார்க்டவுன் (P O), சென்னை.

ஓம்
தத்சத்
ஸ்ரீ ராமகிருஷ்ணாயநம: —
ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்
அமெரிக்கா:—ஹார்வார்ட் கலாசாலையில் செய்தருளிய
அற்புத உபந்நியாசமான

# வேதாந்த தத்துவம்

[கலாசாலைமாணவர்கள் கேள்விகட்கு சுவாமிகள்
அளித்த விடைகளுடன்.]

மொழிபெயர்ப்பாசிரியர்:—
ஆர். நாராயணஸ்வாமி அய்யர்
பிரசுரக்கர்த்தர்:—
சை-ந. பாலசுந்திர செட்டியார்
ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,
நெம், 4/34, நபினியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன் (P. O.) சென்னை.

இதன் விலை] [அணா 8.

17 APR 1923

## இதுகாறும் தமிழ்மொழியில் வெளிவராத—
## இரண்டு அரிய இரத்தினங்கள்,

---

### ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் இராஜயோகமும்,

பதஞ்சலிமுனிவர்யோகசூத்திரங்களும் தமிழ்மொழிபெயர்ப்பு.

இவ்விரண்டு இரத்தினங்களும் வெளியான விதம், 1893-வதுவருடத்திய சிகாக்கோநகரத்திற்கூடிய அதிஉந்நதஹிந்து மத மகாசபை தீர்ந்தபின்னர் அவ்விடங்களில் ஸ்ரீ ஸ்வாமிகள் விஸ்ராந்தியாக உலாவி வரும்போது நண்பர்களின் வேண்டு கோட்கிணங்கி சுருதி ஸ்மிருதிகளிலுள்ள நான்குவித யோக ரகஸ்யங்களைக் கூர்மையாகக் கவனித்தும், தாம் தமது குரு நாதரான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரிடத்தில் அடைந்த தமது அனுபவத்தையும், கர்மயோகம், பக்தியோகம், இராஜ யோகம், ஞானயோகம் என்ற நான்குவித உண்மை ரஹஸ்யங்களையும், பதஞ்சலி மகாமுனிவரால் இயற்றப்பெற்ற யோக சூத்திரத்தின் ரஹஸ்யார்த்தங்களையும் ஆங்கில பாஷையில் மேனாட்டாருக்கு உபதேசித்தார். ஸ்ரீஸ்வாமிகள் இதில் குரு நாதர் மூலமாக அறியவேண்டிய பல ரகஸ்யங்களை விளக்கமாகக் கூறியிருக்கின்றாராதலின் இராஜயோக மார்க்கத்தை அநுஷ்டிக்க விரும்புவோர்கட்கு இவ்விரண்டு இரத்தினங்களும் மிகமிக உபயோகமாகும்.

(1) முகவுரை, (2) முன்குறிப்பு, (3) ஆரம்ப நிலைகள், (4) பிராணன், (5) சூட்சும பிராணசக்தி, (6) சூட்சும பிராண சக்தியை அடக்கியாளுவது, (7) பிரத்தியாகார தாரணை என்னும் இரண்டு அப்பியாசங்களும், (8) தியானமும் சமாதியும், (9) இராஜயோகச் சுருக்கம்.

பதஞ்சலி மகா முனிவரின் யோகசூத்திர வியாக்கியானமும் இவ்விரண்டும் உயர்ந்த பயிண்டுடன் ஸ்வாமிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| படத்துடன் கூடியது. விலை | ரூ | 2 | 4 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் வைபவம் | | 1 | 4 | 0 |
| ஷை பிரஹ்மானந்த சம்பாஷனை | | 3 | 0 | 0 |

**ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,**

பார்க் டவுன் (PO,) சென்னை.

உ

ஓம்

# வேதாந்த தத்துவம்

## முன்னுரை

---

வேதாந்த தத்துவமென்ற உபந்யாசம் அமெரிக்கா தேசத்தில் செய்யப்பட்ட பிரசங்கங்களுக்குள் சிறந்த சில உபந்யாசங்களில் ஒன்ருகும். 'ஹார்வார்டு' என்ற சர்வ கலா சாலையானது தத்துவ சாஸ்திரத்திற்குப் பெயர்போனது. மேனுட்டவர்கள் தெரிந்துகொண்ட தத்துவ கலைகள் எல்லாம் வெகு சிறப்பாக விளங்கும் இடம் இந்த சர்வ கலா சாலை யென்று கூறலாம். ஸ்ரீமான் விவேகாநந்த ஸ்வாமிகள், சிகாகோ சர்வமத மகாசபையில் மேடைமீதேறிப்பிரசங்கித்த அதே காலத்தில் அமெரிக்கா நாடெங்கும் விவேகாநந்தரே சிறந்த பிரதிநிதி யென்றும், உண்மையில் ஒரு முனிவர் என்றும், உத்தம தத்துவ ஞானிகளுள் மிகமிக மேலானவர் என்றும் சிறப்பித்து வர்ணிக்கலானுர்கள். அதுமுதல் பல நகரங்களிலிருந்தும் விவேகாநந்தரது திருவாக்கிலிருந்து வெளியாகும் அமுத மொழிகளைக் கேட்கும் ஆவலுடன் பிரபல வித்வான்களும் பல பெரியோர்களும் ஸ்வாமிகளை அழைக்க

லானுர்கள். இரண்டு வருஷ கால சாவகாசம் சிறிதும் ஓய்வின்றிக் கடின வேலை ஏற்பட்டுவந்தது. அப்போது வேதாந்த தத்துவத்தின் மகிமையை உண்மையானபடி தெரிவிக்க ஸ்வாமிகள் செய்துவந்த அரிய வேலைகள் நிரம்பவும் கொண்டாடத்தக்கது. ஏற்கனவே, ஏற்பட்டிருந்த இழிவான தன்மையையும் அபத்தமான கொள்கைகளையும் திருத்தி உண்மையான தத்துவ நிலையை அந்நியர்கள் தெளிவாக அறியும்படி செய்த அரிய வேலையின் நுட்பத்தை அனுபவித்தவரே தெளிவா யறிய முடியும். அக்காலத்தில் பல இடங்களிலும் அரிய பிரசங்கங்கள் செய்திருக்கிறார். அவற்றில் மிகவும் அரிய பிரசங்கமாக இதை மதிக்கலாம். பிரசங்கம் முடிந்தும் மாணுக்கர்களும் பிரசங்க போதகர்களும் தத்துவ சம்பந்தமாகப் பல அரிய கேள்விகள் கேட்க அவற்றிற்கு ஸ்வாமிகள்மிக அருமையாகப்பதிலளித்திருப்பது பாராட்டத்தக்கது. பாரத தேசத்தின் கௌரவம் சிறிதும் மங்கிப்போகாமல் விர்த்தியாகக்கூடிய வழியில் பேருதவி செய்திருப்பவர் விவேகாநந்தர் என்பது நிச்சயமான உண்மையாகும்.பல விரோதிகளின் மத்தியிலும் தனியேநின்று வேதாந்த மதத்திற்கு ஜெயக்கொடி நாட்டிய வழியை அறியவேண்டின் இப் புத்தகத்தில் பின்னுல் கண்ட பதில் மொழிகளைப் படிக்கவேண்டியது அவசியம். வேதாந்தத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், இலகுவாகவும் அறியவேண்டின் இந்தப் பிரசங்கமொன்றே போதுமானது.

R. நாராயணஸ்வாமி அய்யர்.

ஓம்

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

# வேதாந்த தத்துவம்

**வேதாந்த** தத்துவமென்று இப்போது சொல்லப்படும் நூலானது உண்மையில் இந்தியாவில் இருக்கும் பல உள் மதங்களின் சாரங்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. இவ்விதம் பலவிதமான வியாக்கியானங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவ்வளவும் துவைதத்தில் ஆரம்பித்து வரவர மேனோக்கிக் கடைசியில் ஏகத்துவ பாவனையாகிய அத்வைதத்திலேயே முடிவடைகின்றன என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. வேதாந்தம் என்னும் பதத்திற்கு வேதங்களின் முடிவு என்று பொருள். மேல் தேசங்களில் சில வேளைகளில் வேதங்கள் என்னும் பதத்திற்குக் கர்ம காண்டத்தைச் சேர்ந்த ஸ்தோத்திரம், யக்ஞம் முதலிய விஷயங்களென்றே பொருள் கொள்ளுகின்றார்கள். ஆனால், தற்காலம் இவ் விஷயங்களெல்லாம் உபயோகத்தினின்றும் நீங்கிவிட்டன. ஆதலால், இப்போது இந்தியாவில் வேதங்கள் என்றால் வேதாந்தத்தையே குறிக்கின்றார்கள். பாஷ்யகாரர்களும் சாஸ்திரங்களிலிருந்து அதிகாரம் எடுத்துச் சொல்ல விரும்பும்போதெல்லாம் வேதாந்தத்திலிருந்தே கொண்டுவருகிறார்கள். இந்த வேதாந்த நூல்களுக்கு சுருதிகள் என்று பெயர். இப்படி வேதாந்தம் என்று சொல்லப்படுகிற பாகங்கள்

முழுமையும் வேதங்களின் கர்ம காண்டத்திலுள்ள அத்தியாயங்களுக்குப் பிறகு எழுதப்பட்டவைகளல்ல. ஈசோபநிஷத்து என்ற பாகம் வேதங்களுள் முன்னதாகிய எஜுர் வேதத்தின் நாற்பதாவது அத்தியாயமாக அமைந்துள்ளது. (கர்மகாண்டத்தைச் சேர்ந்த) சில உபநிஷத்துக்கள் பிராம்மணங்களின் பாகங்களாகவே அமைந்துள்ளன. மற்றஉபநிஷத்துக்களெல்லாம் (தற்காலம்) தனி பாகங்களாகவே அமைந்திருந்தாலும்கூட வேதங்களின் இதர பாகங்களினின்றும் முழுமையும் தனிப்பட்டவைகளென்று நாம் நிச்சயமாய் நம்ப முடியாது. ஏனெனில், வேதங்களின் அநேக பாகங்களும், பிராம்மணங்களின் அநேக பாகங்களும் காணமற் போயினவென்று நமக்கு நன்ருகத் தெரியும். ஆதலால், இப்போது தனிப்பட்டு நிற்கும் உபநிஷத்துக்களெல்லாம் ஏதோ சில பிராம்மணங்களைச் சேர்ந்தவைகளாகவு மிருந்திருக்கலாம். அந்தப் பிராம்மணங்கள் உபயோகத்தி லில்லாமற் போய் உபநிஷத்துக்கள் மாத்திரம் பாக்கி யிருக்கலாம். இந்த உபநிஷத்துக்களுக்கு ஆரண்யகாண்ட மெனவும் பெயருண்டு. ஆதலால், வேதாந்த மென்பதே ஹிந்துக்களுக்கு முக்கிய சாஸ்திரங்களாக இருக்கின்றன.

வைதீக மார்க்கத்தைப் போதிக்கும் தத்துவ நூல்களெல்லாம் இந்த வேதாந்தத்தையே ஆதாரமாக அடையவேண்டும். பௌத்தர்களும் ஜைனர்களும்கூடத் தங்கள் காரியத்திற்கு ஏற்றதாக இருக்கு மிடங்களிலெல்லாம் வேதாந்த நூல்களிலிருந்தே ஆதாரம் காண்பிக்கிருர்கள். இந்தியாவில் ஏற்பட்டிருந்த தத்துவ தர்சனங்களெல்லாம் வேதங்களையே

ஆதாரமாகக் கொண்டிருந்தாலும் ஒவ்வொன்றும் தனித் தனிப் பெயரை எடுத்துக்கொண்டது. அவற்றுள் கடைசிய தாகிய வியாசதத்துவ தர்சனம் மற்றவைகளைக்காட்டிலும் அதிகமாகவே வேதங்களை அனுசரித்திருக்கிறதும் தவிர, இதற்கு முன் ஏற்பட்ட தத்துவ சாஸ்திரங்களையும் வேதாந்த தத்துவத்தோடு ஒற்றுமைப்படுத்தவும் பிரயத்தனம் செய் திருக்கிறது. ஆதலால், இந்த வியாஸ தத்துவசாஸ்திரத்தை யே முக்கியமாக வேதாந்த தத்துவம் என்ற பெயரால் வழங்கு கிறார்கள். தற்காலத்தில் இந்தியாவில் வேதாந்த தத்துவத் திற்கு வியாச சூத்திரங்களே முக்கியமானவை. இப்படியிருந் தும் இந்த வியாஸ சூத்திரங்களுக்குப் பாஷ்யகாரர்கள் அநேக வித வியாக்யானங்கள் செய்திருக்கிறார்கள். இந்த பாஷ்யகாரர் களை இப்போது மூன்று பொதுவான பிரிவாகப் பிரிக்கலாம். இவைகளிலிருந்து மூன்றுவித தத்துவங்கள் கிளம்பி அவை களை அனுஷ்டிக்குமவரும் மூன்று உள் மதங்களும் உண்டா யிருக்கின்றன:— துவைதம், விஸிஷ்டாத்வைதம், அத் வைதம் என்பவைகளாம். இவைகளில் துவைதம், விஸிஷ் டாத்வைதம் என்ற இரண்டு மதங்களையும் இந்தியாவில் ஏராளமான ஜனங்கள் பின்பற்றுகிறார்கள். இரண்டற்ற ஏகத்துவத்தை உபதேசம் செய்யும் அத்வைத மதத்தை அனுஷ்டிக்கும் ஜனங்கள் மிகவும் சொல்பம். இப்போது நான் இந்த மூன்று மதங்களிலுமுள்ள அபிப்பிராயங்களை விளக்கிக் காட்டப் பிரயத்தனம் செய்கிறேன். இதைப்பற்றி ஆரம்பிக்குமுன் ஒரு விஷயம் ஞாபகப்படுத்தவேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த மூன்றுவித வேதாந்த தத்து

வங்களும் சாங்கிய தத்துவ சாஸ்திரத்திற் கூறிய மனோதத்துவ நிலைமையை ஒப்புக்கொள்கின்றன. இந்த சாங்கிய மனோதத்துவசாஸ்திரமானது நியாய வைசீஷிக தத்துவங்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது.

வேதாந்திக ளெல்லோரும் மூன்று விஷயங்களை ஒப்புக் கொள்கிறார்கள். அவர்களுக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டு. வேதங்கள் தெய்வத்தன்மை பொருந்திய தென்கிறார்கள். கல்பங்களைப்பற்றிய விஷயங்களிலும் அவர்கள் எல்லோரும் ஒத்துவருகிறார்கள். வேதங்களைப்பற்றி நாம் பேசியாகிவிட்டது. கல்பங்களைப்பற்றிய விஷயங்களை இப்போது எடுத்துக்கொள்வோம்:—இந்த ஜகத்திலுள்ள ஜடப் பொருள்களெல்லாம் ஆகாசம் என்ற பூர்வீக ஜடப்பொருளிலிருந்து வெளியானவைகள்; ஆகர்ஷண சக்திமுதல் இந்த ஜகத்தில் தோன்றக்கூடிய சக்திகள் எல்லாம், ஜீவன்கூட, **பிராண என்ற ஒரு ஆதி சக்தியிலிருந்தும் வெளிவந்தவைகள்.** பிராண என்ற சக்தி ஆகாசம் என்ற பொருளில் தாக்கி இந்த ஜகத்தை சிருஷ்டித்துக்கொண்டு வருகிறது. ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலும் ஆகாசம் அசைவற்று ஒன்றையும் வெளிப்படுத்தாமலிருக்கிறது. அப்போது பிராண என்னும் சக்தி அந்த வஸ்துவைத் தாக்கிக்கொண்டே வாவர ஸ்தூலமான பதார்த்தங்களை அந்த ஆகாசத்தினின்றும் உண்டாக்கிக்கொண்டு வருகிறது. இவ்விதமே புல் பூண்டு மரவர்க்கங்கள், மிருகங்கள், மனிதர்கள், நட்சத்திரங்கள் முதலியவை உண்டாயின. இவ்விதம் வெகு நீண்டகாலம் சென்ற பிறகு இவ்விதம் வெளிப்படுத்திக்கொண்டிருந்த சக்தி முடி

வடைந்து ஒன்றனுள் ஒன்றை அடக்கும் சக்தி ஆரம்பிக்கிறது. கடின பதார்த்தங்களெல்லாம் வரவர நுட்பமான பதார்த்தங்களாக மாறிக் கடைசியில் ஜகத்திலுள்ள ஜடப்பொருள்களெல்லாம் ஆகர்சத்திலும், சக்திகளெல்லாம் பிராண என்ற ஆதி சக்தியிலும் அடங்கிவிடுகின்றன. பிறகு மற்றொரு கல்பம் (இதே மாதிரி) உண்டாகிறது. இந்த ஆகாசம், பிராண ஆகிய இரண்டிற்கும் மேலான வஸ்து ஒன்று இருக்கிறது. இந்த இரண்டையும் மகத் என்று சொல்லப்படும் மூன்றாவது பொருளாக மாற்ற முடியும். மகத் என்றால் இந்த ஜகத்திலுள்ள மனதுகளின் மொத்தத் தொகுதி என்று கூறலாம். இந்த மகத்தானது ஆகாசம் என்னும் பொருளாகவும், பிராண என்னும் சக்தியாகவும் மாறுகிறதேயன்றி இவைகளைப் புதிதாக உண்டாக்கவில்லை.

மனஸ், ஆத்மா, கடவுள் என்ற இம் மூன்றினிடமும் உள்ள நம்பிக்கையைப்பற்றி ஆராய்வோம். எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற சாங்கிய மனோதத்துவ சாஸ்திரம் நம்மிடம் உண்டாகக் கூடிய உணர்ச்சிகளைப்பற்றி என்ன சொல்லுகிறதென்று கவனிப்போம். பார்வை என்ற உணர்ச்சியை எடுத்துக்கொண்டோமானால், முதன்முதலில் பார்ப்பதற்குக் கருவிகளாகக் கண்கள் இருக்கின்றன. இந்த வெளிக் கண்களுக்குப் பின்னால், பார்க்கும் இந்திரியம் அமைந்திருக்கிறது. இந்த இந்திரியம் வெளிக் கண்களல்ல. ஆனால், இதன் உதவி யில்லாமல் வெளிக் கண்கள் பார்க்கமாட்டா. பார்வை என்ற உணர்ச்சியை உண்டாக்குவதற்கு இவ்வளவும் போதாது. மனஸ் என்பது இந்த இந்திரியத்துடன்

ஒன்று சேரவேண்டும். மேலும், இந்த உணர்ச்சியானது புத்தியினிடம் கொண்டுபோகப் படவேண்டும். மனதினிடமிருக்கும் தீர்மானிக்கும் சக்தியே புத்தியாகும். இந்திரியங்களில் படக்கூடிய அடையாளங்களை மனவினிடம் கொண்டு சேர்த்த பிறகு திருப்பிவிடும் சக்தியே இந்த புத்தியாம். இந்த புத்தியினின்றும் திருப்பிவிடும் சக்தி கிளம்பும்போது அதோடுகூடவே பார்க்கப்படும் பொருள்களின் தோற்றமும், "நான் பார்க்கிறேன்" என்ற அகமும் உண்டாகின்றன. மேலும், மனதில் உதிக்கும் எண்ணங்களெல்லாம் இந்தச் சரீரம், மனஸ் என்ற இரண்டைக்காட்டிலும் நித்தியமான ஒரு வஸ்துவினிடம் ஒன்று சேர்ந்து அடையாளம் ஏற்படுத்த வேண்டும். அந்த வஸ்துவே **ஆத்மன்,** அல்லது புருஷன் என்று சொல்லப்படும்.

திருப்பிவிடக்கூடிய நிலையில் மனதில் இருக்கும் புத்தியென்ற சக்தியானது மகத் என்ற பொருளிலிருந்து உற்பவித்ததாக சாங்கிய தத்துவம் சொல்கின்றது. அந்த மகத்தே அசைந்துகொண் டிருக்கும் யோஜனையாக மாறுகின்றது. இதில் ஒரு பாகம் இந்திரியங்களாகவும், மற்றப் பாகம் ஆகாசம், பிராண என்ற சூட்சும பதார்த்தங்களாகவும் மாறுகின்றன. இவைகளெல்லாம் ஒன்று சேருவதனால் ஜகத்து முழுமையும் உண்டாகின்றன. இந்த மகத்தைக் காட்டிலும் மேலாக **அவ்யக்தம்** என்ற ஒரு நிலைமை இருப்பதாக சாங்கிய தத்துவம் கூறுகின்றது. அந்த நிலைமையில் மனஸ் என்பது கூடக் கிடையாது. ஆனால், இதை ஆவிர்ப்பவித்திருக்கும் காரணங்கள் அங்கே யிருக்கின்றன. அந்த நிலைமைக்குப் பிர

கிருதி என்றும் பெயருண்டு. இந்தப் பிரகிருதிக்கும் மேலே எக்காலத்திலும் அதனிடமிருந்து வேறுபட்டதாகப் புருஷன் அல்லது ஆத்மாவானது சர்வ வியாபியாய் யாதொரு குணமும் தனக்குச் சொந்த மில்லாமல் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது என்று சாங்கிய தத்துவம் கூறுகிறது. இந்தப் புருஷன் சாட்சியா யிருக்குமேயன்றிக் கர்த்தாவல்ல. இந்தப் புருஷ ஸ்வரூபத்தை விளக்குவதற்குப் பளிங்குக் கல்லை உவமையாகக் கூறியிருக்கிறார்கள். சுபாவத்தில் பளிங்குக்கு நிறமில்லை. ஆனால்; அதற்கெதிரில் எந்த நிறம் பொருந்திய வஸ்துவைக் கொண்டுவந்தாலும் அதே நிறம் பளிங்கில் பொருந்தியதுபோல் தோன்றும். அதுபோல் புருஷன், ஸ்வபாவத்தில் குணமில்லாதவன். புருஷன் அல்லது ஆத்மாவைப் பற்றியும் பிரகிருதியைப்பற்றியும் சாங்கிய தத்துவம் கூறுவதுபோல் வேதாந்திகள் ஒப்புக்கொள்வதில்லை. இந்த ஆத்மாவிற்கும் பிரகிருதிக்கும் மத்தியில் விசாலமான சமுத்திரம் இருக்கிறது. அதைத் தாண்டவேண்டும். ஒரு பக்கம் பிரகிருதியைப்பற்றிச் சொல்லிவிட்டுத் திடீரென்று அக்கரைக்குத் தாவி ஆத்மாவினிடம் வந்து சேரவேண்டி யிருக்கிறது. இந்த ஆத்மாவிற்கும் பிரகிருதிக்கும் சம்பந்தத்தையே காணோம். சாங்கியதத்துவம் கூறுகிறபடி, சுபாவத்தில் ஒரு நிறமும் இல்லாத ஆத்மாவினிடம் பல வர்ணங்களும் எவ்விதம் தாக்க முடியும்? ஆதலால், வேதாந்திகள் இந்த ஆத்மாவும் பிரகிருதியும் ஒன்று என்றே ஆதிமுதல் சொல்லிவருகிறார்கள்.

[வேதாந்த தத்துவத்திற்கும் சாங்கிய தத்துவத்திற்கும் அதிக வித்தியாச மில்லை. வேதாந்திகளுடைய கடவுள் சாங்கிய தத்

துவத்தில் கூறிய புருஷன், அல்லது ஆத்மன் என்பதிலிருந்து விர்த்தியானது. எல்லா தர்சனங்களும் சாங்கிய தத்துவத்தில் கூறிய மனோதத்துவ நிலைமையை எடுத்துக்கொள்கின்றன. வேதாந்தமும் சாங்கிய தத்துவமும் ஆத்மா நித்தியமென்றே சொன்னபோதிலும், சாங்கிய தத்துவமானது அநேக (ஜீவ) ஆத்மாக்களை நம்புகிறது. வேதாந்திகள் "ஒரே ஆத்மா அநேகமாகத் தோன்றுகிறது" என்கிறார்கள்.]

துவைத வேதாந்திகள் கூட, "ஆத்மா அல்லது கடவுள்: இந்த ஜகத்தை சிருஷ்டி செய்த சக்திக்குக் காரணமாயிருப்பதோடு சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களுக்கும் அவரே காரணம்" என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், இந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் வளர்த்திச் சொல்லுகிறார்கள். "இந்த ஜகத்தில் மூன்றுவித பொருள்கள் நித்தியமாயிருக்கின்றன:- கடவுள், ஆத்மா, பிரகிருதி. பிரகிருதியும் ஆத்மாவும் கடவுளின் சரீரமாக அமைந்திருக்கிறபடியால் இந்தப் பாவனையில் கடவுளும் ஜகத் முழுமையும் ஒன்று என்றே சொல்லலாம். ஆனால், இந்தப் பிரகிருதியும் ஜீவாத்மாக்களும் எக்காலத்திலும் அழியாமலே வேறுபட்டு நித்தியமாகவே இருக்கின்றன. ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலும் இவைகள் வெளிப்பட்டு, கல்பம் முடியும்போது சூட்சுமமாக மாறி, சூட்சும நிலையிலேயே தங்கி நிற்கின்றன."

இரண்டற்ற ஏகத்துவ பாவனையைக் கைப்பற்றுகிற அத்வைத வேதாந்திகள் இந்த ஜீவாத்ம தத்வத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். உபநிஷத்துக்கள் முழுமையும் அவர்கள் பக்கமாக இருப்பதால் அவைகளிலிருந்தே தத்துவங்

களை அடைகிறார்கள். எல்லா உபநிஷத்துக்களும் ஒரே பாடத்தைப் போதிக்கின்றன; அடியில் கண்ட இந்த ஒரே விஷயத்தை விளக்கிக் காட்டுகின்றன:—“ஒரு மண்கட்டியில் உள்ள விஷயங்களனைத்தையும் தெரிந்துகொண்டோமானால் இந்த ஜகத்திலுள்ள மண் முழுமையும் தெரிந்துகொண்டவர்களாவோம். அதுபோலவே, எந்த வஸ்துவைத் தெரிந்துகொண்டால் இந்த ஜகத்திலுள்ள விஷயங்களனைத்தையும் தெரிந்துகொண்டவர்களாவோம்?” இந்த ஜகத் முழுமையும் எந்த ஒரு பொருளால் ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்த வஸ்துவை விளக்கிக் காட்டவே அத்வைத மதவாதிகள் விரும்புகின்றார்கள். “ஜகத் முழுமையும் ஒன்று” என்றும், “ஒரே வஸ்து இவ்வளவு வித ரூபங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறது” என்றும் இவர்கள் அபிப்பிராயம் கொள்கிறார்கள். “சாங்கிய தத்துவம் கூறுகிறபடி பிரகிருதி இருக்கிறது” என்றும், “ஆனால் அந்தப் பிரகிருதியே கடவுள்” என்றும் இவர்கள் கூறுகிறார்கள். சத்பொருளாக உள்ள இதுவே இந்த ஜகத் என்றும், மனிதன் என்றும், ஆத்மா என்றும், இன்னம் பல பெயர்களோடும் கூடியிருக்கும் வஸ்துக்களாக மாறுகிறது. மனஸ் என்பதும், மகத் என்பதும் அந்த ஒரு சத்பொருளின் ஆவிர்ப்பவம்தான். ஆனால், இப்படியெல்லாம் சொல்வதினின்றும் ஒரு கஷ்டம் உண்டாகின்றது. இப்படிச் சொல்வதெல்லாம் இந்த ஜகத்தையே கடவுள் என்று சொல்வதுபோலல்லவா ஆகின்றது. பந்தத்தில் அகப்படாத பொருளுக்கு மாறுதல் கிடையாதே. அப்படியிருக்க, மாறுகிற குணம் தன்னிடமில்லாத அந்த சத்பொருள் மாறிக்கொண்டும் அழிந்துகொண்

டும் போகிற பொருள்களாக (இந்த ஜகத்திலுள்ள பொருள்களாக) எவ்விதம் மாறக்கூடும்? இவ்விடத்தில் அத்வைதிகள் விவர்த்தவாதம், அதாவது மாறுதலைப் போன்ற தோற்றம் என்ற கருத்தைக் கொண்டுவருகிறார்கள்.

இந்த ஜகத்து முழுமையும் பூர்வகாலத்திலுள்ள சூட்சுமப் பிரகிருதியினிடமிருந்து வெளிப்பட்டிருப்பதாகத் துவைத வாதிகளும், சாங்கிய தத்துவசாஸ்திரிகளும் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்த ஜகத்து முழுமையும் கடவுளிடமிருந்து வெளிப்பட்டிருப்பதாகத் துவைதிகளில் சிலரும், அத்வைதிகளில் சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். அத்வைதமதத்தையே பிரதானமாக உடையவர்கள்—அதாவது, ஸ்ரீ சங்கராசாரியருடைய தத்துவத்தைப் பின்பற்றுகிறவர்கள்—அபிப்பிராயப்படுவது யாதெனில், இந்த ஜகத்து முழுமையும் கடவுளிடமிருந்து வெளிப்பட்டிருப்பதைப் போன்ற **தோற்றம்**. இந்த ஜகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் கடவுளே காரணமாகத் தோன்றுகிறார், உண்மையில் காரணமல்ல. இதற்குப் பெயர்போன உதாரணம் **பழுதையும் பாம்பும்**. பழுதையானது பாம்பைப்போல் தோன்றிற்று, உண்மையில் பாம்பல்ல. பழுதையானது பாம்பாக மாறிவிடவில்லை. அதுபோலவே, இந்த ஜகத்தாகத் தோன்றுவதெல்லாம் அந்த சத்பொருளேதான். அந்தப் பொருள் மாறவேயில்லை. நாம் பார்க்கும் மாறுதல்களெல்லாம் தோற்றம்தான். இந்த மாறுதல்களெல்லாம் **தேச கால நிமித்தங்**களால் ஏற்படுகின்றன; அல்லது, உயர்ந்த மனோதத்துவ பாவனையில் கூறுவோமானால், நாம ரூபங்களால் உண்டாகின்றன என்று சொல்ல

லாம். பெயரினாலும் ரூபத்தினாலுமே ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவினின்றும் பிரித்துக் காட்டுகின்றோம். பெயரும் ரூபமும் மாத்திரம் வித்தியாச பாவனைக்குக் காரணங்களாகின்றன. உண்மையில் அவைகளெல்லாம் ஒன்றுதான். "தோன்றும் பொருள் வேறாகவும், உண்மைப்பொருள் வேறாகவும் இல்லை" என்று வேதாந்திகள் சொல்கிறார்கள். பழுதை பாம்பாக மாறியது தோற்றம்தான். இந்தத் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த மயக்கம் தீர்ந்தவுடன் பாம்பு மறைந்து விட்டது. அறிவின்மை யென்னும் மாயையில் இருக்கும் வரையில் ஒரு மனிதன் தோற்றங்களைக் காணுகிறானே யொழிய கடவுளைப் பார்க்கவில்லை. ஆனால், கடவுளைக் கண்டவுடன் இந்த ஜகத்தாகிய தோற்றமெல்லாம் அவனுக்கு முழுமையும் மறைந்துவிடுகிறது. மாயை என்று சொல்லப்படுகிற அறிவின்மையே இந்தத் தோற்றங்களுக்கெல்லாம் காரணம். மாறுந் தன்மை யில்லாத கடவுளை மாறக்கூடிய இந்த ஜகத்தாகத் தோற்றுவிக்கிறது. இந்த மாயை என்பது பொய்யானதல்ல, ஒன்று மில்லாத தன்மை யல்ல. அதை இருக்கிற தென்றும் சொல்ல முடியாது; இல்லை யென்றும் சொல்ல முடியாது. உண்மையாக இருக்கக்கூடிய வஸ்து நித்தியமாகவிருக்கும் கடவுள் ஒன்றுதான். ஆதலால், மாயை இருக்கிறதென்று சொல்ல முடியாது. மாயை இல்லையென்றும் சொல்லிவிடுவதற்கில்லை. ஏனெனில், அப்படியானால் இந்த ஜகத்திலுள்ள தோற்றங்களை உண்டாக்க முடியாது. ஆதலால், மாயை என்பது உண்டு என்றும் சொல்ல முடியாமல் இல்லை யென்றும் சொல்ல முடியாமல் இருக்கக்கூடிய

ஏதோ ஒன்று. வேதாந்த தத்துவத்தில் அதை 'அநிர்வசனீயம், அல்லது விளக்க முடியாதது' என்கிறார்கள். இந்த ஜகத்திற்கு உண்மையான காரணம் மாயைதான். பிரம்மன், அல்லது கடவுள் கொடுக்கும் வஸ்து(இருப்பு)விற்கு மாயையானது பெயரும் ரூபமும் கொடுக்கிறது. அதனால் கடவுள் இப்படியெல்லாம் மாறியிருப்பதாகத் தென்படுகிறது. அத்வைதிகள் இவ்விதம் கூறுகிறபடியால், ஜீவாத்மாவுக்கு அவர்களுடைய தத்துவத்தில் இட மில்லை. ஜீவாத்மாக்களெல்லாம் மாயையினால் உண்டானதாகச் சொல்லுகிறார்கள். உண்மையில் அவைகள் இருக்க முடியா. ஒரு வஸ்துவே சர்வ வியாபியாக இருந்தால் நீ என்றும் நான் என்றும் இப்படியெல்லாம் எவ்விதம் இருக்க முடியும்? நாமெல்லோரும் ஒன்றுதான். இரண்டாகப் பார்ப்பதே தீமைகளுக்கெல்லாம் காரணம். நான் என்னை இந்த ஜகத்தினின்றும் வேறாக நினைத்துக்கொண்டால் முதலில் பயம் என்பது பிறக்கின்றது; பிறகு துக்கம் உண்டாகின்றது. "ஒருவன் வேறான ஒன்றைக் கேட்கும்போதும் பார்க்கும்போதும் சிறிய மனிதனாகின்றான். வேற்றுமையைப் பார்க்காமலும் கேட்காமலும் இருக்க முடியுமானால் அதுவே மகா உயர்ந்த நிலைமையாகிய கடவுள். அந்த உயர்ந்த நிலைமையில் பரிபூர்ணசுகமுண்டு. சிறிய வஸ்துக்களிடம் சுகமே கிடையாது."

ஆதலால், அத்வைதிகளின் கொள்கை யாதெனில்:— இந்த ஜடப்பொருள்களிடம் நாம் பார்க்கும் தோற்றங்களெல்லாம் சொல்ப காலம் மனிதனுடைய உண்மைச் சுபாவத்தை மூடிக்கொண்டிருப்பவை. ஆனால், இந்த உண்மைச்

சுபாவம் கொஞ்சமும் மாறவில்லை. அற்ப புழு முதற்கொண்டு உயர்ந்த மனிதன் வரையிலும் சகல பிராணிகளினிடத்திலும் ஒரே தெய்வத்தன்மை குடிகொண் டிருக்கிறது. புழுவி னிடத்தில் இத் தெய்வத் தன்மையானது மாயையினால் அதிகமாக மூடப்பட்டிருக்கிறபடியால் அது தாழ்ந்தபிராணி யாகிறது. எந்த உருவத்தில் மாயையின் நிழல் ரொம்பவும் சொற்பமாக இருக்கிறதோ அதுவே உன்னதமான பிராணி யின் உருவம். ஒரே தெய்வத்தன்மைதான் எங்கும் வியா பித்திருக்கிறது. இவ்வித கொள்கையிலிருந்துதான் சன் மார்க்க தத்துவம் உற்பத்தியாகிறது. பிராணிகளை ஹிம்சை செய்யாதே. ஒவ்வொருவரையும் உன்னைப்போலவே கருது. ஏனெனில், இந்த ஜகத்து முழுமையும் ஒன்றுதான். பிறருக் குச் செய்யும் தீங்கினால் நான் எனக்கே தீங்கு உண்டாக்கிக் கொள்ளுகிறேன். பிறரிடம் அன்பு பாராட்டுவதனால் நான் என்னையே அன்புடன் நோக்குகிறேன். இவ்வித அபிப்பிரா யங்களிலிருந்து உற்பத்தியாகும் சன்மார்க்க தத்துவம் முழுமையும் ஒரே வார்த்தையில் அடக்கலாம்—தன்னய மறுப்பு. இதுவே அத்வைதிகளின் சன்மார்க்க சாரம். இந்தச் சிறிய உருவத்தில் இருக்கப்பட்ட அஹம் என்பதே என் னுடைய துக்கத்திற்கெல்லாம் காரணம். மற்றப் பிராணிகளி னின்றும் நான் வேறு என்று பிரித்துக் காட்டுகிற இந்தச் சிறிய அஹமே: விரோதம், பொறாமை, துக்கம், சண்டை முதலிய பல தீங்குகளையும் உற்பத்தி செய்கிறது. இந்த எண்ணத்தைத் தொலைத்துவிட்டால் சண்டைக ளெல்லாம் நீங்கிவிடும்; துக்கங்க ளெல்லாம் மறைந்துவிடும். ஆதலால்,

இதைத் துறந்துவிடவேண்டும். அற்ப பிராணிகளுக்காகக் கூட நமது வாழ்க்கைகளை விட்டுவிட நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். அற்ப பிராணிக்காகத் தன் உயிரைக்கூட விட்டுவிடுவதற்குத் தயாராக ஒரு மனிதன் இருந்தால், "அத்வைதிகள் அடைய விரும்பும் முக்தி நிலைமைக்கு அவன் வந்துவிட்டான்" என்று சொல்லலாம். அப்படிப்பட்ட நிலைமைக்கு வந்துவிட்ட நிமிஷத்திலேயே அறிவின்மை (மாயை) என்ற திரை அவனை விட்டும் நீங்கிப் போய்விடுகின்றது. அதனால் அவன் தன் ஸ்வபாவத்தை உணருகிறான். இந்த ஜீவ தசையிலேயே இந்த ஜகத்துடன் தான் ஒன்று என்பதை உணருகிறான். கொஞ்ச நாழிகை அவனுக்கு இந்த வெளித் தோற்றமான உலகம் மறைந்துவிடுகிறது. தன் ஆத்ம ஸ்வரூபத்தையே அவன் அனுபவிக்கின்றான், ஆனால், இந்தச் சரீரத்தைப் பற்றிய கர்மா இருக்கும் வரையில் அவன் ஜீவித்திருக்கவேண்டும். மாயையானது முழுமையும்நீங்கிய பிறகுகூட இந்தச் சரீரத்துடன் கொஞ்சகாலம் வசிக்கவேண்டியிருக்கிற இப்படிப்பட்ட நிலைமையை ஜீவன் முக்தி நிலைமை யென்று வேதாந்திகள் சொல்லுகின்றார்கள். கானல் நீரை உண்மையான தண்ணீரென்று நினைத்து ஒரு மனிதன் கொஞ்சகாலம் மயங்குகின்றான். ஒருநாள் இந்தப் பொய்த் தோற்றம் மறைந்துவிடுகின்றது. அப்படித் தோன்றி மறைந்த பிறகு எந்தக் காலத்தில் அந்தத் தோற்றம் மறுபடியும் உண்டானாலும் அவன் அதை உண்மையென நினைத்து மயங்கமாட்டான். ஒருதரம் இந்தத் தோற்றம் மறைவதற்கு முன் உண்மையான தண்ணீருக்கும் இந்த ஏமாற்றத்திற்கும்

வித்தியாசம் தெரியாமலிருந்தது. ஆனால், ஒருதரம் அது மறைந்த பிறகு, அவனிடம் கண்களும் மற்ற அவயவங்களும் ஒழுங்காக இருக்கும் வரையில், அந்த உருவத்தை மறுபடியும் பார்த்துக்கொண்டிருப்பான். ஆனால், அதைக் கண்டு மறுபடியும் மயங்கமாட்டான். உண்மையான உலகத்திற்கும் இந்தப் பொய்யான தோற்றத்திற்கும் உள்ள சூட்சுமமான வித்தியாசத்தை அவன் தெரிந்துகொண்டுவிட்டான். ஆதலால், இந்தப் பொய்த் தோற்றம் அவனை மறுபடியும் ஏமாற்ருது. அதுபோலவே, வேதாந்தியானவன் ஒருதரம் தன் ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவித்துவிட்டால் இந்த உலக முழுமையும் அவனுக்கு மறைந்துவிடுகிறது. மறுபடியும் இந்த உலகம் அவனுக்குத் தென்பட்டாலும் அது ஒரு போதும் துக்கங்களே நிறைந்த உலகமாகத் தோன்றவில்லை. துக்கங்களே நிறைந்த ஜெயிலானது சத் சித் ஆநந்தமாக மாறி விட்டது. அதை அடைவதே அத்வைத தத்துவத்தினுடைய முடிவான நோக்கம்.

## சில முக்கிய கேள்விகளுக்கு ஸ்வாமிகள் அளித்த பதில்கள்.

(கேள்வி) தற்காலத்தில் தத்துவநிலையைப்பற்றி இந்திய ஜனங்களின் இயக்கம் எப்படியிருக்கிறது? அந்தக் கேள்விகளைப்பற்றி எவ்வளவு வரையில் தர்க்கிக்கிருர்கள்?

(பதில்) நான் கூறியபடி இந்தியர்களில் ஏராளமான பாகத்தார் அனுபவத்தில் துவைதிகள்; சிறு பகுதி ஜனங்க

ளே ஏகத்துவ பாவனையாகிய (அத்வைதத்தை) அவலம்பிக்கிறவர்கள். தர்க்கிக்கப்படும் முக்கிய விஷயங்கள் மாயை, ஜீவன் என்பவைகளே. நான் இத் தேசத்திற்கு வந்தபோது, தொழிலாளர்கள் தற்காலத்திய இராஜீய விஷயங்களை அறிந்தவராயிருந்ததைக் கண்டேன். ஆனல், அவர்களை நான் "மதம் என்பதென்ன ?" என்று கேட்டபோது, – "ஒவ்வொரு கிளை மதத்தையும் பற்றியிருக்கும் கொள்கைகள் எவை" என்று கேட்டபோது – அவர்கள் கூறியது:—"எங்களுக்குத் தெரியாது, நாங்கள் கோயிலுக்குப் போகிறோம்" என்றார்கள். இந்தியாவில் ஒரு குடியானவனிடம் போய் "உன்னை அரசாளுபவர் யார்?" என்று கேட்டேனானல்; அவன் கூறுவது:—"எனக்குத் தெரியாது; நான் கிஸ்தியைச் செலுத்துகிறேன்" என்பான். ஆனல், அவனுடைய மதம் என்னவென்று கேட்டால் "நான் துவைதி" என்று சொல்லி, மாயை, ஜீவன் என்பவைகளைப்பற்றி விபரமாகக் கூறத் தயாராயிருப்பான். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இவற்றையெல்லாம் துறவிகளிடமிருந்து அறிந்துகொண்டான்; தர்க்கம் செய்யவும் பிறியப்படுகிறான். பகல்வேலை முடிந்தபிறகு குடியானவர்கள் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு இவ் விஷயங்களைப் பற்றித் தர்க்கம் செய்கிறார்கள்.

(கே) வைதீகமென்றால் ஹிந்துக்களுக்கு என்ன அர்த்தமாகிறது?

(பதில்) தற்காலத்தில் (வைதீகம் என்றால்) ஜாதியாசாரங்களுக்குக்கட்டுப்பட்டிருத்தல் என்றுதான் அர்த்தம். போஜனம், பானம், விவாகம் முதலிய விஷயங்களில் அவரவர்களுடைய

ஜாதிகளுக்குள்ள விதிகளை அனுஷ்டித்தலாம். (இவ்வளவு வரையில் ஒழுங்காக இருந்துவிட்டால்) ஹிந்துவானவன் எந்தக் கொள்கைகளை வேண்டுமானாலும் நம்பலாம். ஏதேனும் ஒரு கோவிலில்தான் வணங்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இந்தியாவில் ஒருபோதும் கிடையாது.

ஆகையால் வைதீக கொள்கைகள் என்று திரட்டுவதற்குத் தக்க சங்கம் கிடையாது. பொதுவாகச் சொல்வோமானால் வேதங்களில் நம்பிக்கையுடையவர்கள் வைதீகர்கள். ஆனால், உண்மையில் துவைத மதத்தைச் சேர்ந்த அநேகர் வேதங்களை மாத்திரம் நம்புவதைக் காட்டிலும் அதிகமாகவே புராணங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

(கே) கிரேக்கர்களது ஸ்டாயிக் தத்துவத்தினிடம் ஹிந்து தத்துவம் எவ்விதத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது?

(பதில்) அலெக்ஸாந்திரியர்கள் மூலமாகக்கொஞ்சம் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடும். பிதாகோராஸ் (என்ற கிரேக்கர்) சாங்கியருடைய எண்ணங்களால் தமது தத்துவத்தைத் திருத்திக்கொண்டதாகச் சிறிது சந்தேகமுண்டு. வேத தத்துவங்களைப் பகுத்தறிவின் ஆராய்ச்சிக்குத் தகுதியுடையதாகச் செய்வதற்கு முதற் பிரயத்தனம் சாங்கிய தத்துவந்தானென்று நாங்கள் நிச்சயிக்கிறோம். "கபிலரையும் உற்பத்தி செய்தவனே" என்று கபிலர் பெயர் வேதங்களிலேயே குறிக்கப்பட்டிருக்கிறது தெரிகிறது.

(கே) இந்தக் கொள்கைக்கும் மேனாட்டு நூதன சாஸ்திர முறைக்கும் உள்ள விரோதப்பான்மை எப்படிப்பட்டது?

(பதில்) விரோதப்பான்மையே கிடையாது. அதற்கு ஒத்தே நடந்து வருவோம். சிருஷ்டியைப்பற்றிய எங்கள் தத்துவமும், ஆகாசம் பிராணன் என்ற தத்துவங்களும், உங்களுடைய தற்காலத்திய தத்துவ சாஸ்திரங்களில் கூறப் பட்டவைகளைப்போன் றிருக்கக்கூடியது. (பிரபஞ்சம்) வெளிப்படும் நிலைமைகளைப்பற்றி உங்களுடைய நம்பிக்கை எப்படியிருக்கிறதோ அவ்விதமே எங்களுடைய யோகிகளும் நம்புகிறார்கள்; சாங்கிய தத்துவத்திலும் அப்படியே இருக் கிறது. உதாரணமாகக் கூறுவோம்:—"பிரகிருதியின் இயக் கத்தால் ஒரு வர்க்கம் மற்றோர் வர்க்கமாக மாறுகிறது" என்று பதஞ்சலி கூறுகிறார். மாறுகின்ற வழியைப்பற்றிக் கூறும் போது நீங்களும் அவரும் வித்தியாசப்படுகிறீர்கள். அவர் கூறுகின்ற விவரம் ஆத்ம சம்பந்தமானது. அவர் கூறுவது பின் வருமாறு:—ஒரு குடியானவன் தன் கழனிக்குச் சமீபத் தில் உள்ள வாய்க்கால் ஜலத்தைப் பாய்ச்ச வேண்டுமானால் என்ன செய்கிறான்? தன் கழனியின் மடையைத் திறக்கிறான்; அவ்வளவேதான். அதே மாதிரி, ஒவ்வொரு மனிதனும் ஏற் கனவே எல்லையற்ற அகண்ட பரிபூரணன்; இந்தத் தடைக ளும் பலவித சந்தர்ப்பங்களும் (அவனை அறியவிடாமல்) மூடிக்கொண்டன; அவைகளெல்லாம் நீங்கிவிட்டால் அவன் வெளித்தோன்றி அனுபவித்தறிகிறான். மிருகத்தினிடம் மனிதத்தன்மை ஒளித்து வைக்கப்பட்டிருந்தது; நல்ல சந் தர்ப்பங்கள் கிடைத்தவுடன் மனிதனாக வெளிப்பட்டான். பிறகு சரியான பக்குவ காலம் வந்ததும் மனிதனிடம் இருக் கும் தெய்வத்தன்மை வெளிப்பட்டுவிடுகிறது. இப்படியாகப்

புதிய கொள்கைக்காரருடன் எங்களுக்குச் சண்டைக்கு இடமே கிடையாது. உணர்ச்சியைப்பற்றிய சாங்கிய தத்துவத்தின் கொள்கைக்கும் தற்காலத்திய தத்துவ சாஸ்திரத்துக்கும் வித்தியாசம் மிகச் சொல்பமேயாகும்.

(கே) ஆனுல், நீங்கள் அனுசரிக்கும் மார்க்கம் வேறு அல்லவா?

(பதில்) ஆம்; மனதினிடமுள்ள சக்திகளைச் சேர்த்து ஏகாக்கிரப்படுத்துவதாலே மாத்திரம் அறிவு உண்டாகும்; வேறு மார்க்கமில்லை யென்கிறேம். வெளிப் பிரபஞ்ச சம்பந்தமான சாஸ்திர நூல்களில், மனதின் ஏகாக்கிர சக்தி வெளிப் பிரபஞ்சத்தில் உள்ள பொருளின்மேல் வைக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பிரகிருதி சம்பந்தமான நூல்களில், அவ்வித சக்தியை ஒருவன் தன் மனதிற்குள்ளேயே செலுத்தி விடுகிறுன். இவ்வித ஏகாக்கிர மனதைத்தான் நாங்கள் யோகம் என்கிறேம்.

(கே) ஏகாக்கிரப்படுத்திய (தியான) நிலையில் இந்தக் கோள்கைகளின் உண்மை விளங்குகின்றதா?

(பதில்) யோகிகள் நிரம்பச் சொல்கிறுர்கள். "தியானத்தினல் இந்த ஜகத்திலுள்ள சகல உண்மைகளும்—வெளிப் பிரபஞ்சத்திலுள்ளவைகளும் அந்தப்பிரகிருதி (மனேமயம்)யிலுள்ளவைகளும்— மனதிற்கு வெளிப்படுகிறது" என்று சொல்கிறுர்கள். "சிருஷ்டி சம்பந்தமான சகலமும் மாயையில் மாத்திரம்—அதாவது, மாறிக்கொண்டேயிருக்கும் உலகத்தில்தான்—இருக்கிறது" என்று அத்வைதிகள் சொல்லுவார்கள். உண்மையில் அவைகள் இல்லை. ஆனுல், நாம் எவ்

வளவு காலம் கட்டுப்பட்டிருக்கிறோமோ, அவ்வளவு காலம் வரையில் இந்தத் தோற்றங்களைக் காணவேண்டியதுதான். இந்த தோற்றங்களுக்குள், நடக்கும் விஷயங்க ளெல்லாம் ஒரு ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டே வருகின்றன. இவை களுக்கு வெளியில் சுதந்திரம்தான். அங்கே யாதொரு விதியும் ஒழுங்கும் கிடையா. உபநிஷத்துக்கள் ஒழுங்குபெற அமைக்கப்பட்ட உருவம் பெற்று விளங்கவில்லை. அதனால் ஒரு ஒழுங்கை ஸ்தாபித்த தத்துவசாஸ்திரிகள் தேவையான இடத்திலிருந்து உபநிஷத்து வாக்கியங்களை எடுத்துக்கொள்வது இலகுவாயிற்று. ஆதலால், எப்போதும் உபநிஷத்துக்களையே எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று; இல்லையேல், யாதொரு ஆதாரமும் இல்லாமற் போகும். ஆனாலும், எல்லா விதமான தத்துவங்களும் உபநிஷத்துக்களில் காணப்படுகின்றன. அத்வைதமானது துவைதத்திற்கு விரோதமான கொள்கை யல்லவென்பதே எங்களது முடிவு. மதமானது மூன்று படிகளை யுடையதாயிருக்கிறது. முதலில் துவைதம்; அதிலிருந்து மனிதன் மேலெழும்பிச் சென்று விஸிஷ்டாத்வைதத்தை யடைகிறான். கடைசியில் இந்த ஜகத்தும் தானும் ஒன்று என்பதை (அத்வைதத்தை) அறிகிறான். ஆதலால், இம்மூன்றும் ஒன்றற்கொன்று விரோதமானவைகளல்ல. ஆனால், ஒன்றை ஒன்று பூர்த்தி செய்கின்றன.

(கேள்வி) மாயை அல்லது அறிவின்மை என்பது ஏன் இருக்கிறது? இந்த மயக்கத்திற்குக் காரணம் யாது?

(பதில்) இந்தக்கேள்வி சென்ற மூவாயிர வருஷங்களாகக் கேட்கப்பட்டு வருகிறது. "ஏன்?" என்ற கேள்வி காரிய

காரணபாவத்திற்கு வெளியில் கேட்கமுடியாது. மாயைக்குள் தான் இந்தக் கேள்வி உண்டு. ஆதலால், நாங்கள் சொல்வது என்னவெனில், இந்தக் கேள்வியைத் தர்க்க ரீதியான கேள்வி யாக அமைத்தால் நாம் பதில் கூறுவோம். அதற்கு முன் பதில் சொல்ல நமக்குப் பாத்தியமில்லை. இந்த ஒரே பதில் தான் இதற்கு உண்டு. இந்தக் கேள்வியே முன்பின் விரோ தமா யிருக்கிறது. பிரஹ்மமானது தாரதம்மியங்களை அடைந் திருப்பது தோற்றல்மாத்திர மென்பதும், கட்டுப்படாத வஸ்து கட்டுப்பட்டிருப்பது மாயையில்மாத்திரம்தான் என்ப தும் எங்களுடைய சித்தாந்தம். கட்டுப்படாதது என்று சொல்வதனுலேயே பிரம்மம்தன்னைவிட்டு அன்னியமாகவுள்ள எந்த வஸ்துவினுலும் தாக்கப்பட முடியாததென்று ஒப்புக் கொள்கின்றோம். பிரஹ்மம் (ஒரு காரணத்தால் உண்டாகிய) காரியமல்ல. வெளியிலுள்ள எதுவும் அதைத் தாக்க முடி யாது. ஒன்றினுலும் கட்டுப்படாத நிலைமையில் தேச கால நிமித்தங்களும் இருக்க முடியா. இப்படியிருப்பதால் உங்க ளுடைய கேள்வியானது பின் வருமாறு ஆகிறது:—தனக் குக் காரணமாக வேறென்றையும் அடையாத வஸ்து இவ் விதம் மாறியதற்குக் காரணமென்ன? இந்தக் கேள்வி: கட்டுப் பட்டிருக்கும் நிலைமையில் தான் உண்டு. அந்த நிலைமையி லிருந்தும் இந்தக்கேள்வியை எடுத்துச் சுவாதந்திரிய நிலைமை யில் கேட்க விரும்புகிறீர்கள். சுவாதந்திரியமுள்ள வஸ்து சுதந்திரத்தை இழந்து கட்டுப்பட்ட வஸ்துவாகும்போது— தேச கால நிமித்தங்கள் உண்டாகும்போது—இந்தக் கேள்வி கேட்க முடியும். "அறிவின்மைதான் இந்த மயக்கத்திற்குக்

காரணம்" என்று நாம் சொல்லக்கூடும். இந்தக் கேள்வியே இருக்க முடியாது. பிரஹ்மத்தை ஒன்றும் தாக்கியிருக்க முடியாது. இதற்குக் காரண மில்லை. எங்களுக்குத் தெரியாது என்றாவது, நாங்கள் தெரிந்துகொள்ளவில்லை யென்றாவது அர்த்தமல்ல. ஆனால், அந்த வஸ்து அறிவு (நிலைமை)க்கு மேற்பட்ட நிலையில் உள்ள விஷயம். அதைக் கீழே இழுத்து அறிவின் மட்டத்திற்குக் கொண்டுவர முடியாது. எனக்குத் தெரியாது என்பதை இரண்டு அர்த்தத்தில் உபயோகப்படுத்தலாம். ஒரு அர்த்தத்தில் "நாம் தெரிந்து கொள்ளவில்லை" யென்றும், மற்றொரு அர்த்தத்தில் "அந்த விஷயம் அறிவின்மட்டத்திற்கு மேற்பட்ட"தென்றும் பொருளாகும். சில சாஸ்திரங்களை நாம் தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் நமக்குத் தெரியா. ஆனால், கஷ்டப்பட்டால் தெரிந்துகொள்ளலாம். பிரஹ்மத்தைப்பற்றியோ என்றால் நாம் அறிந்துகொள்ள முடியாது. அறிவின் மட்டத்திற்கு மேல் வெகு தூரத்தில் இருப்பதால் அது அறியக்கூடிய விஷயமல்ல. (சகலத்தையும்) அறியக்கூடியவனை எப்படி நாம் அறிய முடியும்? நீ எப்போதும் நீயாகவே இருக்கிறாய். உன்னையே பிரத்தியேகமாக உன்னால் பாவித்துக்கொள்ள முடியாது. எங்கள் தத்துவசாஸ்திரிகளால் இறவாத்தன்மை ருஜுப்படுத்துவதற்குக் கொண்டு வரப்பட்ட கட்சிகளுள் இதுவும் ஒன்று. நான் இறந்துவிட்டதாக நினைத்துக்கொள்ள வேண்டுமானால் எதை நான் நினைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நான் தனியே நின்று என்னையே, அதாவது ஒரு இறந்த உடலை,—பார்ப்பதாக நினைத்துக்

கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவதென்னவென்முல், என்னையே நான் பிரத்தியேகமாகப் பாவித்துக்கொள்ள முடியாது.

(கே) சகுணப்பிரஹ்மம் மாயைக்குச் சொந்தமா?

(பதில்)மாயையின் மூலமாகப் பார்க்கப்படும் நிர்க்குணப் பிரம்மமே இந்த சகுணப்பிரம்மம். பிரகிருதியினுல் ஆளப் படும் பிரம்மம் ஜீவாத்மா என்றும், பிரகிருதியை ஆளுகின்ற பிரம்மம் ஈஸ்வரன் அல்லது சகுணப்பிரம்மமென்றும் சொல்லப்படும். ஒரு மனிதன் சூரியனைப் பார்ப்பதற்குப் புறப் பட்டால் முதன்முதலாகச் சூரியன் மிகவும் சிறிதாகத் தென் படுகிறது. ஆனுல், போகப்போகச் சூரியன் வரவரப் பெரிய தாகிக்கொண்டே வரும். பிரயாணத்தின் ஒவ்வொரு நிலை மையிலும் இவன் பார்த்து வரும்போது சூரியன் வெவ் வேமுன .தோற்றங்களைக் காண்பித்தது. ஆனுல், அவன் ஒரே சூரியனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தான் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும். அதுபோலவே, இவைக ளெல்லாம் அகண்டத்தின் கனவுகளே. அவ்வளவு வரை யில் அவைகள் உண்மையானவைதான். ஒரு தோற்ற மாவது பொய்யானதல்ல. ஆனுல், இவைகளெல்லாம் தாழ்ந்த படிகளென்றுமாத்திரம் நாம் சொல்லக்கூடும்.

(கே) பிரஹ்மத்தை அறிவதற்கு ஒருவன் அநுசரிக்கவேண் டிய முக்கிய விதிகள் எவை?

(பதில்)பிரஹ்மத்தை அறிவதற்கு இரண்டுவழிகள் இருக் கின்றன. முதலாவது, அன்பு (அல்லது பக்தி.). நம்முடைய

ஹிருதயத்திலிருந்தும் வெளிக் கிளம்புகிற அன்பை எல்லையில்லாமல் விரிவடையச் செய்துகொண்டு இந்த ஜகத்தைச் சூழ்ந்து கொள்வது. இரண்டாவது, "இதுவல்ல, இதுவல்ல," என்று சொல்லிக்கொண்டே மறுத்துச் செல்லும் மார்க்கம். மனதை வெளியே இழுத்துவிடக்கூடிய ஒவ்வொரு எண்ணமாகிற அலையையும் நிறுத்திக்கொண்டு வருவது. இப்படியே மனது இறந்துவிட்டதுபோ லாகும். உண்மைச் சுபாவம் தானே வெளிப்படும். அதை ஞாபகசக்தி என்னும் மட்டத்திற்கு மேற்பட்ட சமாதிநிலை என்று சொல்கிறோம். இது பார்க்கப்படு பொருள்களுக்குள் தன்னை அமிழ்த்தி விடுவதல்ல. அப்பொருள்களை யெல்லாம் தனக்குள் அமிழ்த்திவிடுவதேயாம். உண்மையில் இந்த உலகம் இறந்துவிடுகிறது. நான் மீதியாகிறேன். நான் மாத்திரமே மிகுதியாக இருக்கிறேன்.

(கே) எங்கள் தத்துவ சாஸ்திரிகளில் ஜர்மனியிலுள்ள சிலர், இந்தியாவில் உள்ள பக்தியைப்பற்றிய கொள்கைகளெல்லாம் மேனாட்டு நாகரிக சம்பந்தத்தின் பலனாகவே அநேகமா யிருக்கக்கூடுமென்று நினைக்கிறார்களே?

(பதில்) அந்த நினைப்பைப்பற்றி நான் கவலைப்படவில்லை; அது சிறிதுகூட நிலைக்க முடியாது. இந்தியாவின் பக்திதத்துவம் மேனாட்டவரின் பக்திதத்துவத்தைப் போன்றதல்ல. எங்கள் தத்துவத்தில் பயமென்பதற் கிடமில்லை யென்பதே முக்கிய கருத்தாகும். எப்போதும் கடவுளிடத்தன்பு. பயத்தின்பேரில் ஏற்பட்ட தெய்வ வணக்கமல்ல; ஆதிமுதல் அந்தம் வரையில் அன்பைப்பற்றியே யிருக்கும். [கடவுளின்

உண்மைச் சுபாவத்தைப்பற்றிய அறிவினால் ஏற்படுவது.] மேலும், அவ்வித நினைப்பு அநாவசியமாக இருக்கிறது. உபநிஷத்துக்களுள் பழைய காலத்திய உபநிஷத்துக்களில்கூட பக்தியைப்பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது கிறிஸ்தவ சங்கத்திற்கு எவ்வளவோ முற்பட்ட காலம். பக்தியின் விதைகள் சம்ஹிதையில்கூட இருக்கின்றன. பக்தி என்ற வார்த்தையே மேனாட்டுச் சம்பந்தமற்றதா யிருக்கிறது. சிரத்தை என்ற பதத்துடன் சம்பந்த முள்ளது.

(கே) கிறிஸ்தவ மதத்தைப்பற்றி இந்தியரது அபிப்பிராய மென்ன?

(பதில்) அது மிகவும் நல்லதுதான். வேதாந்தம் ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்ளும். இந்தியாவில் எங்களுக்குள் ஒரு விநோத கொள்கை யுண்டு. எனக்கு ஒரு குழந்தை இருக்குமானால் அதற்கு யாதொரு மத போதனையும் செய்யக்கூடாது. சுவாசப் பழக்கத்தால் மனதை ஏகாக்கிரப்படுத்தும் வழக்கமும், ஒரே ஒரு வரி ஸ்தோத்திரமும் கற்றுக் கொடுக்கவேண்டும். நீங்கள் செய்யும் தெய்வ பிரார்த்தனை போலல்ல; ஆனால் "இந்த ஜகத்தை உண்டாக்கியவன் எவனோ அவனைத் தியானிக்கின்றேன். அவன் என் மனதைப் பிரகாசிக்கச் செய்யட்டும்." என்பது மாத்திரமே. அவ்வளவுதான். அப்படியே அவன் பழக்கம் செய்யும்படிப் போதிக்கப்படுவான்; பிறகு பல தத்துவ சாஸ்திரப் பயிற்சியையும் கேட்பான். எந்த ஆசாரியன் தனக்குப் போதிக்க வல்லவன் என்று தோன்றுகிறதோ அவனிடம் சென்று அவனையே குருவாக அடைந்து அவனிடம் சிஷனாவான். "நீங்கள் வெளியிடு

கின்ற தத்துவம் சிறந்ததாக இருக்கிறது; ஆதலால், எனக்கு அதைப் போதிக்கவேண்டும்'' என்று கேட்பான். எங்கள் தத்துவங்களின் அஸ்திவாரமே இதுதான். உன்னுடைய கொள்கை எனக்குச் சொந்தமாகாது; என்னுடைய கொள்கையும் உனக்குச் சொந்தமாகாது. ஒவ்வொருவனும் தனித் தனி மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டியதுதான். நான் ஒரு மார்க்கத்தையும், என் குமாரன் மற்றொரு மார்க்கத்தையும், என் புத்திரி வேறொரு மார்க்கத்தையும் பின்பற்றக் கூடும். அப்படியே ஒவ்வொருவனுக்கும் இஷ்டமான தனி மார்க்கம் உண்டு. அது அவரவர்களுக்கு மாத்திரமே உரியது. எனக்கும் என் ஆசிரியருக்கும் மாத்திரம் தனியே சம்பந்த முள்ளது; ஏனெனில், நாங்கள் சண்டை போடத் தயாரா யில்லை. பிறருக்குச் சொல்வதாலும் பல னுண்டாகாது. ஒவ்வொருவனும் தனக்குரிய மார்க்கம் தேடிக்கொள்ள வேண்டியவன் தான். ஆதலால், பொதுவான தத்துவமும் மார்க்கங்களும் மாத்திரமே எல்லோருக்கும் போதிக்கலாம். இதற்கு ஒரு வேடிக்கையான உதாரணம் கூறுவோம். ஒரு காலின் பேரில் நிற்பது எனக்கு உதவியாக இருக்கலாம். அது எனக்குச் சரியாக இருக்கிறபடியால் 'ஒவ்வொருவனும் அவ்விதம் செய்யவேண்டும்'என்று கூறினால் நீங்கள் என்னைப் 'பைத்தியக்காரன்' என்பீர்கள். நான் துவைதியாகவும், என் மனைவி அத்துவைதியாகவும், இப்படியே ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக இருப்பது கூடும். என் புத்திரனில் ஒருவன் கிறிஸ்து, புத்தர், முகம்மது முதலியவர்களில் எவரையேனும் தொழலாம். ஆனால், ஜாதிக் கட்டினின்று நீங்

காமலிருந்தால் போதும். மற்றது அவனுடைய இஷ்டம். [இஷ்ட தெய்வம் வெவ்வேறாக இருப்பது நமக்குத் தெரிந்ததுதான்.].

(கே) ஜாதி யென்பதில் எல்லா ஹிந்துக்களுக்கும் நம்பிக்கை யுண்டா?

(பதில்) நம்பும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். நம்பாமலிருக்கலாம்; ஆனால், கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

(கே) சுவாச பந்தனம், தியானம் முதலிய அப்பியாசங்களை எல்லோரும் செய்து வருகிறார்களா?

(பதில்) ஆம்: சிலர் மாத்திரம் தங்கள் மதம் விளங்குவதற்கென்று சொல்பமாக அப்பியசிக்கிறார்கள். இந்தியாவில் இருக்கும் கோவில்கள் உங்கள் சர்ச்சுகளைப் போன்றதல்ல. அவைகளெல்லாம் நாளைக்கே இல்லாமற் போய்விடலாம்; அதனால் ஜனங்கள் தேடமாட்டார்கள். கோவில் கட்டுவதெல்லாம் புண்ணியமென்ற கருத்தால் மாத்திரமே! சுவர்க்கத்திற்குப் போகவேண்டுமென்ற எண்ணத்தாலோ, புத்திரன் வேண்டுமென்றோ, அல்லது இதே மாதிரியாக வேறெதனாலோ கட்டிவிடுகிறான். அப்படியே ஒரு பெரிய கோவில் கட்டி அதில் பூஜை செய்யச் சில குருக்களை நியமித்துவிடுகிறான். நான் அங்குப் போகவேண்டுமென்கிற அவசியமேயில்லை. என் தெய்வ வணக்கமெல்லாம் வீட்டில்தான். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு அறை விடப்பட்டிருக்கும்; அதுதான் ஜெபம் செய்யும் அறை. குழந்தைக்கு மந்திரோப

தேசம் செய்தவுடன் அதன் முதற் கடமை ஸ்நானம்செய்து விட்டு வணங்குதலேயாகும். இவ்விதம் சுவாசம் கட்டுப் படுத்திவிடலும் தியானமும் ஏதேனும் ஒரு நாமா உச்சரிப்ப தும் ஆகிய இவைகளே தெய்வ வணக்க மாகும். மற் றொரு விஷயம் என்னவெனில், சரீரத்தை நேரே நிறுத்துதல். சரீரத்தை சௌக்கியமாகக் காப்பாற்றுவதற்கு மனமே சர்வ சக்தி பொருந்தியதென்று நாங்கள் நம்புகிறோம். ஒருவன் இவ்வாறு செய்தவுடன் மற்றொருவன் வந்து இதே மாதிரி செய்கிறான். ஒவ்வொருவனும் மௌனமாகவே செய்து முடிப்பான். ஒரே அறையில் இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஜெபம் செய்வது முண்டு. இந்த வழக்கம் தினந்தோறும் குறைந்தது இரண்டு வேளையாவது நடைபெறும்.

(கே) நீங்கள் கூறும் ஏகத்துவபாவனையென்பது, கோள் கை மாத்திரமேயா, அல்லது நேரே அடையக்கூடிய நிலை மையா?

(பதில்)(இந்த ஏகத்துவமானது) உண்மையாக அடையக் கூடியதென்றும், அந்த நிலைமையை நாம் அனுபவிக்கிறோம் என்றும் சொல்லுகிறோம். அது பேச்சு மாத்திரமாயிருந்தால் பிரயோஜனமற்றதாகும். வேதங்கள் நமக்கு மூன்று விஷ யங்களைத் தெரிவிக்கின்றன. முதலில் இந்த ஆத்மன் கேட் கப்பட வேண்டும். பிறகு அறிவால் அறியப்பட வேண்டும். முடிவில் அதைப்பற்றித் தியானம் செய்யவேண்டும். ஒரு மனிதன் முதலில் கேட்டவுடன் அதைப் புத்தியினால் நிதா னித்துப் பார்க்கவேண்டும். அப்படி அறிந்துகொண்ட பிறகு நம்பவேண்டும். அறியாமல் ஒன்றையும் நம்பிவிடக்

கூடாது. தன்னுடைய நிலைமையைப் புத்தியினால் அறிந்த பிறகு அதைப்பற்றித் தியானம் செய்து அந்த நிலைமையை அனுபவிக்கவேண்டும். அதுதான் மதம். நம்பிக்கை என்பது மதத்தைச் சேர்ந்ததல்ல. பிரக்ஞையோடு கூடிய நிலைமையைக் காட்டிலும் மேலான நிலைமை மதமென்று நாங்கள் கூறுகிறோம்.

(கே) அந்த நிலைமையை அடைந்துவிட்டீர்களென்று லட்சணம் எப்போதாவது சொல்ல முடியுமா?

(பதில்) முடியாது. ஆனால், அதன் பலன்களைக்கொண்டு அந்த நிலைமையை அறிகிறோம். ஒரு மூடன் தூங்கிவிட்டால் தூங்கி விழித்ததும் அதே மூடனாக வெளியே வருகிறான், அல்லது முழு மூடனாகிறான். மற்றொருவன் தியான நிலைமைக்குச் செல்கிறான். அங்கிருந்து திரும்பும்போது ஒரு தத்துவ ஞானியாகவோ, முனிவனாகவோ, அல்லது ஒரு மேதாவியாகவோ விளங்குகிறான். இந்த இரண்டு நிலைகளுக்கும் வித்தியாசம் இதனால் அறியலாம்.

(கே) பூர்வகாலம் இந்தியாவில் அப்யசித்து வந்த மந்திர மகா சக்திகளின் (Self-hypnotism) சூட்சுமங்களைக் கற்றறிந்தவர்களில் எவரையேனும் நீங்கள் அறிவீர்களா? முற்கால இந்தியாவில் நிச்சயமாகவே ஏராளமாக அப்பியசித்தார்கள். இப்போது அவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு கூறப்படுகிறது? எவ்வளவு அப்பியசிக்கப்படுகிறது? தற்காலம் அவ்வளவு மிகுதியாக இல்லை யென்பது வாஸ்தவமாகலாம்.

(பதில்) மேனாடுகளில் நீங்கள் ஹிப்னடிஸம் என்று கூறுவதெல்லாம் உண்மையான (மந்திர) சக்திகளின் ஒரு

பாக மாத்திரமேயாகும். [ஏதோ ஒருவிதமான தூக்கத்தை உண்டுபண்ணுவது ஹிப்னடிஸம்.] ஹிந்துக்கள் இம் முறையைத் "தன் தூக்கம் அல்லது மயக்கத்தைத் தெளிவிப்பது" என்கிறார்கள். "(Self-de-hyptonization) ஏற்கனவே நீ இருக்கும் நிலைமை தூக்கம் என்றும், அதனின்றும் கிளம்ப வேண்டும்" என்றும் கூறுகிறார்கள். மாயா நிவர்த்திக்கு வழி தேட வேண்டும்: "அங்கே சூரியன் தன் பிரகாசத்தை வீச முடியாது. சந்திரனும் நட்சத்திரங்களும் அந்த நிலையை விளக்க முடியாது. மின்னலும் அதை விளக்காது. அழியக்கூடிய அக்னியைப்பற்றியோ கேட்கவேண்டாம். அதன் பிரகாசமே மற்றவைகளை யெல்லாம் விளக்குகிறது." அந்த நிலைமைக்கு ஹிப்னடிஸ் நிலைமை என்ற பெயர் தகாது. மயக்க நிவர்த்திநிலைமை யென்றுதான் சொல்லலாம். "(நம்மால் அறியப்படுகிற) இந்த விஷயங்களெல்லாம், சத்தியமென்று போதிக்கின்ற ஒவ்வொரு மதமும் ஒருவிதமான மயக்கத்தையே அப்பியசிக்கின்றது" என்று நாங்கள் கூறுகிறோம். அத்வைதி மாத்திரமே இந்த மயக்கத்தை அலட்சியம் செய்கிறவன். அவனுடைய தத்துவம் மாத்திரமே அறிகிறது. எவ்வித துவைத பாவனையோடும்கூட மாயை சம்பந்தப்பட்டிருக்கிறதென்று அவனுடைய தத்துவந்தான் ஏறக்குறைய அறிகிறது. அத்வைதி கூறுவதாவது:—"வேதங்களையும் எறிந்துவிடுங்கள், சகுண மூர்த்தியாகிய கடவுளையும் எறியுங்கள், ஜகத்தையும் தள்ளுங்கள், உங்களது சரீரங்கள் மனம் என்பவற்றையும் தள்ளிவிடுங்கள், மாயையினின்று முழுமையும் விடுபட யாதொன்றையும் வைத்துக்

கொள்ளாதீர்கள்.'' "மனமானது எந்த இடத்திற்குச் செல்ல முடியாமல் திரும்புகிறதோ, வாக்கினால் எந்த இடம் அடைய முடியாததோ (அவ்வித) பிரஹ்மத்தை அறிவதால் பயம் என்பது பறந்துவிடும்.'' இதுவே மாயா நிவர்த்தி. "பாப புண்ணியங்களும் சுக துக்கங்களும் என்னிடம் கிடையா. வேதங்களும், யாகங்களும், கர்மாக்களும் என்னிட மில்லை. நான் உணவுமல்ல, உண்ணும் செய்கையல்ல; உண்கின்றவனு மல்லன். சத் - சித் - ஆநந்த பரிபூர்த்தியான சொரூபமே நான்; சிவோகம்; சிவோகம்.'' ஹிப்னடிஸத்தைப்பற்றிய சர்வ விஷயமும் எங்களுக்குத் தெரியும். எங்களிடமுள்ள மனோ தத்துவ சாஸ்திரத்தைப்பற்றி மேனாட்டவர்கள் இப்போது தான் அறியத் தலைப்பட்டிருக்கிறார்கள். அதையும் ஒழுங் காக அறியவில்லையென்பதை நினைத்து வருத்தமுறுகின்றேன்.

(கே) ஆஸ்டிரல் சரீரமென்று எதைக் கூறுகிறீர்கள்?

(பதில்) நாங்கள் அதற்கு 'லிங்கசரீரம்' என்று பெயர் கொடுக்கிறோம். இந்தச் சரீரம் இறந்ததும் மற்றொரு சரீரத் தை எப்படிப் பற்றிக்கொள்கிறது? வஸ்துவின்றிச் சக்திகள் இருக்கா. ஆதலால், சூட்சும பூதங்கள் கொஞ்சம் தங்கிவிடு கின்றன. அதனின்றும் அந்தக்கரண இந்திரியங்கள் மற் றொரு சரீரத்தை உண்டுபண்ணுகின்றன. ஒவ்வொருவனும் தன் சரீரத்தைத் தானே செய்துகொள்கிறான். மனமானது சரீரத்தைச் செய்துவிடுகிறது. நான் ஒரு முனிவனானால் என் மூளையும் முனிவரது மூளையாகிறது. "ஒரு யோகியான வன் இந்தப் பிறவியிலேயே தன் சரீரத்தைத் தேவசரீரமாக் கிக்கொள்ள முடியும்'' என்று யோகிகள் கூறுகிறார்கள்.

இன்னம் பல அபூர்வமான விஷயங்களையும் யோகிகள் காண்பிக்கின்றார்கள். கொள்கைகளில் ஆயிரம் பவுண்டு வைத்திருப்பதைக் காட்டிலும் அனுபவத்தில் ஒரு அவுன்ஸ் இருந்தாலும் திறமானதுதான். ஆதலால், சில விஷயங்கள் நடைபெற்றதை நான் பார்க்கவில்லையென்ற காரணத்தால் அது தவறு என்றுசொல்ல எனக்குப் பாத்தியமில்லை. யோகிகளது புத்தகங்கள், “அப்பியாசம் செய்து பார்த்தால் மிகவும் அபூர்வமான அநேகவித பலன்கள் கிடைக்கும்” என்று கூறுகின்றன. ஒழுங்காக அப்பியாசம் செய்தால் சிறிது காலத்துக்குள் சிறிய பலன்கள் அடைய முடியும். அதில் யாதொன்றும் ஹம்பக் இல்லையென்று அறியலாம். போலி வேஷமொன்றுமில்லை. ஆத்ம சம்பந்தமான நூல்களிலெல்லாம் காணப்பட்டிருக்கும் அபூர்வமான விஷயங்களையெல்லாம் இந்த யோகிகள் (ஆராய்ச்சிசெய்யப்பட்ட) சாஸ்திர முறைப்படி விளக்குகிறார்கள். “ஒவ்வொரு தேச சமூகத்தாரிடமும் இவ்வித அமானுஷ காரியங்களின் குறிப்புகள் எப்படி நுழைந்தன?” என்பதுதான் கேள்வி. “அவைகளெல்லாம் பொய்யாதலால் அவற்றிற்குக் காரணம் கூறவேண்டாம்” என்கின்றவர்கள் யுக்திவாதிகளல்லர். அவற்றைப் பொய்யென்று ருஜுப்படுத்தும் வரையில் அவற்றை நீ மறுப்பதற்கு பாத்தியமுள்ளவனல்லன். அவற்றிற்கு ஆதாரம் கிடையாதென்று ருஜுப்படுத்த வேண்டும். அப்போதுதான் நீ எழுந்து நின்று அவற்றை மறுக்கலாம். ஆனல், நீ அப்படிச் செய்யவில்லை. யோகிகளோவென்றால் “அவை அமானுஷிகமானவைகளல்ல” என்கின்றார்கள். “இன்றைக்கும் அதே மாதிரி காரி

யங்கள் செய்ய முடியும்'' என்கின்றார்கள். நாளைக்கும் இந்தியாவில் பல அபூர்வமான காரியங்கள் நடைபெறுகின்றன. அவைகளில் ஒன்றும் அமானுஷிகத்தன்மை பெற்றதல்ல. அவ் விஷயத்தைப்பற்றிப் பல புத்தகங்கள் இருக்கின்றன. மனோ தத்துவ ஆராய்ச்சி செய்து சாஸ்திர விதிப்படுத்தியிருப்பதைவிட வேறெதுவும் நடைபெறவில்லையென்று வைத்துக் கொண்டாலும் அந்தப் பெருமையும் யோகிகளுக்கே உரியது.

(கே) யோகியானவன் எவ்வித நிலைமைகளைக் காட்ட முடியும் என்று உதாரணத்தால் விளக்குவீர்களா?

(பதில்) யோகியானவன் தன் சாஸ்திரத்திற்கு மற்ற சாஸ்திரங்களைக்காட்டிலும் அதிகமானபக்தியாவது நம்பிக்கையாவது வேண்டுமென்று கேட்கவில்லை. நேரே வந்து அப்பியாசம் செய்து பார்ப்பதற்கு வேண்டிய அளவு கௌரவமான பக்தி போதும். அவ்வளவு வரையில் பொறுமையான நம்பிக்கை போதும். யோகியினுடைய உயர்ந்த நோக்கம் மிக பயங்கரமானது. மனோ பலத்தால் செய்யக்கூடிய தாழ்ந்த காரியங்களை நான் நேரில் கண்டிருக்கிறேன். "ஆதலால், உயர்ந்த காரியங்களும் செய்ய முடியும்'' என்ற கொள்கையை என்னால் ஆட்சேபிக்க முடியாது. யோகியினுடைய உயர்ந்த நோக்கமே சர்வ ஞானத்தன்மையாலும் சர்வ சக்தித்தன்மையாலும் நித்தியமான சாந்தியையும் அன்பையும் அடைவதுதான். சர்ப்பம் கடித்தபடியால் கீழே விழுந்துவிட்ட யோகி ஒருவரை நான் அறிவேன். மாலையில் அவர் எழுந்துவிட்டார். அவருக்கு என்ன நேர்ந்ததென்று கேட்டதற்கு. அவர் கூறியது:—"என் அன்பரிட

மிருந்து ஒரு தூதன் வந்தான்." என்றார். இந்த மனிதனிடமிருந்து விரோதம், கோபம், பொறாமை என்ற குணங்களெல்லாம் எரிக்கப்பட்டுப் போயின. இவர் போன்றவரே உண்மையான யோகி யாவார். பலவித அபூர்வ காரியங்களைக் காட்டுவதெல்லாம் இடையில் தற்செயலாக நேரக்கூடியவை. அந்த நிலைமையை அவன் விரும்பவில்லை. "யோகியைத் தவிர மற்றவர்களெல்லோரும் அடிமைகள்" என்று யோகி கூறுகிறான். ஆகாரத்திற்கும், காற்றுக்கும், மனைவி மக்களுக்கும், பணத்திற்கும், தேச சமூகத்திற்கும், பெயருக்கும் பெருமைக்கும், இவ்வுலகத்திலுள்ள ஆயிர விஷயங்களுக்கும் அடிமைகளாகிறார்கள். இந்தப் பந்தங்களில் எந்த ஒன்றாலும் கூடக் கட்டுப்படாதவனே உண்மையான மனிதன்; உண்மையான யோகி அவனே. "இந்த அமைதி நிலையில் திடமாக நிற்கின்றவரே இந்த வாழ்க்கையில் சுவர்க்கத்தையும் ஜெயித்தவராவார். கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர்; பரிசுத்தம் பொருந்தியவர். ஆதலால், அப்படிப்பட்டவர்கள் கடவுளிடம் நிலைத்தவரெனப்படுவர்."

(கே) யோகிகள் ஜாதிபாவனை முக்கியமெனக் கூறுகிறார்களா?

(பதில்) இல்லை; ஜாதிக்கட்டு என்பது பக்குவ மடையாத மனதுகள் பழகுவதற்காக ஏற்பட்ட கல்விச்சாலையாகும்.

(கே) சமாதிநிலை (Super-consciousness) யாகிய இந்த நிலைக்கும், இந்தியா தேசத்து உஷ்ணத்திற்கும் சம்பந்தமில்லையா?

(பதில்) சம்பந்த மிருப்பதாக நான் நினைக்கவில்லை; ஏனெனில், இந்தத் தத்துவமெல்லாம் கடல் மட்டத்திற்கு பதினையாயிரம் அடிக்கு மேலே ஆர்க்டிக் பிரதேசத்திய குளிர்ச்சிக்குச் சமமான நிலையில் இருக்கும் ஹிமாசலத்தின்மேல் மனதினின்றும் வெளிப்பட்டவைகள்.

(கே) குளிர்ச்சி பொருந்திய தேசங்களில் அப்பியசித்தால் பலன்படுமோ?

(பதில்) அப்பியசிக்க முடியும்; இவ் வுலகத்தில் இது தான் அப்பியசிக்கத்தக்கது. "நீங்கள் ஒவ்வொருவரும் பிறப்பினலேயே வேதாந்திகள்" என்று நாங்கள் கூறுகிறோம். உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு வினடியிலும் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றினிடமும் உங்களுக்குள்ள ஒற்றுமையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். வெளியில் உங்கள் ஹிருதயம் செல்லும்போதெல்லாம் நீங்கள் உண்மையில் வேதாந்திகளே! நீங்கள் அறிவதில்லை; அவ்வளவுதான். காரணம் தெரியாமலே நீங்கள் நன்னெறியில் நிற்கின்றீர்கள். வேதாந்த தத்துவம் (மாத்திரமே) மனிதனுக்குத் தெளிவாக விளக்கி அவனை அறிவுடன் நன்னெறியில் நிற்கச் செய்கிறது. • எல்லா மதங்களின் சாரமும் அது.

(கே) நாங்கள் பலவிதமாகத் தொழும் வழக்கம் இருப்பதற்குக் காரணம் எங்களிடம் சமூக உணர்ச்சி கிடையாதென்று சொல்லக்கூடுமோ? கீழ்த் தேசத்து ஜனங்கள் எங்களைக்காட்டிலும் அனுதாபத்தால் சிறந்தவர்களா?

(பதில்) 'பிராணிகளிடத்தில் மேனுட்டவர் பொதுவாகக் குரூர சித்தர்கள்' என்றும், 'கீழ் நாட்டவர்கள் தயையுடை

யவர்கள்' என்றும் நான் நினைக்கிறேன். அதற்குக் காரணம் உங்களது நாகரிகம் முதிர்ச்சி யடையாததுதான்; சமீபத்திய காலத்தது ஆகையால்தான். தயை என்ற குணம் விர்த்தியாகக் காலம் பிடிக்கும். உங்களிடம் அளவற்ற அதிகாரம் இருக்கின்றது. அதிகார சக்தியுடன்கூட ஹிருதயப் பயிற்சியும் விர்த்தியாக்கப்படவில்லை. மனதை யடக்கும் சக்தி மிகக் கொஞ்சமாகக்கூட அப்பியசிக்கவில்லை யென்னலாம். உங்களைச் சாந்தமுள்ளவராகவும் நல்லோர்களாகவும் செய்யக் காலதாமதம் வேண்டும். இந்தியாவில் இந்த அனுதாப உணர்ச்சி ஒவ்வொருவருடைய இரத்தத்திலும் ஊறிக்கொண்டிருக்கின்றது. அங்கே கிராமங்களில் சென்று ஜனங்களுக்கு ராஜீய விஷயங்களைப் போதித்தால் அவர்களுக்குத் தெரியாது; வேதாந்தத்தைப் போதிக்கச் சென்றால் அவர்கள் "ஸ்வாமி! இப்போது நீங்கள் கூறுவது சரி" என்பார்கள், பற்றின்மையாகிய அவ்வித வைராக்கியம் நாளைக்கும் இந்தியாவெங்கும் இருக்கிறது. இப்போது எங்களிடம் மிகமிகக் குறைவுதான்; ஆனால், அரசர்களும் சிம்மாஸனத்தை விட்டுவிட்டு யாதொன்று மில்லாமலே தேச மெங்கும் திரிவார்கள்.

சில இடங்களில் நூல் நூற்கும் ராட்டிணத்தில் வேலை செய்யும் குக்கிராமப்பெண் கூறுவாள்: "என்னிடம் துவைத பாவனையைப்பற்றிப் பேசாதே! என் ராட்டிணம் கூட சிவோகம், சிவோகம் என்கின்றது." என்பாள். இவர்களிடம் சென்று கேளுங்கள்! "ஏன் இப்படிப் பேசிவிட்டுக் கற்சிலை முன் நமஸ்காரம்செய்கின்றீர்கள்?" என்றுகேட்டுப்பாருங்கள். அவர்கள் கூறும் பதில்:—"உங்களுக்கு மதமென்பதெல்லாம்

கொள்கைபளவேதான்; எங்களுக்கோ அனுபூதி நிலேயே மதம்," என்பார்கள். "நான் உண்மையைப் பார்த்த பிறகு, இவைக ளெல்லாம் மறைந்து போன பிறகு வேதாந்தியாவேன்" என்று ஒருவர் கூறுவார். "அதுவரைக்கும் எனக்கும் மூடனுக்கும் வித்தியாசமே கிடையாது; அதனல் இந்தக் கற்சிலேயை வணங்கியும், கோவிலுக்குச் சென்றும், அனுபூதி நிலேக்குவரப் பிரயத்தனம் செய்கிறேன்." என்பார். "பலவகையான வாதம், சாஸ்திரங்களேப் பலவிதமாகப் பொருள் படுத்தித் தர்க்கம் செய்தல்,—ஆகிய இவைக ளெல்லாம் புத்திமான்கள் அனுபவிப்பதற்காக உதவுமேயன்றி முக்திக்குச் சாதனங்க ளாகா." அனுபூதி நிலேமையே முக்தியைத் தருவது.

(கே) ஜனங்கள் அடையக்கூடிய இந்த ஆத்ம சம்பந்தமான சுதந்தர முக்திக்கும், ஜாதிக் கட்டுப்பாட்டைக் கவனிப்பதற்கும் சம்பந்தம் உண்டா?

பதில் [ஜாதிப்பிரிவினையைப்பற்றி ஸ்வாமிகள் கூறியிருக்கும் பதில் நிரம்பவும் கவனிக்கத்தக்கது.] (மத விஷயத்தில்) ஜாதி வித்தியாச பாவனே கூடாதென்று சொல்லுகிருர்கள். ஜாதி தர்மங்களுக்கு உட்பட்டிருப்பவர்கூட "அது ஒரு பூர்ணமான உதவியாகமாட்டாது" என்கின்றுர்கள். ஆதலால், இதைக்காட்டிலும் அதிக நன்மையைக் கொடுக்கக்கூடியதான வேறு சாதனங்கள் உண்டாக்க முடியுமானல் இந்த ஜாதிப் பிரிவினேயை விட்டுவிடுகிறேம். ஜாதிப் பிரிவினேயே இல்லாத இடம் எங்கிருக்கிறது? உங்கள் தேசத்தில்கூட நீங்கள் எப்போதும் ஜாதிப் பிரிவினேகளே உண்டாக்குவதிலேயே சக்தி

யைச் செலவிட்டுக்கொண்டிருக்கின்றீர்கள். ஒரு மனிதனுக்கு ஒரு பை நிறையப் பணம் கிடைத்துவிட்டால் "அந்த நானூறு பேர்களில் நானும் ஒருவன்" என்று சொல்லிக் கொள்கின்றான். ஒரு சாசுவதமான ஜாதிப் பிரிவினையை ஏற்பாடு செய்து கொண்டது நாங்கள் மாத்திரம்தான். இதர தேசத்தார்கள் பிரயத்தனம் செய்தும் பலிக்கவில்லை. எங்களிடம் மூட பக்திகளும் தீமைகளும் வேண்டியவரையில் இருக்கின்றன. உங்கள் தேசத்திலிருந்து மூட பக்திகளையும் தீமைகளையும் எடுத்துக்கொண்டால் காரியம் நிறைவேறிவிடுமா? இந்த ஜாதிப் பிரிவினை ஒழுங்காக இருப்பதால்தான் முப்பது கோடி ஜனங்களுக்கு இன்னமும் உண்பதற்குச் சாப்பாடு கிடைக்கிறது. இந்த ஜாதிப் பிரிவினையானது பரிபூர்ணமான ஏற்பாடு அல்ல என்பது உண்மைதான். ஆனால், இந்த ஏற்பாடு இல்லாமலிருந்தால் சமஸ்கிருத புத்தகங்களே இல்லாமற் போயிருக்கும். இந்த ஜாதிப் பிரிவினை என்னும் ஏற்பாடு தன்னைச் சுற்றிலும் மதில்களை எழுப்பிக் கொண்டது. அந்த மதில்களைச் சுற்றி விதம் விதமான படையெடுப்புகளெல்லாம் சூழ்ந்துகொண்டு முடிந்த வரையிலும் தாக்கியும் அவற்றால் மதில்களை உடைத்துச் செல்ல முடியவில்லை. அந்த அவசியம் இன்னமும் நீங்கவில்லை யாதலால் ஜாதிப் பிரிவினை என்பது இன்னமும் இருக்கிறது. இப்போது இருக்கும் பிரிவினையானது எழுநூறுவருஷங்களுக்கு முன்னால் இருந்ததைப் போன்றதல்ல. (அதைத் தாக்கிய) ஒவ்வொரு அடியும் அதன் உருவை மாற்றியிருக்கிறது. உலகத்திலேயே வெளி தேசங்களை ஜெயிக்காத தேசம் இந்தத்

தேசம் ஒன்றுதான் என்பதைத் தெரிந்துகொண்டீர்களா? "அசோகன் என்ற பெரிய சக்கிரவர்த்தியானவன் தன் பின் சந்ததியில்கூட எவனும் ஜெயிப்பதற்காக வெளிக் கிளம்பக் கூடா"தென்று அழுத்திச் சொன்னான். இதரர்கள் எங்களுக்கு ஆசாரியர்களை அனுப்பப் பிரியங்கொண்டால் உதவி செய்யட்டும். ஆனால், கெடுதல் செய்யாம லிருக்கவேண்டும். இவ்வளவு ஜனங்களும் ஏன் ஹிந்துக்களை ஜெயிக்கப் பிரியங் கொள்ளவேண்டும். அவர்கள் பிற சமூகங்களுக்கு என்ன கெடுதலைச் செய்துவிட்டார்கள்? அவர்களால் செய்ய முடிந்த சிறு நன்மைகளை உலகிற்குச் செய்திருக்கின்றார்கள். இதர தேசத்தார்களுக்கு சாஸ்திரங்களையும் தத்துவங்களையும் மதத்தையும் உபதேசஞ் செய்து நாகரீகமே கொஞ்சமும் இல்லாமல் திரிந்துகொண்டிருந்த காட்டுமிராண்டிக் கூட்டத்தார்களை நாகரீக மடையச்செய்திருக்கின்றார்கள். இதற்குப் பிரதியாக இவர்களுக்குக்கிடைத்திருப்பதைப் பாருங்கள்! கொலையும், கொடுமையும், 'நாகரீகமில்லா அயோக்கியர்கள்' என்று சொல்லப்படுவதும்தான். இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போகும் மேனாட்டு யாத்திரிகர்கள் இந்தியாவைப்பற்றி எழுதியிருக்கும் புத்தகங்களைப் படித்துப் பாருங்கள்! என்ன கஷ்டங்களை அவர்கள் இங்கு அடைந்துவிட்டு அதற்குப் பிரதியாக இவ்விதம் தூஷிக்கிறார்கள்?

நீங்கள் தத்துவ சாஸ்திரிகளாதலால் ஒரு பை பொன் இருப்பதால் மனிதர்களுக்குள் வித்தியாசம் ஏற்படுமென்று நினைக்கமாட்டீர்கள். இயந்திரங்களும் நூதன ஆராய்ச்சி சாஸ்திரங்களும் எவ்வளவு வரையில் பயன்படும்? அறிவைப் பர

வச்செய்கிற வரையில் உபயோகம், அவ்வளவுதான். தேவைகளே இல்லாமற் செய்ய முடியுமா; அவற்றைக் கூர்மையாக்கினீர்கள்; அவ்வளவே. யந்திரங்களால் வறுமை ஒழியாது; மனிதர்கள் அதிகமாகக் கஷ்டப்படும்படி செய்யும். போட்டி பலப்படும். ஒரு கம்பிவழியே மின்சாரத்தைச் செலுத்தக்கூடியவனுக்கு ஞாபகார்த்த அடையாளம் எதற்காக? பிரகிருதியிடம் இந்தச் சக்தி லட்சக்கணக்காக அதிகப்பட்டிருக்கவில்லையா? எல்லா சக்திகளும் பிரகிருதியில் அடங்கிக் கிடப்பவையல்லவா? அவற்றில் ஒன்றை நீ யடைவதால் பலனென்ன? ஏற்கனவே யிருந்த சக்தி வெளிப்படையாகி யிருக்கிறது. இந்த ஜகத்து முழுமையும் ஆத்மா பழகுவதற்காக ஏற்பட்ட கசரத்து பூமியேயாகும்! ஆதலால், ஒவ்வொன்றும் எவ்வளவு வரையில் கடவுளின் குணத்தைப்பிரகாசப்படுத்துகிறதென்று கண்டு மதிக்கப்படல்வேண்டும். மனிதனிட மிருக்கும் தெய்வத்தன்மை ஆவிர்ப்பவிக்குமாறு செய்வதே நாகரிக மாகும்.

(கே) பௌத்தர்களுக்கு ஜாதி சம்பந்தமான விதிகள் உண்டா?

(பதில்) பௌத்தர்களிடம் ஜாதிப்பற்று அதிகம் இருந்ததில்லை; இந்தியாவில் பௌத்தர்களே மிகச் சொல்பம். பௌத்தர்: சமூகச் சீர்திருத்தக்காரர். அப்படியிருந்தும் பௌத்த மதம் பரவிய தேசங்களில் ஜாதிப் பிரிவுகளை உண்டாக்கப் பிரயத்தனங்கள் நடைபெற்று வருவதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால், அவை பலன்படவில்லை. பௌத்தர்களு

டைய ஜாதியென்பது அனுஷ்டானத்தில் யாதொன்றுமில்லை. ஆனால், அவர்கள் மனதில் அதைப்பற்றிக் கர்வங் கொள்கிறார்கள். (இருப்பதாகவே நினைத்து.)

பௌத்தர்: வேதாந்த தத்துவத்திற்கண்ட சன்னியாசிகளில் ஒருவர். தற்காலம் உண்டாக்கப்படும் புதிய வகுப்புகளைப் போலவே அவரும் ஒரு புதிய உள்மத வகுப்பை ஸ்தாபித்தார். இப்போது பௌத்த மதம் என்ற பெயருடன் வழங்கும் கொள்கைகள் அவருக்குச் சொந்தமல்ல. அவைகள் (அவர் காலத்திற்கும்) முற்பட்டவைகள். அந்தக் கொள்கைகளுக்கு சர்வசக்தியு மளித்தவர் ஒரு மகா புருஷர். பௌத்த மதத்தின் விசேஷமானது சமூக சமத்துவத் தன்மை வாய்ந்திருப்பதுதான். பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களுமே எப்போதும் எங்களுக்குப் போதகர்கள். உபநிஷத்துக்களில் அநேகம் க்ஷத்திரியர்களால் எழுதப்பட்டவை. வேதங்களின் கர்ம காண்டங்கள் பிராஹ்மணர்களிடமிருந்து கிடைத்தவை. இந்தியா எங்கும் விளங்கிய பெரிய ஆசாரியர்கள் க்ஷத்திரியர்கள். அவர்கள் போதனைகளெல்லாம் உலகப் பொதுவானவை. பிராஹ்மண மகான்களில் இருவர் தவிர மற்றவர்கள் தனிப்பட்ட உபதேசங்களைச் செய்பவர்களா யிருந்திருக்கிறார்கள். கடவுளின் அவதாரங்களாகக் கொண்டாடப்படுகிற ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மன், பௌத்தர் முதலியோர் க்ஷத்திரியர்களே யாவார்.

ஒரு மனிதன் அனுபூதி நிலையை யடைந்தவுடன் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறான். பலவிதமான மதங்களும், கர்மாக்களும், புத்தகங்களும் அந்த நிலையை யடைவதற்குச்

சாதகமா யிருக்கும் வரையில் சரியானவைகளே. அந்த நோக்கத்தை நிறைவேற்றத் தவறினால் அவற்றை நாம் மாற்றிக்கொள்ள வேண்டியதுதான். "அறிவை அடைந்தவர் மூடனைக் கண்டு இகழக்கூடாது; மூடர்களுக்குச் சொந்தமான ஒருவித பக்தியையும் கெடுத்துவிடக் கூடாது. ஆனால், சரியானபடி அவர்களுக்கு வழி காட்டித் தான் நிற்கும் நிலைக்கு வழி தெரியச் செய்யவேண்டும்."

இந்த உண்மையான மனிதன் பிரஹ்ம ஸ்வரூபமே; வியஷ்டி நிலையானது மாயையால் ஏற்பட்டதே யாகும்; அது தோற்ற மாத்திரமேயாம். உண்மையில் அது எப்போதும் பிரஹ்ம ஸ்வரூபமே. உண்மையில் இருப்பது ஒன்றே; மாயையினால் அது பலவாகத் தோன்றுகிறது. மாயையில்தான் இந்த வித்தியாச பாவனைகளெல்லாம். இருந்தபோதிலும் மாயையில் கூட ஏகத்துவ நிலைக்குச் செல்லும் விருத்தி எப்போதும் இருந்து வருகிறது; எல்லா ஜன சமூகத்தவரது சன்மார்க்க தத்துவங்களைப் பாருங்கள்! ஜீவ பாவனையின் அமைப்பிற்கே அவசியமான நிலைமை அது. ஒற்றுமை பாவத்தையே நாடுகிறது. அப்படி ஒற்றுமையை நாடிச் செய்யும் பிரயத்தனங்களுக்கே சன்மார்க்க தத்துவம் என்று பெயர். ஆதலால், நாம் அவற்றை எப்போதும் அனுசரிக்கவேண்டும்.

(கே) வியஷ்டிகளின் சம்பந்தத்தைப் பொறுத்தே சன்மார்க்க தத்துவங்களின் ஏராளமான பாகம் இருக்கவில்லையா?

(பதில்) முழுப்பாகமும் அவ்வித சம்பந்தந்தான். ப்ரஹ்ம ஸ்வரூபம் மாயைக்குள் வந்துவிடாது.

(கே) தனி மனிதன் பிரஹ்ம ஸ்வரூபம் என்றீர்கள். தனி மனிதனுக்கு அறிவு என்பது உண்டோ என்று கேட்க லானேன்.

(பதில்) ஆவிர்ப்பவித்திருக்கும் நிலைமையே வியஷ்டி; இவ்வித வியஷ்டியின் பிரகாசமே அறிவுஎன்று சொல்லப் படுவது. ஆதலால், பிரஹ்மத்தை யறியும் தன்மைக்கு அறிவு என்ற பெயர் அவ்வளவு ஒழுங்கானதல்ல. ப்ரஹ்மம் என்பது இந்த வியஷ்டி அறிவுக்கெல்லாம் மேம்பட் டிருக்கிறது.

(கே) இதையும் அடக்கிக்கோண் டிருக்கிறதா?

(பதில்) ஆம்; பொன்னினுல் பலவகை நாணயங்கள் செய்யப்படுவதுபோல் இந்த நிலைமையும். இந்த நிலைமை பலவித அறிவுகளாக மாறிவிடுகின்றது. இது (சமாதி நிலைமை யாகிய) நனவிற்கு மேற்பட்ட நிலை. இந்த நிலையில் நனவு நிலையும் பிரக்ஞையற்ற நிலையும் அடங்கியிருக்கின்றன. அந்த நிலையில் எழும்பிய மனிதனிடம் நாம் கூறுகிற அறிவெல்லாம் அடங்கியிருக்கும். அவன், பிரக்ஞையோடும் கூடிய அறிவு அடையவேண்டுமானுல் ஒரு படி கீழிறங்கவேண்டும். அறிவு என்பது கீழ்ப்படியிலுள்ள நிலைதான். மாயையில்தான் அறிவை நாம் அடைய முடியும்.

நாமாவளி 1-ம்-அஷ்டோத்திர சதநாமாவளி 10-ம் அடங் கியது சமஸ்கிருத உச்சரிப்புடன் பாக்கெட் அளவு விலை அணு 8.

## ஹார்வார்ட் கலாசாலை மாணாக்கர்கள் கேட்டதற்கு ஸ்வாமிகள் அளித்த விடைகள்.

என்னைப்பற்றியவரையில் வேதங்களில் பகுத்தறிவிற்கு ஒத்தவரையில்தான் நான் ஒப்புக்கொள்வேன். வேதங்களில் சில பாகங்கள் முரண்படுவன போலத் தோன்றுகின்றன. மேனாட்டார் கூறுவது போன்ற பொருளில் அருள் பெற்ற வாக்குகளல்ல; ஆனால், கடவுளைப்பற்றிய அறிவின் சமஷ்டியேயாம்; சர்வ ஞானத்தையும் அடக்கியிருப்பவை. இந்த அறிவு அல்லது ஞானம் ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலும் வெளிவந்து ஆவிர்ப்பவிக்கிறது. கல்பாந்த காலத்தில் சூட்சுமமான நிலைக்குப் போய்விடுகிறது. மறுபடியும் மற்றொரு கல்பம் வெளியாகும்போது இதுவும் வெளிக்கிளம்புகிறது. அதுவரையில் கொள்கை ஒழுங்கானதுதான். ஆனால், "வேதங்கள் என்று சொல்லப்படும் இந்தப் புத்தகங்களில் மாத்திரமே இந்த அறிவு நிரம்பியிருக்கிறது" என்று கூறுவது தப்புக் கட்சி. "வேதங்களில் பகுத்தறிவிற்கு ஒத்ததாக இருக்கும் பாகம் மாத்திரமே வேதங்கள்" என்றும், "மற்றவை யல்ல" என்றும் ஓரிடத்தில் மனுவே கூறியிருக்கிறார். எங்கள் தேசத்தில் பல தத்துவ சாஸ்திரிகள் இவ்விதமே அபிப்பிராயப்படுகிறார்கள்.

*  *  *  *

அத்வைத தத்துவத்திற்குள்ள ஆட்சேபனைகளெல்லாம் இவ்வளவுதான்; அது இந்திரியானுபவ சுகங்களைத் தரவில்லையென்று சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்கிறோம்.

* * * *

(1) வேதாந்த தத்துவமானது பயக்கரமான நம்பிக்கை யற்ற நிலைமையில் ஆரம்பித்து உண்மையான நம்பிக்கையில் போய்முடிகிறது. நாங்கள் இந்திரியங்களிடமுள்ள நம்பிக்கை யை மறுத்து விட்டு இந்திரியங்களுக்கு மேற்பட்ட நிலைமையி லுள்ள உண்மையான நம்பிக்கையை ஸ்தாபிக்கிறோம். அந்த உண்மையான சுகம் இந்திரியங்களுக்கு மேற்பட்ட நிலைமையி லுள்ளதே யொழிய இந்திரியங்களில் இல்லை. ஒவ்வொரு மனிதரிடமும் அது இருக்கிறது. உலகத்தில் சாதாரணமாக ஜனங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் நிலைமைகளெல்லாம் இந் திரியங்களின் மூலமாய் அழிவிற்கே கொண்டு செல்லும். சக லத்தையும் துறந்துவிட வேண்டுமென்ற கருத்தையே எங்கள் தத்துவ சாஸ்திரங்க ளெல்லாம் அழுத்திச் சொல்கின்றன. இவ்விதம் மறுத்துச் செல்வதெல்லாம் உண்மையான ஆத் மனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத்தான். இந்திரிய விவகாரங்களின் சம்பந்தமான உலகத்தை மறுத்து அத னிடம் நம்பிக்கையே இல்லாதபடி செய்தாலும் உண்மையான உலகத்தைப்பற்றிய விஷயங்களை ஸ்தாபித்துத் தைரிய மடை யச் செய்கிறது.

(2) "வேதங்களைப்படிப்பதுகூட இரண்டாம் பட்சம்" என்று வேதங்களிலேயே சொல்லப்பட் டிருக்கிறது. இந்தக் கருத்து இதர மத புத்தகங்களில் கிடையவே கிடையாது. வேதங்க ளில் மாத்திரமே உள்ளது. மாறாத் தன்மையை நாம் அடை யும்படி செய்வது எதுவோ அதுவே உண்மையான வித்தை. அது படிப்பதிலாவது, நம்பிக்கையிலாவது, பகுத்தறிவி

லாவது கிடையாது. ஆனால், விழித்துக்கொண்டிருக்கும் நிலைமையைக்காட்டிலும் மேலான நிலைமையாகிய சமாதி நிலைமைக்குக் கிளம்புவதிலேதானுள்ளது.

* * * *

(3) ஜீவாத்மா என்பது சுற்றளவே இல்லாத ஒரு வட்டம். அதன் மையம் ஏதேனும் ஒரு சரீரத்தி லுள்ளது. மரண மென்பது இந்த மையம் மாறுவதுதான். கடவுள் என்பது சுற்றளவே யில்லாத ஒரு வட்டம். ஆனால், அதன் மையம் ஒவ்வொரு இடமும் சரீரங்களைப்பற்றிய மையத்தினின்று நாம் விலகிப்போனால் உண்மையான ஆத்மாவாகிய கடவுளின் அனுபவம் நமக்குக் கிடைக்கும். ஒவ்வொரு (ஜீவ) ஆத்மா விடமும் தெய்வத்தன்மையானது அந்தர்க்கதமாயிருக்கிறது. வெளிப் பிரகிருதி, அந்தர்ப்பிரகிருதி ஆகிய இரண்டையும் ஜெயித்து அடக்கி அந்தத் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே முடிவு. கர்மா, பக்தி, மனதின் பிரவிர்த்திகளை அடக்குதல், (உண்மையான ஞானத்தை உண்டாக்கவல்ல) தத்துவம் ஆகிய இவைகளில் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றைக்கொண்டு மேலே சொல்லிய காரியத்தைச் செய்து முடித்துச் சுதந்திர மடைவாயாக! மதமென்று சொல்வதெல்லாம் இவ்வளவுதான். மற்றப்படி கொள்கைகளும், விதிகளும், கர்மாக்களும், புஸ்தகங்களும், கோவில்களும், இன்னம் பலவித அமைப்புகளும் ஆகிய இவை எல்லாம் கீழ்ப்படியாக வுள்ள விவரங்கள் மாத்திரமேயாம்.

* * * *

உண்மையான ஞானி ஒன்றையும் அழிக்காமல் எல்லா (உள்) மதங்களுக்கும் உதவி புரிகிறான். எல்லா நதிகளும் தம் ஜலத்தை யெல்லாம் சமுத்திரத்தில் சேர்ப்பித்து ஒன்றுக்குவது போலவே, எல்லா மதங்களும் ஞானத்திற்கு வழி காட்டி, அங்கு போய் ஒன்றுசேரல் வேண்டும். ஞானமென்பது உலகத்தையே ஒழித்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை; பற்றில்லாம லிருக்கவேண்டு மென்கிறது. இந்த உலகத்திலேயே வசித்து அதற்குச் சொந்த மாகாமல் இருப்பதே உண்மையான பற்றின்மைக்குச் சரியான ருஜுவாகும்.

"ஒரு மனிதன் பிறக்கவு மில்லை, இறக்கவு மில்லை, சுவர்க்கத்தை யடையவுமில்லை" என்றும், ஆத்மாவைப்பற்றிய வரையில் புனர் ஜனனம் என்பதெல்லாம் கட்டுக்கதைதான்" என்றும் வேதாந்தி சொல்கிறான். ஒரு புஸ்தகத்தைப் புரட்டுவது போல என்று உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. புஸ்தகத்திலுள்ள ஏடுகள் திருப்பப்படுகின்றனவே யன்றி மனிதன் திருப்பப்படவில்லை. ஒவ்வொரு ஆத்மாவும் எங்கும் நிறைந்ததுதான். ஆதலால், அது வரவும் போகவும் இடமே கிடையாது. இந்தப் பிறப்புஇறப்புகளெல்லாம் பிரகிருதி சம்மந்தமான மாறுதல்களே யாகும். அவற்றை நாம் நம்மிடமுள்ளனவாகத் தவறுதலாய் நினைத்துக் கொள்கிறோம். பிரகிருதியி லுண்டாகும் மாறுதலுக்கும் உள்ளேயிருக்கும் கடவுள் வெளிப்படுவதற்கும் புனர் ஜனனம் என்று பெயராம். "முன் செய்த (கர்மாக்களுக்குத்) தகுந்தபடி ஒவ்வொரு ஜீவனுக்கும் இப் பதவி அமைக்கப்படுகிறது" என்றும் "அந்த முழுச் செய்கைகளின் சொரூபத்தை யெல்லாம் முழுமையும்

அறிய முடியும்போது நாம் சுதந்திர மடைகிறோம்" என்றும் வேதாந்தம் சொல்லுகிறது. இந்தச் சுதந்திரம்(ஆகிய முக்தி) அடைய வேண்டுமென்ற விருப்பமானது குழந்தைப் பருவ முதல்மதப்பற்று என்ற தன்மையாக அமையும். சில வருஷங்களே போதும்; ஒருவனுக்கு எல்லா உண்மைகளும் விளங்கி விடும். இவ் வாழ்க்கையை விட்டு மற்றொரு வாழ்க்கைக்காகக் காத்திருக்கும்போதும் ஒரு மனிதன் மாறக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறான்.

(4) முக்தியடைய வேண்டுமென்றஆசையால் தூண்டப்பட்டு நாம் போராட வேண்டும். சுதந்திரம் (முக்தி) அடைய வேண்டு மென்ற ஆசையைத் தவிர இதர ஆசைகளெல்லாம் மாயையை அதிகரிக்கச் செய்யும். ஒவ்வொரு நல்ல செய்கையும் அந்தச் சுதந்திரத்தின் ஆவிர்ப்பவம் என்று வேதாந்தம் சொல்லுகிறது. உலகத்திலுள்ள தீமைகளெல்லாம் முழுமையும் நீங்கிவிடக் கூடிய காலம் வருமென்று நான் நம்பவில்லை. அது எப்படி வரும்? நதியானது ஓடிக்கொண்டேயிருக்கிறது. ஒரு பக்கம் வெள்ளம் போய்க்கொண்டேயிருந்தாலும் மற்றொரு பக்கமாக வேறு வெள்ளம் வந்துகொண்டேயிருக்கிறதல்லவா? வேதாந்தம் சொல்வது யாதெனில், நீ உண்மையில் பரிபூரணத் தன்மையும் பரிசுத்தமும் நிறைந்தவன்; நன்மை தீமை என்னுமிரண்டிற்கும் மேற்பட்ட நிலைமை ஒன்றிருக்கிறது; அந்த நிலைமையே உன்னுடைய உண்மைச் சுபாவம். அது நன்மையைக் காட்டிலும் மேலானது. ஏனெனில், நன்மை என்பதும் வித்தியாச பாவனைதான். [தீமை என்பது வித்தியாச பாவனையை அதிகப்படுத்துவது.]

நன்மை என்பது அவ்வளவு அதிகமான வித்தியாச பாவனை யுடையதல்ல. தீமை என்பதைப்பற்றித் தனியான தத்துவம் எங்களிட மில்லை. அதை அறிவின்மையென்றுசொல்லுகிறோம்.

* * * *

(5) நமக்கு ஞாபகமிருக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. இந்திரியங்களால் அறியக்கூடிய உலகத்தைப்பற்றிய வரை யில் இந்த உறுதி செய்தல் முடியாது. இந்திரிய விவகாரங் களைப்பற்றிய உலகத்தில் உங்களைக் கடவுள் என்று சொன் னல் நீங்கள் ஏன் கெட்ட காரியங்களைச் செய்தல் கூடாது? ஆதலால், 'நீங்கள் கடவுள்' என்று சொல்லும் உறுதிமொழி யானது மாறாந் தன்மையை அடையாத நிலைமையைப்பற்றிய விஷயம் தான். நான் கடவுளானல் இந்திரியங்களின் பிர விர்த்திகளினின்றும் வெளிப்பட்டவ ளுகிவிடுவேன்; ஆத லால், கெட்ட காரியங்களைச் செய்யமாட்டேன். சன்மார்கக மே மனிதனுடைய நோக்கமல்ல; ஆனல், மனிதனுடைய நோக்கமாகிய இந்தச் சுதந்திரம் (முக்தி நிலைமை) யடைவ தற்குரிய மார்க்கமேயாம். "மனிதர்கள் தெய்வத்தன்மை யடைவதற்குயோகமும்ஒரு வழி"என்றுவேதாந்தம் சொல்லு கிறது. இந்த வழியினல் நமக்குள் (ஏற்கெனவே) இருக்கும் சுதந்திரத் தன்மையை அடைகிறோம். அப்போது ஒவ் வொன்றும் ஜெயிக்கப்படும். நன்னடக்கை, சன்மார்க்க சாஸ்திரம் ஆகிய எல்லாம் தத்தமக்குரிய இடங்களைத் தாமே தேடிக்கொள்ளும்.

நாம் படும் பிரயத்தனங்களுக் கெல்லாம் வேதாந்தத்தில் இடமுண்டு. ஆனல், பயமென்பது அங்கே கிடையாது.

உன்னுடைய உண்மைச் சுபாவத்தை நீ உறுதிப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தால் பயங்களெல்லாம் ஓடிப்போய்விடும். நீ கட்டுப்பட்டவனுக நினைத்துக்கொண்டால் சுதந்திரமடை வாய். மாறுந் தன்மையையுடைய பிரபஞ்சத்தில் இருக்கும் போதே நாம் உணரக்கூடிய ஒருவித சுதந்திரமானது உண் மையான சுதந்திரத்தின் சாயையே யொழிய உண்மையல்ல?

(6) நாங்களும் சில விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஒரு அமைப்பை உண்டாக்கியிருக்கிறோம். ஆனால், அது பரிபூரண மான தல்லவென்று ஒப்புக்கொள்ளல் வேண்டும். ஏனெனில், (பரிபூரணமான) உண்மைப் பொருள் சகல அமைப்புகளுக் கும் மேற்பட்டதா யிருக்க வேண்டும். இதர தேசத்தார்கள் ஏற்படுத்தி யிருக்கும் ஸ்தாபனங்களைக் காட்டிலும் எங்களு டைய ஏற்பாடே புத்தி யூகத்திற்குத் தகுந்ததா யிருக்கிற தென்று எடுத்துக் காட்டத் தயாரா யிருக்கிறோம். ஆனால், இதுவும் பூர்ணமான தல்ல. ஏனெனில், புத்தி, அல்லது அறிவு என்பது பூரணமானதல்ல. ஆனபோதிலும் மனிதரது புத்தியினால் நினைக்கக்கூடிய ஏற்பாடுகளுக்குள் இதுவே சிறந்தது.

நமது மனதில் உண்டாகும் எண்ணங்களை யெல்லாம் நிறுத்த முடியுமானால் அப்போது நாம் (உண்மையில்) எண் ணங்களுக்கெல்லாம் (அல்லது மனோ பலத்தைக்காட்டிலும்) மேலானவர்களென்பது தெரிய வரும். (இதுவல்ல, இது வல்லவென்று) மறுத்துச் செல்லும் மார்க்கத்தினால் இதை யடையலாம். மாறக்கூடியதாயிருக்கும் ஒவ்வொரு நிலை மையையும் 'இதுவல்ல, இதுவல்ல' என்று தள்ளிக்கொண்

டே போனால் மிகுதியாக நிற்கும் நிலைமை எதுவோ அதுவே அது. அதைச் சொல்லுதலும் முடியாது; உருவாக்குதலும் முடியாது. ஏனெனில், உருவாக்கல் என்றபோதே மனதின் பலம் உண்டாகிவிடுகிறது.

* * * *

(8) வேதாந்தத்திற்குப்பௌத்த மதத்தோடு சண்டை கிடையாது. சகலத்தையும் சமரஸப்படுததுவதே வேதாந்தத்தின்நோக்கம். வடதேசங்களின் பௌத்தர்களுடன் எங்களுக்குச் சண்டையே கிடையாது. ஆனால், பர்மா, சயாம் முதலிய தென்தேச பௌத்தர்கள் "மாறுந்தன்மையுடைய உலகம் இருக்கிறது" என்று சொல்வதோடு நிற்காமல், "இதற்குப்பின்னால் மாறுந்தன்மை யடையாத உலகத்தை நாங்கள் உண்டாக்குவதற்கு என்ன நியாயம்" என்று கேட்கிறார்கள். 'இப்படிச் சொல்வது தவறு' என்று வேதாந்தம் சொல்லுகிறது. மாறுந்தன்மையை உடைய உலகம் வேறாகவும் மாறுந்தன்மை யில்லாத உலகம்வேறாகவும் ஆக இரண்டுவித உலகம் இருக்கிறதென்று வேதாந்தம் ஒருபோதும் சொல்லவில்லை. இருப்பது ஒன்றுதான். இந்திரியங்களின் (விர்த்திகளின்) மூலமாகப் பார்க்கப்படும்போது மாறுந்தன்மையுடையதாகத் தோன்றுகிறது ஆனால், உண்மையில் எப்போதும் அது மாறாத்தன்மையுடைய உலகம்தான். பழுதையைப் பார்த்தபிறகு ஒருவனும் பாம்பைப் பார்ப்பதில்லை; பழுதையாகவோ, அல்லது பாம்பாகவோ பார்க்கிறானே யொழிய இரண்டுவிதமாகவும் ஒருபோதும் பார்க்கவில்லை. ஆதலால், நாங்கள் இரண்டுவித உலகங்களை நம்புகிறவர்களென்று பௌத்தர்கள் சொல்வது

பொய்யான வார்த்தையேயாகும். "இது மாறுந் தன்மையை யுடைய உலகம்" என்று அவர்கள் சொல்லிக்கொண்டால் சொல்லட்டும். ஆனால், "வேறு எவரும் இது மாறுந்தன்மை யையுடையது என்று சொல்லல்கூடாது" என்று தடுக்க அவர் களுக்குப் பாத்தியமில்லை.

* * * *

(9) [மனதில் உதிக்கும் எண்ணங்கள் அல்லது ஆவல்க ளால் மனோபலம் ஏற்படுகிறது. இங்குக் கூறப்படும் விஷயங்க ளைப் பற்றியவரையில் ஆவல், எண்ணம், மனோபலம் ஆகிய மூன்றுக்கும் அதிக வித்தியாச மில்லை யென்பது தெரிந்து கொள்ளல்வேண்டும்.] பௌத்த மதத்திற்குஇந்த மாறுந்தன் மையையுடைய நிலைமைகளைக் காட்டிலும் வேறெதுவும் தேவையில்லை. இந்த மாறுந்தன்மையில் மாத்திரந்தான் ஆவல் (ஆசை) என்பது இருக்கிறது. இந்த ஆவல்களே சக லத்தையும் சிருஷ்டி செய்துகொண்டிருக்கிற தென்பது (அவர்களுடைய கொள்கை). மனோபலமாக மாறுதலை யடை ந்த ஏதோ ஒன்று இருக்கிறதென்று நாங்கள் சொல்கிறோம். மனோபலம் என்பது உண்டாக்கப்பட்ட ஒரு பதார்த்தம். தனிமையிலுள்ள தல்ல. வெளியில் ஒரு பொருள் இல்லாமல் மனோபலம் இருக்க முடியாது. ஆதலால், இந்த மனோபலமே ஜகத்தைச் சிருஷ்டித்திருக்கிற தென்று சொல்லல் முடியாது என நமக்குத் தெரிகிறது. வெளியிலிருந்து தூண்டுதல் இல் லாமல் மனோ சக்தியை மாத்திரம் தனியே அறிந்திருக்கிறாயா? தூண்டப்படாமல் ஆவல் எழும்பாது. மூளையிலிருந்து திருப் பப்படும் சக்தியே மனோபலம். அதற்குச்சாங்கிய தத்துவத்தில்

கூறுகிறபடி புத்தி என்று பெயர். திருப்பப்படும் சக்தி என்று சொல்லும்போதே ஒரு சக்தி வந்திருக்க வேண்டுமென்று தோன்கிறது. இதற்கு வெளியில் ஏற்கெனவே ஒன்று, அதாவது வெளிப்பிரபஞ்சம் இருந்திருக்கவேண்டும். வெளிப்பிரபஞ்சம் இல்லாமற்போனால் மனோபலமும் இல்லாமற்போகிறது. இது சுபாவமல்லவா? இப்படியிருக்க நீங்கள் மனோபலமே ஜகத்தை சிருஷ்டித்தது" என்கிறீர்கள். மனோபலத்தை சிருஷ்டிப்பது யார்? அது வெளிப் பிரபஞ்ச மின்றி (தனியே) இருக்கவில்லை. வெளிப் பிரபஞ்சத்திற்குக் காரணம் எதுவே. அந்தக் காரணத்திற்கே மனோபலமும் ஒரு காரியமா யிருக்கிறது. ஆனால், தத்துவம் அங்கே நின்றுவிடல் கூடாது. மனோபல முழுமையும் குணசம்பந்த முள்ளதா யிருக்கிறது. மனோபலம் என்பது வெளிப்பொருள், அந்தக்கரணம் என்ற இரண்டினாலும் ஆக்கப்பட்டதாக இருக்கிறது. [மனோபலத்திற்கு ஜர்மன் தத்துவசாஸ்திரி ஷோபன்ஹீர் கூறும் நியாயத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியவில்லை.] இந்திரியங்களே இல்லாமல் ஒருவன் பிறப்பானானால் அவனிடம் மனோபலமே இல்லாமலிருக்கும். மனோபலம் ஏற்படுவதற்கு வெளியிலிருந்தும் கொஞ்சம் வரவேண்டும்; பிறகு மூளையானது உள்ளேயிருந்து கொஞ்சம் சக்தி எடுத்துக் கொள்கிறது. ஆதலால், இரண்டும் கலந்து உண்டான வஸ்துவாக இருக்கிறது. இந்த மனோபலமே மாறுந்தன்மையுடையது; ஆதலால், அகண்டமாக இருக்க முடியாது. சிருஷ்டிக்கப்பட்டவைகளுள் இதுவும் ஒன்று. இந்த மனோபலமா யிராமலும், ஆனால், இந்த மனோபலமாக ஆவிர்ப்பவிக்

கக் கூடியதாகவும் இருக்கும் ஏதோ ஒன்றுஇருக்கிறது. இவ் விதம் என்னல் அறிய முடிகிறது. ஆனல், மனேபலமே சகல வஸ்துக்களாகவும் ஆவிர்ப்பவித்திருக்கிற தென்பதை என்னல் அறிய முடியவில்லை. ஏனெனில், இந்த ஜகத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக மனேபலம் நினைத்துக் கொள்ள முடியாதபடி யிருக்கிறது. அந்தச் சுதந்திர சக்தி மனே பலமாக ஆகும்போது தேசகால நிமித்தங்களால் உண்டா கிறது. ஆதலால், மனேபலம் தேசகால நிமித்தங்களுக்கு உள்பட்டது. ஆதலால், அதுபிரஹ்மமாயிருத்தல் முடியாது.

* * * *

(10)பிரஹ்மம் ஒன்றே சத்தியவஸ்து என்றுஇந்திரியங் களின்மூலமாகக் கிரகிக்கும்படி செய்வதுமுடியாது. இதைத் தவிர வேறு விதமான முடிவு கிடையாது என்று காட்டிவிட லாம்......இருப்பு என்ற பொதுத்தன்மை சாமான்ய வஸ் துக்களிலும் இருக்கிற தென்று விளங்குகிறது. மனிதர் கூறும் பொது விதியை எடுத்துக்கொள்வோம். "நானுத்துவ மெல்லாம் நாமரூபங்களால் ஆகியவை" என்று சொல்கிறேம். ஆனல், அவற்றை ஆராய்ந்து பிரிக்கப் பார்த்தால் ஒன்றை யும் காணேம்.நாமம், ரூபம், காரணங்கள் எல்லாவற்றையும் தனித்தனி அறிதல் முடியாது. ஆதலால், இந்தத்தோற்ற மெ ல்லாம் மாயை; மாருத் தன்மையைப் பற்றி யிருக்கும் ஏதோ ஒன்று; அதை விட்டுத் தனியே இருப்பில்லாதது. சமுத் திரத்தில் ஒரு சிறிது ஜலம் அலைரூபமாக இருக்கும் போது அலை என்கிறேம். அலை அடங்கிச் சமுத்திரமானல் அலையைக் காணேம். ஆனல், கடல் ஜலத்தில் சமஷ்டி(தொ

குதி முழுமையும்) யானது ரூபத்தைப் பொறுத்ததல்ல. சமுத்திரம் அப்படியேதா னிருக்கிறது. அலை ரூபம் நீங்கினால் என்ன பாதகம்.

*   *   *   *

(11) மனதே பதார்த்தங்களை அறியக்கூடிய விதமாகச் செய்கிறது" என்று காட்டல் முடியும். குணங்களையுடைய பொருள்கள் மாத்திரமே அறியக்கூடிய நிலைமைக்கு வந்து சேரும். குணங்களே யில்லாத வஸ்து அறிய முடியாத நிலையிலுள்ளது. உதாரணம் கூறுவோம். வெளியில் அறியமுடியாத நிலையில் ஒரு பிரபஞ்சம் இருக்கிறது. அதை நான் பார்க்கும்போது அந்த உண்மை யுலகமும் என் மனதும் கலந்ததாகவே இருக்கிறது. உலகத்தை அறிவதற்கு நான் விரும்பும்போது அதன் முக்கால் பாகமும் என் மனதிலிருந்தே விளங்குகிறது. (மனதில்லாமல் உண்மையில் அறிவே கிடையாது.) இதே மாதிரி அறிய முடியாத ஏதோ ஒன்றும் மனதும் சேர்ந்தே மனிதனுக்குள் இருக்கும் பிரபஞ்சம் (அந்தப்பிரகிருதி) அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வெளிப் பிரபஞ்சத்திலோ, அல்லதுஉள் பிரபஞ்சத்திலோ காணப்படுகிற வித்தியாச பாவனைகளும் (அதனால் ஏற்படக்கூடிய அறிவு என்பதும்) மனதினாலேயே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் இருக்கும்வஸ்து அறியப்படாமலும் அறியக்கூடிய நிலைமையில்லாமலு மிருக்கிறது. அறிவின் விஸ்தீரணத்திற்கு வெளியில் இருக்கும் வஸ்துவில் வித்தியாச பாவனைகளே இருக்க முடியாது. (ஏனெனில் வித்தியாச பாவனைகளின் இருப்பே அறிவிற்குக் காரணம்) ஆதலால், அறிய முடியாத நிலைமை

யில் இருக்கும் வெளிப் பிரபஞ்சமும் உள் பிரபஞ்சமாகிய அந்தப் பிரகிருதியும் ஒன்றுதான். ஆதலால், உண்மைப் பொருள் ஒன்றுதான்.

மாயையின்மூலமாய்ப்பார்க்கப்படும் நிர்க்குணப் பிரஹ்மமே சகுணப் பிரஹ்மமாக இருக்கிறது. பஞ்சேந்திரியங்களின் மூலமாகக் கடவுளை நெருங்கும்போது சகுணப் பிரஹ்மமாகத்தான் பார்க்க முடியும். அதாவது, என்ன அபிப்பிராயமெனில்,நம்மைநாமே வேறுபொருளாகச்செய்துபார்த்துக்கொள்ளமுடியாது. அறிகிற கர்த்தா தன்னையே எப்படி அறிய முடியும்? தன்னுடைய நிழலை வேறு பொருளாகச் சொல்ல முடியுமானல் அப்படிப்பட்ட ஒரு நிழல் அல்லது சாயை உண்டாக்கிக்கொள்ள முடியும். இப்படித் தன்னை (ஆத்மாவை)யே வேறு பொருளாகச் செய்து பார்க்கப் பிரயத்தனம் செய்த தன் பலனை உண்டாகிய சாயையின் உயர்ந்த உருவம் **சகுணப் பிரஹ்மம்**. (கடவுள் என்று இதற்குத்தான் பெயர்.) நித்தியமாக உள்ள வஸ்து ஆத்மா. நாம் எப்போதும் அந்த ஆத்மாவைப் பிரத்தியேகமான பொருளாகச் செய்யப் பிரயத்தனப் பட்டுக்கொண்டே யிருக்கிறோம். இந்தப் பிரயத்தனங்களின் பலனை மாறும் தன்மையையுடைய இந்த ஜகத்தும் ஜடப்பொருள் முதலியவைகளும் உண்டாகி யிருக்கின்றன. ஆனல், இவைகளெல்லாம் மிகப் பலஹீனமான பிரயத்தனங்கள். நமது பிரயத்தனங்களின் பலன்களுக்குள் மிகவும் உயர்ந்த வஸ்து சகுணப் பிரஹ்மம். இப்படிப் பிரத்தியேகப் பொருளாகச் செய்யப் பிரயத்தனம் செய்வது எதற்காக வெனில், நம்முடைய பாவத்தை வெளிப்படுத்துவதற்காகத்

தான் சாங்கிய தத்துவப்படி, பிரகிருதியே ஆத்மாவிற்கு இவ்வித அனுபவங்களைக் காண்பிக்கின்றது. அந்த ஆத்மாவானது உண்மையான அனுபவத்தையடைந்தால் தன் சுபாவத்தை யறிந்து கொள்ளும். அத்வைத வேதாந்திகள் பின் வருமாறுசொல்லுகிறார்கள்:—'ஆத்மாவே தன்னை வெளிப்படுத்திக்கொள்ளப்பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறது. இப்படி நீண்ட காலம் பிரயத்தனம் செய்த பிறகு தான் எப்போதும் தானாகவே நிற்க வேண்டிய அவசியத்தைத் தெரிந்து கொள்ளுகிறது; பிறகு பற்றின்மை ஏற்பட்டுச் சுதந்திரத்தன்மையடைகிறது.

* * * *

மனதில் உதிக்கும் தோற்றங்களில் சில தோற்றங்கள் இதரத்தோற்றங்களால் ஏற்படும் பந்தத்தை நிவர்த்தி செய்ய உதவுகின்றன. இந்த ஜகத் முழுவதுமே தோற்றம்தான். ஆனால், இந்தத் தோற்றங்களின் ஒரு பகுதி மற்றப்பகுதியை நிவர்த்தி செய்யும். இந்த உலகத்தில் பாவம், துக்கம், மரணம் முதலியவை இருப்பதாகத் தெரிவிக்கும் தோற்றங்கள் பயங்கரமானவை. ஆனால், நீ தெய்வத்தன்மை பொருந்தியவன், கடவுள் உண்டு, வருத்தம் என்பதே கிடையாது என்று தெரிவிக்கும் தோற்றங்களெல்லாம் இதரத் தோற்றங்களின் பந்தத்தை நிவர்த்தி செய்ய உதவுவதால் அவை நல்லவை. பந்த நிலைக்கே காரணமாகிய சங்கிலி முழுமையும் தகர்க்க வல்ல பலம் பொருந்திய உன்னதமான தோற்றமே சகுணப் பிரஹ்மம்.

அடிக்கடி நாம் சில சமயங்களில் பேரின்பத்தை அறிகிறோம். அப்போது நாம் யாதொன்றையும் கேட்கவுமில்லை, கொடுக்கவு மில்லை. ஆநந்தத்தைத் தவிர வேறொன்றையும் அறியவில்லை. பிறகு அது போய்விடுகிறது. அப்போது இந்த ஜகத்தின் வரிசையான தோற்றங்க ளெல்லாம் நம்முன்பு நாம் பார்க்கிறோம். அப்போது இவ்வளவும் சகலத்திற்கும் அஸ்திவாரமாக இருக்கும் கடவுளிடம் அமைக்கப்பட்ட சித்திர வேலைகளே என்பதை அறிகிறோம். 'நிர்வாண நிலைமையை இவ்விடத்திலேயே இப்போதே அடைய முடியும்' என்று வேதாந்தம் தெரிவிக்கிறது. அதற்காக மரணம் வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. தன்னைத்தான் அனுபவிப்பதே நிர்வாணநிலை. அதை ஒரு தடவை, ஒரு வினாடிமாத்திரம் யறிந்தாலும் போதும், அறிந்துவிட்ட பிறகு ஒருவனும் கானல் நீரைப்போன்ற உருவங்களைக் கண்டு மயங்கமாட்டான். கண்கள் உள்ள வரையில் தோற்றங்களைப் பார்க்க வேண்டும். ஆனால், உண்மையில் அது எப்போதும் என்ன என்பதைத் தெரிந்துகொண்டோம். மாறுந்தன்மை யில்லாத ஆத்மாவை மூடி யிருக்கும் திரையே அது. திரையை நீக்கிவிட்டால் அதன் பின்னால் ஆத்மாவைப் பார்க்கிறோம். மாறுதல்களெல்லாம் இந்தத் திரையினிடந்தான். ஒரு முனிவரிடத்தில் இந்தத் திரை கனமில்லாததாய் இருக்கிறது. ஆதலால் இந்தத் திரை வழியே உண்மைப் பொருள் விளங்கக் கூடியதா யிருக்கிறது. பாபங்களைச் செய்பவனிடம் இந்தத் திரை கனமுள்ளதா யிருக்கிறபடியால் முனிவரிட மிருக்கும் ஆத்மா இவனிடமும் இருக்கிறதென்று கொஞ்சங்கூடத் தெரியாமலிருக்

கிறது. திரை முழுமையும் நீங்கிவிட்டால், அதற்குப்பிறகு வாஸ்தவத்தில் திரையே இருந்ததில்லை யென்பது தெரிய வரும். நாம் ஆத்மாவைத் தவிர வேறொன்று மில்லையென்று அறிவோம். திரையே மறந்துவிடப்படும்.

(13)நாம் அடைய விரும்பவேண்டியது சுவாதந்தரியமாகியமுக்தியே என்றும், அப்படிப்பட்ட முக்தியே கடவுள் என்றும், நாங்கள் சொல்கிறோம். ஒவ்வொரு விஷயத்திலும் நாம் அடையும் சுகத்தைப்போன்ற சுகமே அது. ஆனால், குறைந்த வஸ்துவினிடம் இந்தச்சுகத்தை அபேட்சிக்கும்மனிதன் அதன் ஒரு சொற்ப பாகத்தை அடைகிறான். ஒரு மனிதன் கடவுளிடம் அடையும் சுகத்தையே திருடனும் திருடும்போது அடைகிறான். ஆனால், திருடனுக்கு அந்தச் சுகம் சொற்பமாத்திரமாகவும் துக்கம் ஏராளமாகவும் வந்துசேருகிறது. உண்மையான சுகம் கடவுள்தான். அன்பே கடவுள், முக்தியே கடவுள். பந்த நிலையில் இருக்கும் எதுவும் கடவுளல்ல.

* * * *

(14)எங்கள் தத்துவ சாஸ்திரங்களின் பிரகாரம் சுவாதந்தரியமே (முக்தியே) முடிவான நோக்கம். அறிவு என்பது சக்தி சுதந்திரம் ஆகிய இரண்டும் கலந்ததாக இருக்கிறபடியால், அது முடிவான நோக்கமா யிருக்க முடியாது. சுதந்திரம் மாத்திரமே விரும்பத்தக்கது. அதை யடையத்தான் மனிதர்கள் பிரயத்தினம் செய்வதெல்லாம். சக்தியை மாத்திரம் உடைத்தா யிருப்பது அறிவாகமாட்டாது. (சக்தியை மாத்திரம் அறிவு என்று கருதவில்லை என்பதற்கு) உதாரணம் எடுத்துக்கொள்ள வேண்டுமானால், சாஸ்திர ஆராய்ச்சி

யில் வல்லவன் ஒருவன் மின்சார சக்தியை ஒருமைல் தூரம் அனுப்பமுடியும். (ஜனங்கள் இவனுக்குக் கௌரவம் கொடுக்கிறார்கள்.) ஆனால், பிரகிருதியால் எல்லையற்ற தூரம் அந்தச் சக்தியை அனுப்ப முடியும். (இப்படியிருக்க) ஏன் பிரகிருதியின் (கௌரவத்திற்கு) சிலைகள் கட்டிவைக்கப் பிரியம் கொள்ளாமலிருக்கிறோம்? (ஏனெனில்) நமக்கு வேண்டியது விதியல்ல. விதியை வெல்வதற்குச் சக்தியே வேண்டும். விதிகளை மீறி நடக்கவே விரும்புகிறோம். விதிகளுக்குக் கட்டுப்பட்டவனாக இருப்பாயானால் நீ ஒரு களிமண்ணுக்குச் சமானம். நீ விதிக்கு வெளிப்பட்டு இருக்கிறாயா இல்லையா என்பது கேள்வியல்ல; ஆனால், நாம் விதிக்கு வெளிப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் இருக்கிறதே அந்த எண்ணத்தின் பேரிலேயே மனித வர்க்கத்தின் சரித்திரம் முழுமையும் நிற்கிறது. ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம்:—காட்டில் ஒரு மனிதன் இருக்கிறான். அவனுக்குக் கல்வியும் அறிவும் கிடைபபவே கிடையாது. அவன் இயற்கையாகவே ஒரு கல் விழுவதைப் பார்க்கின்றான். அப்போது அது சுதந்திரம் என்று எண்ணுகின்றான். அதனிடம் ஆத்மா இருப்பதாக நினைக்கிறான்; அதன் கருத்துச்சுதந்திரம்என்பதுதான். ஆனால் அது விழத்தான் வேண்டும் என்று தெரிந்துகொண்ட பிறகு அது இயற்கை—ஜடம் ஒரு யந்திரம் போன்றது—என்று சொல்லிவிடுகிறான். எனக்கு இஷ்டம் இருந்தால் தெருவில் போகலாம், இல்லையானால் வேண்டியதில்லை. இந்த நினைப்பில்தான் நான் மனிதன் என்ற பெருமை இருக்கிறது. அங்குப்போய்த்தான் தீரவேண்டும் என்று நிச்சயம் தெரிந்து

கொண்டேனுனல் என்னிடம் நம்பிக்கையை இழந்துவிட்டு ஒரு யந்திர மாகிவிடுகிறேன். (இந்த அர்த்தத்தில்) அள வற்ற சக்திகளோடுங் கூடிய பிரகிருதியானது ஒரு யந்திரம் தான். சுதந்திரமே அறிவுள்ள ஜீவ னுகிறது. வேதாந்தம் சொல்வது யாதெனில்—காட்டில் உள்ள (மேலே சொல்லப் பட்ட) மனிதனுடைய மனதில் தோன்றிய சாயையாகிய எண்ணம் சரியான எண்ணம்தான். ஆனுல்; அவனுக்குத் தோன்றிய காரணம் பிசகு. அவன் இந்தப் பிரகிருதியை விதிகளுக் கடங்கியதாக நினைக்காமல் சுதந்திரத்தோடுங் கூடி யது என்று நினைத்திருக்கிறுன்.

இந்த மனித அனுபவங்களெல்லாம் அடைந்த பிறகு நாமும் அதே மாதிரி நினைத்து விடும்படியாகத் திரும்புவோம் [பிரகிருதி சுதந்திரத்தோடு கூடியது என்ற நிலைக்கு]; ஆனுல், உயர்ந்த தத்துவ நிலையில் அறிவோம். உதாரணமாக, நான் வெளியே தெருவிற்குப் போகவேண்டுமென்று நினைக்கிறேன். மனதின் மூலமான தூண்டுதல், பிறகு சற்றுத் தாமதம். மன தின் எண்ணத்திற்கும் தெருவில் போவதற்கும் இடையில் உள்ள காலம் நான் சமமாக வேலை செய்கிறேன். செய்கை களின் ஒரே மாதிரித் தன்மையை விதி யென்கிறேம். நான் செய்த செய்கைகளின் இந்த ஒரே மாதிரித் தன்மை மிகவும் சொல்ப காலம் மாத்திரம் வியாபித்திருக்கிறது. ஆதலால், நான் என் செய்கைகளை விதிக்குக் கட்டுப்பட்டதாகச் சொல் லவில்லை. நான் சுதந்திரத்தோடும் வேலை செய்கிறேன். (ஏன் அப்படி நினைக்கிறே னென்றுல்) நான் ஐந்து நிமிஷங்கள் நடந்துகொண் டிருக்கிறேன்; இப்படி ஒரே ரீதியாக நடப்ப

தற்கு முன்பு என் எண்ணத்தின் (தூண்டுதலாகிய) செய்கை இருந்திருக்கிறது. அதுதான் நடப்பதற்கு தூண்டுதல் செய்தது. ஆதலால்தான் மனிதன் தான். சுதந்திரத்துடன் இருப்பதாகச் சொல்கிருன். ஏனெனில், தன் செய்கைகளையெல்லாம் சிறு பகுதிகளாகச் செய்ய முடியும். (எவ்வளவு நிமிஷங்கள் நடக்க எண்ணம்கொள்ளுகிறேனே அதற்குமேல் நடக்க வேண்டியதில்லை.) இந்தச் சிறு பகுதிகளில் ஒரேமாதிரித் தன்மை இருந்தாலும் இவைகளுக்கு வெளியில் ஒரே மாதிரித் தன்மையில்லை. இப்படி ஒரே மாதிரித் தன்மை (நீடித்திருக்க) இல்லை என்ற உணர்ச்சியிலேதான் சுதந்திரம் என்ற எண்ணம் நிற்கிறது. பிரகிருதியில் நீண்டகாலம் வியாபித்திருக்கும் ஒரே மாதிரித் தன்மையைப் பார்க்கிறோம். ஆனால், ஆரம்பமும் முடிவும் சுதந்திரம் பொருந்திய தூண்டுதலாகவே இருக்க வேண்டும். ஆதியில் சுதந்திரம் பொருந்திய பிரயோகம் கொடுக்கப்பட்டது. அது கால சக்கரத்தில் உருண்டுகொண்டிருக்கிறது. ஆனால், நம் செய்கைகளின் காலத்தை உத்தேசித்து இதன் காலம் அவ்வளவு அதிகமாக இருக்கிறது. தத்துவ விசாரணை செய்து பிரித்துப் பார்ப்போமானால், நாம் சுவாதந்தரிய மற்றவர்கள் எனத் தெரிந்து கொள்கின்றோம். ஆனால், நான் சுதந்திரமுள்ளவன் என்ற பிரக்ஞை மாத்திரம் இருந்தே தீரும். இது எவ்விதம் வருகிறதென்பது தான் நாம் விளக்கிக் காட்டவேண்டியது.( ஆராய்ந்து பார்த்தால்) இரண்டு தன்மைகளும் நம்மிடம் இருப்பது தெரியவரும். பகுத்தறிவானது நம் செய்கைகளுக் கெல்லாம் காரணமுண்டு எனத் தெரிவிக்கின்றது. ஆனால், ஒவ்வொரு

முயற்சியிலும் நம் சுதந்திரத்தன்மையை உறுதிப்படுத்துகிறோம். வேதாந்தத்தின் தீர்மானம் யாதெனின்:—உள்ளே சுதந்திரத்தன்மை இருக்கிறது; ஆத்மா உண்மையில் சுதந்திரமுடையது; ஆனால், அந்த ஆத்மாவின் செய்கைகள் சுதந்திரமா யில்லாத சரீரம் மனது இவற்றின் வழியே ஊடுருவி வந்துகொண் டிருக்கின்றன.

சிருஷ்டி தர்மம்:—ஆகாசம், பிராணன் என்ற இவைகள் தோன்றுகிற ரூபங்களோடு வெளியாகிப் பிறகுசூட்சும நிலைக்குத்திரும்புகின்றனவென்னும் விஷயத்தைப்பற்றிய வரையில் இந்தியரது கொள்கைக்கும் தற்கால சாஸ்திர ஆராய்ச்சிக்கும் நிறைய ஒற்றுமை யிருக்கிறது; தற்காலத்தவரும்வெளிப்படும் விதத்தைப்பற்றிக் கூறுகின்றார்கள்; யோகிகளும் அவ்வாறே ஒரு ஏற்பாடு உண்டென்கிறார்கள். ஆனால், வெளிப்படும் விதம் என்ற சிருஷ்டித் தன்மையைப்பற்றி யோகிகள் விளக்குவது ஸ்திரமான முடிவு என்று நான் நினைக்கிறேன். "பிரகிருதியின் இயற்கையாலே ஒரு வர்க்கம் தானே மற்றொரு வர்க்கமாக மாறுகிறது." நாம் ஒரு வர்க்கத்தினின்று மற்றொரு வர்க்கத்திற்கு மாறிக்கொண்டே யிருக்கிறோம்; அவற்றில் மனிதவர்க்கமே உயர்ந்தநிலையி லுள்ளது. இவ்விதப் பிரகிருதியின் இயற்கையைப் பற்றிப் பதஞ்சலியார் "குடியானவன் கழனிகளுக்குத்தண்ணீர் பாய்ச்சுவதுபோல" என்கிறார். நமது கல்வியும் முயற்சியும் இடையூறுகளை நிவர்த்திசெய்யும் வரையில்தான்வேண்டும்; தெய்வத்தன்மை தானே விளங்கி விடும்; பிறகு வாழ்க்கைத் துன்பமே இல்லாமற் போய்விடும்,

வாழ்க்கையின் துக்ககரமான அனுபவங்க ளெல்லாம் இடை யில் இருப்பவைகளே; முழுமையும் நீக்கிவிடலாம். அபி விர்த்திக்கு அவை அவசியமல்ல. அவைகள் இருந்திராவிட்டா லும் நாம் முன் செல்வோம். விஷயங்கள் தாமே விளங் கக் கூடியவைகளே. (விளக்கிக்காட்டும்) சக்தி வெளியிலிருந்து வருவதில்லை; உள்ளிருந்தே வருவது. எல்லா அனுபவங்க ளும் சேர்ந்து அந்தர்க்கதமாக அடங்கிக் கிடக்கும் தன்மை யே ஒவ்வொரு ஜீவனும். எந்த அனுபவங்களுக்குத் தக்க சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றனவோ அவைகள் மாத்திரமே வெளிப்படும். ஆகவே வெளியிலுள்ள விஷயங்கள் நமக்குச் சந்தர்ப்பங்களைத் தான் உண்டாக்கக் கூடும். நாம் பார்க்கின்ற சச்சரவுகளும் போட்டிகளும் துன்பங்களுமாகிய எல்லாம் (அடங்கி யிருக்கும்) காரணத்தைப் பொறுத்ததல்ல; இடை யில் இருப்பவைகளே. அவைகள் இல்லாமற் போனாலும் மனிதன் மேலெழும்பிக் கடவுளாக வெளிப்படுவான்; கடவு ளின் சுபாவம் அவ்விதம் வெளிக்கிளம்புவதுதான். போட்டி யினால் முன்னேறுவது என்ற கொடிய கொள்கையைக் காட் டிலும் இதுவே சிறந்ததென்று என் மனதுக்குத் தோன்று கிறது. எவ்வளவுக்கெவ்வளவு சரித்திரம் படித்தாலும் அவ் வளவுக் கவ்வளவு அந்தப் போட்டி என்ற கொள்கை தப் பென்றே தோன்றுகின்றது. மனிதர்கள் ஒருவரோடொருவர் போட்டியினால் போராடாவிட்டால் அவர்களுக்கு முன் னேற்ற மேற்படாதென்று சிலர் கூறுகின்றார்கள்; நானும் அவ்வாறு நினைத்ததுண்டு; ஆனால், (அனுபவத்தில்) ஒவ் வொருயுத்தமும் உலகைமுன்னேறச் செய்வதற்குப் பதிலாக

ஐம்பது வருஷங்கள் பின்னடையச் செய்திருக்கிறதென்று அறிகிறேன். மனிதர்கள் சரித்திரத்தையே வேறுவிதமாகப் பொருள் கொள்ளக்கூடிய காலமும் வரும். அப்போது போட்டி என்பது காரியம் அல்லது பயனுமல்ல; காரணமல்லவென்றும், வழியே காணப்படும் ஏதோ சம்பந்தமில்லாத சில விவரங்கள் என்றும், சிருஷ்டியாவிர்த்திக்குத் தேவையேயில்லையென்றும் காணுவார்கள். பதஞ்சலியினது கொள்கைகள் மாத்திரமே பகுத்தறிவை விரும்பும் மனிதன் ஒப்புக்கொள்ளத் தக்கவைகள் என்று நான் நினைக்கிறேன். தற்கால முறையினால் ஏற்படும் தீமைகள் எத்தனையோ? துஷ்டர்கள் துஷ்டத்தனம் செய்வதற்கு இடந்தருகின்றன. போட்டி என்ற தற்கால முறையானது தீமையேயன்றி வேறல்ல.

இந்தச்சச்சரவுகள் நமது அறிவீனமாகிய மாயையினால் தங்கி நிற்கின்றன என்று பதஞ்சலி கூறுகின்றார்; இவைகள் தேவையுமில்லை; மனிதனது விர்த்தியைச் சேர்ந்த பாகமுமல்ல வென்கிறார். நமக்குப் பொறுமை இருப்பதில்லை; அதனால், சச்சரவுகளை உண்டாக்கிக் கொள்கிறோம். ஒரு நாடகக் கொட்டகை தீப்பிடித்தது. சிலர் தப்புகிறார்கள். மற்றவர்கள் தப்புவதற்கு ஓடப் பிரயத்தனம் செய்கையில் நசுக்குண்டு மரணமடைகின்றார்கள். எல்லோரும் அவசரப்படாமல் போயிருந்தால் ஒருவரும் காயம்பட்டிருக்க மாட்டார்கள். அதேமாதிரி தான் வாழ்க்கையிலும் எல்லோருக்கும் வழி திறந்திருக்கின்றது. போட்டியும் போராட்டமுமின்றி எல்லோரும் வெளியேறலாம்; அப்படியிருந்தும் போராடுகிறோம். இந்தச் சச்சரவு நமது அறிவீனத்தாலும் பொறுமையின்மை

யாதுமே ஏற்பட்டது. மிகுந்த அவசரத்துடன் இருக்கிறோம். மேலான பலமென்பது நாம் சாந்தமாகவும் சுயபலத்துடனும் நிற்கச் சக்தி பெற்று விளங்குவதே யாகும்.

ஜடப்பொருள், மனம் ஆத்மாஎன்ற மூன்றுக்கும் உண்மையில் வித்தியாசமில்லை. ஒரு வஸ்துவை அனுபவிக்கப் பழகும்போது ஏற்படும் வித்யாச பாவனைகளே அவை. இந்த உலகமே பஞ்சேந்திரியங்களால் ஜடப் பொருளாகவும், மிக்க துஷ்டர்களால் நரகமாகவும் நல்லோர்களால் சுவர்க்கமாகவும் கடவுளாகவும் பார்க்கப் படுகிறது.

வேதாந்தமானது மனிதனது பகுத்தறியும் சக்தியைப் பற்றி மிகுதியாகவே குறிக்கின்றது; ஆனால், புத்தியைக் காட்டிலும் மேலாக ஒன்று இருக்கிறதெனக் கூறுகின்றது. மார்க்கமோ புத்தியின் மூலமாகவே யிருக்கின்றது.

ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் வேதாந்த தத்துவம்

முற்றிற்று.

---


## அத்வைதஉபதேச பஞ்சரத்நம்.

("கிரணாவளி" என்னும் வியாக்யானத்துடன்)

இதில் கிருபநிதியான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஜனனமரணப் பிரவாக ரூபமான சம்சாரமென்னும் சாகரத்தில் உழன்று கொண்டிருக்கும் பாமாரை ஆத்மஞானமென்னும் தெப்பத்திலேற்றிக் கரைசேர்ந்து உய்விக்க எண்ணங்கொண்டனராய் ஆத்மஞானம், அஞ்ஞான நிவர்த்தி, சம்சார நிவர்த்தி, பரமாநந்தப் பிராப்தி, ஆனந்தம் என்னும் ஐந்து உபதேச ரத்தினங்களைப் பதித்து வைத்திருக்கின்றனர். இதன் அருமையைப் பலவாறாகப் புகழ்வதில் பயன் என்? வாங்கிப் பார்த்தாலொழிய அநுபவிக்க முடியாதென்பது திண்ணம். இதன்விலை (பாக்கட் அளவு.)விலை அணா 0 6 0

குறிப்பு:—வேண்டுவோர்கள் 1-அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலையின்
வெளியீடுகள்

அதிசயம்! ஆநந்தம்!! அற்புதம்!!!

**கலியுக மகிமை! இன்றே ஆர்டர் செய்யுங்கள்.**

## ஸ்ரீ திரிபுரசுந்தரி

# இரக்ஷாபந்தனம்.

[இது ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியம் தேவை.]

இதைப் பக்தியுடன் தரித்துக்கொள்வோர்கட்குப் பேய்பிசாசு, ஜின்முனி, பிரஹ்மராக்ஷசு, ஏவல், பில்லி, சூனியம், குழந்தைகளுக்குரிய தோஷங்கள், பாலக்கிரகதோஷம், ஸ்திரீகட்குரிய தோஷங்கள் நீங்கிச் சந்தானவிருத்தி உண்டாகும். பிரசவவேதனைநீங்கி குழந்தை சுகமே உதயமாகும். வியாபார விருத்தி, காரியாநுகூலம், பிரபுகள் நேசம், உத்தியோகபலம் முதலிய பல நன்மைகள் உண்டாகும். தரித்திரம் நீங்கும். பெரியோர் கிருபை உண்டாகும். எந்த முகமும் தங்கமுகம்போல் பிரகாசிக்கும். முக வசீகரம், தேககாந்தி, சதாநந்தம் இவை உண்டாகும். இது ஒரு பிரஹ்ம நிஷ்டரால் தயார்செய்யப்பட்டது. ஆயிரக்கணக்காகச் செலவாகி வருவதே போதுமான நற்சாக்ஷி.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | விலை ரக்ஷை 1-க்கு தபாற்கூலிஉள்பட | 1 | 12 | 0 |
| வெளி நாட்டிற்கு | ,, ,, ,, | 2 | 12 | 0 |

நெம், 4-34, நயினியப்ப நாயக்கன்வீதி, பார்க்டவுன், சென்னை.

"சுயராஜ்ய யுத்தத்தின் காரணமாக இரண்டாம் முறை சிறைவாசத்திலிருந்து வெளிவந்த ஸ்ரீஜத் ஸ்வதந்திரானந்தர் என்னும் சுப்பிரமணிய சிவம் இயற்றிய சிறந்த வசன யோகநூல் எது?

# 1. மோக்ஷ சாதன இரகஸ்யம்

[இம்மாதிரியான யோகநூல் இதுகாறும் தமிழ் நாட்டில் வெளிவந்ததில்லை.]

இஃது மஹா சக்தியின் அருளால் ஸ்ரீஜத் ஸ்வதந்திரானந்தர் என்னும் சுப்பிரமணிய சிவம் தேசபக்தி காரணமாக இரண்டாம் முறை மதுரை ஜில்லா நியாயாதிபதியினால் 2½ வருடங் கடுங்காவல் தண்டனைவிதிக்கப்பெற்று திரிசிராப்பள்ளி சிறையில் அடைப்பட்டுக்கிடந்த பொழுதே கர்மயோகம், பக்தியோகம், (ஹடயோகம்,) இராஜயோகம், ஞானயோகம் ஆகிய இந்நான்குவித யோக அநுபவத்தின் இரஹஸ்யங்களைப் புத்தகமூலமாக விளக்க உத்தேசித்திருந்தார். மஹா சக்தியின் அருளால் ஸ்ரீஜத் சிவம் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தபடியால் அவரது உத்தேசம் நிறைவேறாமற் போய்விட்டது. 12-1-1922-ல் விடுதலையடைந்து தேக சௌகரியமடையப்பெற்று இந்நூலை எழுதினார். இதில் ஷை நான்குவித யோக ரஹஸ்யங்களையும் தாம் குருமூலமாக அறிந்த அநுபவப்படி மிகமிக எளிதாக விளக்கியுள்ளார்கள். இதன் அருமையையும் பெருமையையும் வாங்கி வாசித்தவர்களே யுணர்வார்கள். ஸ்ரீஜத் சுப்பிரமணியசிவம் முதல்

முறை சிறைவாசத்தி லிருந்த போது எழுதிய சச்சிதானந்த சிவத்தை வாசித்த தமிழ்ச் சகோதர சகோதரிகட்கு இவ்விரண்டா முறையாக எழுதிய இந் நூலுக்கு ஒரு விளம்பரம் எழுதி அறிமுகப்படுத்த வேண்டியதில்லை.

தங்கள் பெயரை முன்னதாக ரிஜிஸ்டர் செய்து வைப்பவருக்குத் தனித்தனி யோகங்கள் முடிந்ததும் விலை ரூபா 1 - வீதம் தருவோம். (தபாற்கூலி வேறு.) நூற்றுக்கணக்கான ஆர்டர்கள் வந்திருக்கின்றன. இன்றே உங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்யுங்கள்.

உயர்ந்த பயிண்டுடனும், ஸ்ரீஜத் சிவம் படத்துடனும் விலை ரூ. 4.

ஷை நான்கு யோகங்களையும் தனித்தனியாக வெளியிட்டு வருகிறோம். பிறகு ஒவ்வொன்றும் விலை ரூ. 1—4—0

விநோத, விசித்ர சிருஷ்டியாகிய இப் பிரபஞ்சத்திலே ஜீவராசிகள் எண்ணெணாத, பலவித நிர்ப்பந்தக் கட்டுக்களினால் பிணிக்கப்பட்டு, சதா துக்கா நுபவ முடையவர்களாய்க் காலத்தைக் கழித்து வருகின்றார்க ளென்பது அனுபவ சித்தம். பிபீலிகாதி பிரஹ்மா பர்யந்த முள்ள சமஸ்தகோடி ஜீவராசிகளும் மாயையாம் காராக்கிரகத்திலே பட்டுப் பரதவித்துக்கொண்டிருக்கிறார்கள்.—சிருஷ்டி காலமுதல், இந்தப் பந்தத்தினின்றும் விடுபடுவதற்கே ஜீவராசிகள் தெரிந்தோ தெரியாமலோ முயற்சி செய்துகொண்டிருக்கின்றன. அழியுந் தன்மையனவாய பொருள்களையுடைய அழியுந் தன்மையதாய இப் பிரபஞ்சத்தில் அழியாத் தன்மையதாய், அசைவற்றதாய் ஒருபொருள் இருந்துதான் தீரவேண்டும். மாறுதலற்ற ஒரு வஸ்து அஸ்திவாரமாக, ஆதாரபூதமாக, அந்தர்க்கதமாக இல்லாவிட்டால், மாறுதலுள்ள இவ் வுலகப் பொருள்களுக்கு இருப்பே யிராது. அந்த அழிவற்ற வஸ்துவே ஆத்மா எனப்படுகின்றது. உலகத்திலேயுள்ள சகல மதங்களும் இதை யொப்புக்கொண்டிருக்கின்

றன. எல்லா ஆசார்யர்களும் இதை எற்றுப் பறையடித்திருக்கின் றனர். அழிவற்ற ஆத்மா அவித்யா சம்பந்த முடையதாய், ஜீவனெனப் பெயர் பெற்று மேலும் கீழுமாக உருண்டு புரண்டு, ஒரு நிலையின்றித் திண்டாடுகின்றது. 'ஆத்மா அவித்தையுடன் எப்பொழுது சேர்ந்தது?' என்றகேள்விக்கு மறுமொழி இதுவரை எவராலும் அளிக்கப்படவில்லை; இனிமேலும் அதற்கு மறுமொழி கிடைக்காது. அவித்தையை அநாதி யென நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால், இது அந்த அவித்தையின் அபார சக்தியையும் ஆதிக்கத்தையும் உத்தேசித்தும், ஆதி அறிவுக்குப் புலப்படாமையாலும் உபசாரமாகக் கூறப்பட்டதென்றுதான் கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில் எதற்கு ஆதி யில்லையோ அதற்கு அந்தமும் இருக்க முடியாது. இது நியதி. ஆனால், அவித்தைக்கு அந்த முண்டாகின்றதென்பது சுருதி, யுக்தி, அநுபவம் இவற்றின் துணிபு. அவித்தைக்கு முடிவு இல்லாவிட்டால், ஜீவராசிகள் கடைத்தேறி, ஸ்வாநுபவமெய்தி, ஆநந்தமடைதல் முடியாததாய்விடும். அப்படியாயின், துக்கத்துக்கே முடிவில்லாமற் போய்விடும். ஆகவே, "அந்தமுள்ள ஒரு வஸ்துவுக்கு ஆதியும் கட்டாயம் இருந்திருக்கவேண்டுமே" என்றால், ஆம், அதற்கு ஆதி உண்டுதான். "ஆனால், அந்த ஆதி ஏன் எவராலும் அறிய முடியவில்லை?" என்றால், அந்த ஆதியை அறிந்தவர்கள் உண்டு; ஆனால், அவர்கள் ஆத்மாநுபவிகளாய்விடுதலினால், வாக்கிறந்தவர்களாய்விடுகிறார்கள். "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்." இப்பொழுது இந்த அவித்யாமயக்க பந்தத்தினின்றும் விடுபட்டு, ஸ்வஸ்த, ஸ்வதந்திர ஸ்திதியை அடைவதே ஜீவராசிகளின் ஜன்மப் பயனாகும். இதர ஜீவராசிகளின் மனோபாவத்தையும் உணர்ச்சிகளையும் நாம் அனுபவத்தில் தெளிய அறிய முடியாதவர்களா யிருப்பதினாலே, மனுஷ்யராசியைப்பற்றிமாத்திரம் பேசுவதற்கு யோக்கியதை யுடையவர்களா

யிருக்கிறோம். பெரும்பான்மையோரும் வெகு பட்ட சாஸ்திரங்களும் 'மனுஷ்ய ஜன்மமே உயர்ந்த"தென்றும், "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது"என்றும், தேவப் பிறப்பும் இதற்கு ஈடாகாது" என்றும், "மனுஷ்யஜன்மம் ஒன்றே முக்திக்குமார்க்ககம்" என்றும், "தேவர்களும் மனுஷ்யர்களாகப் பிறந்துதான் முக்தி யடையவேண்டும்" என்றும் மற்றும் கூறுகின்றனர். பூர்வ ஜன்ம கர்மங்களுக்குத் தக்கபிரகாரம் ஜன்மங்கள் கிடைக்கின்றனவேயொழிய வேறில்லை. ஆனால், ஒரு ஜன்மத்தினும் இன்னொரு ஜன்மம் உயர்ந்ததென்று கூற எவருக்கு அதிகாரம் இருக்கின்றது? நமது திருஷ்டிக்கும் மனோபாவத்திலும் நமது ஜன்மமே உயர்ந்ததென்று நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

நல்லது, மனிதன் கரசரணாதி அவயவங்களோடுகூடிய இச் சரீரத்தை "நான்" என்றும், "எனது" என்றும் அபிமானித்தவனாகி, காரண சூட்சும ஸ்தூல சரீரங்களிலே கட்டுப்பட்டு உழல்கின்றான்; போதாக் குறைக்குப் பெண்டு - பிள்ளை - தன-தான்ய-க்ஷேத்திராதிகளிலே பேராசை வைத்தவனாகி, அவற்றினாலும் கட்டுப்பட்டு அவஸ்தைப் படுகிறான். இரவுபகலாக இக் கட்டுக்களை யெல்லாம் மேன்மேலும் பலப்படுத்திக்கொள்ளவே அவன் பாடுபடுகின்றான். அஞ்ஞானக் குழியிலே ஆழ்ந்து விழுந்து, கரையேறத் தெரியாமல் கஷ்டப்படுகிறான். "அஞ்ஞானமே எல்லாக் கஷ்டங்கட்கும் காரணம்" என்பதை யறிந்தானில்லை; சில சமயங்களிலே அறிவு தோன்றினாலும், மயக்க பாசம் பலமாயிருக்கிறதினால் அவ் அறிவின்வழி அவனால் நிற்க முடிகிறதில்லை."பொன்னிலமாதராசை" பொருந்தினவனைத் தான் செய்வது சரி யென்பதற்குப் பல சாக்குப் போக்குகளையும் போலிச் சாத்திர விதிகளையும் கற்பித்துக்கொண்டு, அழுகிப் புழுத்திருக்கும் ஒரு பழம் புண்ணை ஒரு ரோஜாப்பூச் செண்டினால் மறைப்

பதுபோல, உலகத்திலே வியவகாரம் பேசித் திரிகின்றான். ஒவ்வொரு நிமிஷத்திலும் மனிதன் அடிமைத்தனத்திலே அகப்பட்டு என்ன அவஸ்தைப் படுகின்றா னென்பதை நாம் ஒவ்வொருவரும் யோசித்துப் பார்த்தால் நமக்கே தெரியவரும். ஆணும் பெண்ணும் மிருக இச்சையினால், காம சுகத்தினால், ஒருவரை யொருவர் கட்டியணைந்து சேர்ந்துகொள்ளுவது - அதனால் குழைந்தை பிறப்பது - "வம்சவிருத்திக்காக ஆணும் பெண்ணும் அணைந்துகொண்டார்கள்" என்று சாக்குச் சொல்வது இது உலகவழக்கா யிருக்கின்றது. ஆனால், இப் புணர்ச்சி, பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் செய்யப்படுவது அன்று; பட்டப்பகலிலே. எல்லோருக்கும் நட்டநடுவிலே செய்யப்படுவதும் அன்று. இருண்ட இடத்திலே. இருண்ட நேரத்திலே எவருக்கும் தெரியாது செய்யப்படும் ஒரு செய்கையாம் இது. இருண்ட இடத்திலே இருண்ட நேரத்திலே செய்யப்படும் செய்கையெல்லாம் குற்ற மல்லவோ? குற்ற மில்லாவிடின், அது பகிரங்கமாகப், பட்டப்பகலிலே, பலர் முன்னிலையில் செய்யப்படலாமே. இப் புணர்ச்சியின், இக் குற்றச் செய்கையின் பயனாகப் பிறந்த குழந்தை பெரிதாகி, வளர்ந்து, பெற்றோ ரெனப்படும் இக் குற்றவாளிகட்குத் தான் கடமைப்பட்டவனெனக் கருதுகிறான். ஒவ்வொருவனும் தனக்குத் தானே கடமைப்பட்டவனே யொழிய, வேறெவருக்கும் கடமைப்பட்டவ னல்லன். 'பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமையுண்டு' என்ற பித்துப் பிடித்தவர்களே பெரும்பான்மையோர். மகான்களெனக் கருதப்பட்டவர்கள்கூட இப் பித்தினின்றும், நீங்கினாரில்லை. "அன்னை யெத்தனை எத்தனை யன்னையோ, அப்ப னெத்தனை எத்தனை யப்பனோ" என்று வாய் பிளந்து பாடிய பட்டினத்தடிகள்கூட இப்பித்தினின்றும் நீங்கமுடியவில்லை. ஆணும் பெண்ணும் சேர்வதாம்; அதற்குச் சடங்குகளாம், சாஸ்திரமாம்; வம்ச விருத்திக்காக விவாகம் செய்து கொள்ளவேண்டுமாம்; பிள்ளை

யும் பெறவேண்டுமாம். வம்சம் விருத்தி யடையாவிட்டால் என்ன? "குடும்பம் அழிந்துபோகுமே? பெயர் சொல்வதற்குப் பிள்ளை வேண்டாமா?" குடும்பம் அழிந்துபோனால் போகட்டுமே. சந்யாசிகளான சங்கரர், புத்தர், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களுடைய பெயர்கள் நிலைநிற்கின்றனவா? குடும்பவாழ்க்கையிலே பூப்புழுக்கள்போல் உழன்று புழுங்கி மடிகின்ற கோடானுகோடி மனிதர்களின் பெயர்கள் நிலைநிற்கின்றனவா? "காகமோடுகழு கலகைகாய்நரிகள் சுற்றுசோறிடு துருத்தியை, காலிரண்டுநவ வாசல்பெற்றுவளர் காமவேணடன சாலையை, மோகவாசைமுறி யிட்டபெட்டியைமு மலமிகுந்தொழுகு கேணியை, மொய்த்துவெங்கிருமி தத்துகும்பியை முடங்கலார் கிடை சரக்கினை" ஏனோ இவ்வளவு பிரமாதமாகக் கட்டிக்கொண்டு அழவேண்டும்? "பிரகிருதி அப்படித்தானே யிருக்கின்றது; அவசியமில்லாவிட்டால், பிரகிருதியிலே ஆண், பெண் என்ற இத்தகைய சிருஷ்டி ஏற்படுமா?" என்றால். சிருஷ்டியே பந்தத்தி லுட்படுத்துவதுதானே. பந்தத்தி லிருக்கப் பிரியப்படுகிறவர்கள் பிரகிருதியின் நியமனங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர்கள்தாம். ஆனால், பந்த நிவிருத்தியை, மோக்ஷ ப்ராப்தியை நாடுகிறவர்கள் பிரகிருதியை ஜயித்தே தீரவேண்டும். "ஆண், பெண் புணர்ச்சி யில்லாவிட்டால் உலகம் அழிந்துபோய்விடுமே" என்றால், அப்படி யழிந்து போய்விட்டால் அதனால் யாருக்காவது நஷ்டமாவது துக்கமாவது உண்டா?

இன்னும், துர்நாற்றமே லக்ஷணமாக உடையது இச்சரீரம்; இதன் நவத்துவாரங்களி லிருந்தும் மலமும் ஜலமும் அடிக்கடி பொழிகின்றது. தோல்மீதுள்ள ரோமத்துவாரங்கள் எல்லாவற்றின் மூலமாகவும் ஜலமானது வேர்வைரூபமாகக் கழிகின்றது. அதிகமாக மலபாதை யாகிவிட்டால், சரீரம் கட்டுத்தளர்ந்து பலவீன

மடைந்துவிடுகிறது. இதனாலேயே சரீரமானது மலத்தினாலேயே ஆக்கப்பட்டதொரு பாண்டமென்று தெரியவில்லையா? அறிவுள்ள எவனும் இந்த மல மூட்டையைச் சுமந்து திரிய விரும்பான். அப்படியிருக்க, இன்னொரு மல மூட்டையைக் கட்டியணைந்து அதனால் சுகம் பெற எண்ணுபவனை அறிவாளி என்று கூற முடியுமா? ஆகவே, இந்தத் துர்நாற்றத்தினின்றும், இந்தத் துக்கத்தினின்றும், இந்த அவித்யா பந்தத்தினின்றும் விடுபடுவதற்கே முனைந்துநிற்றல் மனுஷ்யனுடைய தர்ம மாகின்றது.

இவ்வெல்லாம் இல்லாமையே; உள்ளது ஒன்றே. இல்லாமையாகிய இவ் வெல்லாவற்றையும் கட்டிக்கொண்டு மனிதர்கள் அழுகின்றார்கள். "ஏகம் ஸத் விப்ரா பேஹுதா வதந்தி" "ஒன்றேயுள்ளது; பெரியோர் பலவிதமாகக் கூறுகின்றனர்." ஒன்று என்றவுடனே இரண்டு என்பது விளங்கிவிடுகிறது; பின்னர் மூன்று, நான்கு, ஐந்து என்று இவ்வாறே விரிந்துகொண்டேபோகும். ஆகையால், வேதத்திலே கூறப்பட்ட இந்த "ஏகம்" என்ற பதத்துக்குப் பெரியோர் "இரண்டற்ற ஒன்று" என்று பொருள்படுத்தியிருக்கின்றனர். வியாக்கியான கர்த்தர்கள் 'அந்த ஏக வஸ்துவானது ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேதமற்ற பொருள்' என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அதாவது, ஸஜாதீயம் என்றால், தன்னைப்போன்று வேறு ஜாதி யில்லாதது. மனிதனைப்போன்று மனிதன் இருந்தால் அது ஸஜாதீயம். விஜாதீயம் என்றால், தன்னைப்போலல்லாவிட்டாலும் வேறு விதமாகவும் வேறு ஜாதி யில்லாதது. மனிதனுக்கு மாடு விஜாதீயம். ஸ்வகதம் என்றால், தனக்குக் கிளைகளு மில்லாதது; மரத்துக்குக் கிளை ஸ்வகதம். அந்த ஏகவஸ்து ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேத ரகிதமான வஸ்துவாகும். அந்த ஏக வஸ்துவானது ஸத் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸத் என்றால்

எப்பொழுதும் உள்ளது என்று பொருள். முற்காலம், இக்காலம், பிற்காலம் ஆகிய திரிகாலங்களிலும் உள்ளது, அழிவற்றது, ஆதியந்தமற்றது. ஒப்புவமை யற்ற அந்த ஏகவஸ்து ஸத்தா யுள்ளது. இரண்டற்ற வஸ்து ஒன்றே; அது என்று முள்ளது. இந்த வஸ்துவைத்தான் பெரியோர் பலவிதமாகக் கூறுகிறார்கள். சிவன் என்றும், விஷ்ணு என்றும், யெகோவா என்றும், அல்லா என்றும் ஆன்றோர் பலர் அவரவர்களுடைய மனப்பான்மைக் கேற்றவாறு கூறுகின்றனர். கடவுள் என்று சொல்லப்பட்ட உள்ள பொருள் ஒன்றே யாகும். கணிதசாஸ்திரத்தில் "Things which are equaelo the same thing are equal to one another" என்று ஒரு உண்மைமொழி யுண்டு. இந்த மொழியின்பிரகாரம்கூடக் கடவுளின் ஒற்றுமை நிலையை உணர்த்தலாம்.

| | |
|---|---|
| சிவன் | கடவுள் |
| விஷ்ணு | கடவுள் |
| கணபதி | கடவுள் |
| கறுப்பண்ணசாமி | கடவுள் |
| காளி | கடவுள் |
| யெகோவா | கடவுள் |
| அல்லா | கடவுள் |
| அக்கினி | கடவுள் |

ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொன்றைக் கடவுளென்று கூறி. எல்லாம் கடவுளாயிருப்பதினலே, கடவுள் ஒன்றே யென்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ?

இவ் வொன்ருகிய கடவுளே சங்கரர், இராமாநுஜர், மாத்வர், இயேசு, முகம்மது முதலிய பெரியோர்களால் பல பெயர்களிட்டு அழைக்கப்படுகின்றது. "ஆகாசாத்பதிதம் தோயம்யதா கச்சதி சாகரம், சர்வதேவ நமஸ்காரஃ கேசவம் பிரதி கச்சதி" என்று அழகான வொரு வாக்கியம் ஆர்யர்களுடைய சந்தியாவந்தன மந்திரங்களிலேயிருக்கின்றது. அதாவது, ஆகாசத்திலிருந்து விழுகின்ற மழைத்

துளிகள் எந்த இடத்திலே விழுந்தாலும், அதெல்லாம் சமுத்திரத்தையே போய்ச் சேர்கின்றன; அதுபோல, எந்தத் தேவனைக் குறித்து நமஸ்கரித்தாலும் அந்த நமஸ்காரமெல்லாம் கேசவனுக்கே போய்ச் சேர்கின்றன. ஆகையால், எந்த உருவோடு கூடியதாக, எந்த நாமத்தோடுகூடியதாக, எந்தப்பாஷையிலே எப்படிச் சொன்னாலும் எல்லாம் ஏகமா யிருக்கிற ஈச்வரன் ஒருவனுக்கே போய்ச் சேர்கின்றன. ஒரே பொருளுக்குப் பல பாஷைகளிலே பலவிதமான பெயர்கள் இருப்பதுபோல, ஒரே ஈச்வரனுக்குப் பலவிதமான வடிவங்களும் பெயர்களும் கற்பிக்கப்பட் டிருக்கின்றன. அந்த ஈச்வரனே யுள்ளவர்; மற்றெல்லாம் இல்லையே. ஆஸ்திகன் ஈச்வரனென்றும், ஞானிகள் பிரஹ்மமென்றும், பல மதத்தினர்கள் பல பெயர்களிட்டழைத்தும் கூறப்படுகின்ற வஸ்து ஒன்றே; மற்றவெல்லாம் இல்லாமையே. கீதையிலே பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகின்றார்:— "நாஸதோவித்யதேபாவோ, நாபாவோ வித்யதே ஸத:" அதாவது, "இல்லாததற்கு இருப்பு கிடையாது. இருக்கிறதற்கு இல்லாமை கிடையாது." ஜகத்திலே பிரஹ்மமென்றும், பிராணிகளிலே ஆத்மாவென்றும் கூறப்படுவதும் இதுதான். இந்த ஒன்று என்றும் உள்ளது; அழியாததாம். இவ் வொன்றை அழியுமாம் இவ்வெல்லாம் கூடிச் சூழ்ந்திருக்கின்றன, கட்டியிருக்கின்றன, பிணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. அழுத்தி அமுக்கிவைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்ச்சியினின்றும், இந்தச் கட்டுக்களினின்றும், இந்தப் பிணைப்பினின்றும் விடுபடுதலே மனுஷ்யனுடைய லக்ஷியமாம். இந்த விடுதலையடைதற்குப் பிரதி மனுஷ்யனுடையவும் மனப்போக்குக்கும் பரிபக்குவத்துக்கும் தகுந்தவாறு மார்க்கங்கள் போதிக்கப்பட் டிருக்கின்றன. இவற்றில் முக்கியமாக: கர்மயோகம், பக்தியோகம், (ஹடயோகம்) ராஜயோகம், ஞானயோகம் என்பன சிறந்தவை யெனக் கருதப்பட் டிருக்கின்றன. "இந்த நான்கு மார்க்

கங்களுள் ஒவ்வொன்றும் ஒன்றற்கொன்று இட்டுச் செல்வதாமென்றும், கடைசியாகிய ஞானமார்க்கமே சாலச் சிறந்தது”என்றும் பலர் கூறுகின்றார்கள். இது ஒற்றைப் பார்வையினர் கூறும் கூற்றேயாம். ஒவ்வொரு மார்க்கமும் மனுஷ்யனை விடுபடச்செய்வதுதான். ‘ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததன்று.

இன்னும், லக்ஷியம் ஒன்றேயா யிருத்தல்போல மார்க்கமும் ஒன்றேதான் என்பதும், ஆனால் தோற்றத்தில், அவரவருடைய காட்சியில், அந்த ஒரே மார்க்கமானது அநேகமாகத் தோன்றுகின்றன வென்பதுமே நிச்சயம். பூர்வ ஜன்ம கர்மங்களின் பலனாக, சூட்சும ரூபத்தில் வாசனை எப்படி யாக்கப்பட்டு வந்திருக்கிறதோ, அப்படியே, அவரவர்களுடைய மார்க்கமும் செப்பனிடப்படுகிறது. இதில் சந்தேகமே யில்லை. ஆகையால், பூவாயிருக்கும் அந்த வாசனையே பிஞ்சாகிக் காயாகிப் பின்னர் பழுத்து, ஆனந்தாமிருத ரஸம் அளிக்க, அதைப் பருகிவிட்டால், அத்வைத நிலை சித்திக்கும். அப்பொழுது அகண்ட சச்சிதானந்தப் பிரஹ்ம வஸ்து ஒன்றே யநுபவித்தில் நிலைக்கும். அப்பொழுது “ஏகம் ஸத்: விப்ரா பெகுதா வதந்தி” என்ற ச்ருதியில் பங்கத்திற்குக் காரணமாயுள்ள “விப்ரா பெகுதா வதந்தி” என்ற பாகமானது அடிபட்டு, “ஏகம் ஸத்” என்றதே எஞ்சுகின்றது. இதுவும் வெறும் ச்ருதியாயிராமல்,வாசாலகக் கொள்கையாயிராமல். ஸ்வானுபவத்திலே ஸகஜமாய்விடுகின்றது. இந்த நிலைதான் மோக்ஷம், உண்மை நிலையாகும். உதவி செய்யுமாயின் அதுவே நமக்குப் போதிய திருப்தியை யளித்து, மனச் சாந்தியை யுண்டுபண்ணி விடும்.

சர்வலோகசரண்யையாய், சாக்ஷாத் சச்சிதானந்த சொரூபிணியாய், காலந்தகனும் கடவுளையும் காலடியிலே போட்டு மிதித்து நிர்த்தனம் செய்கின்ற காளி மாதாவாய், சாதுக்களுக்கு ஸரஸ்வதி

யாய், - துஷ்டர்களுக்கு துர்க்கையாய், பிரஹ்மத்தினின்றும் பின்னப்பட்டதுபோலத் தோன்றினும் பின்னமற்ற பிரமையாய் இன்மையாய், உண்மையாய், இன்மையில் உண்மையாய், உண்மையில் இன்மையாய். இன்மையும் உண்மையும் இரண்டற்று நின்றதாய் உள்ள இறைவி—எல்லோர்க்கும் இறைவி—மகா சக்தியின் மலரடிகளைச் சிந்தித்து உய்வோமாக.

---

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

## 2. ஆத்மஞான இரத்தினம்

[சுவாமி விவேகானந்தரால் அருளிச்செய்யப்பட்டது. ஆசிரியர்: ஸ்ரீமான் சுப்பிரமணிய சிவம்; பிரசுரித்தவர்: ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தக சாலையார், பார்க்டவுன், சென்னை: விலை இரண்டு ரூபாய்; தபாற்கூலி வேறு.]

'ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுடைய பேச்சுக்களும் எழுத்துக்களும் ஆகிய விலை மதிப்பிட முடியாத சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட முக்கியமான சில மணிகளை இந்த ஆத்மஞான ரத்தினம் என்னும் நூல் அடக்கிக்கொண் டிருக்கிறது. இந்த அருமையான நூலில் பல உண்மைகள் பொலிந்து விளங்குகின்றன என்று பொதுவாகக் கூறவேண்டியிருக்கிறதன்றி, எந்த விதமான உண்மைகள் இதில் அடங்கியிருக்கின்றன என்று கூற முடியவில்லை. ஒவ்வொரு புத்தகசாலைக்கும் இந்த நூலைச் சிரோமணியாக வைக்கவேண்டுமென்பது நமது விருப்பம். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இந்த நூலில் காணப்படும் உண்மை உரைகளை மனப்பாடம் பண்ணிக்கொள்ளுதல் நலம். இதனைத் தமிழ் நாட்டார் பொன்னேபோல் போற்றுவாராக.

நவசக்தி மதிப்புரை [18-8-1922.]

புதிய நூல்கள்! இதுகாறும் தமிழில் வெளிவராதது!

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்
அமெரிக்கா உபதேசமாகிய

# 3. அருள்மொழிகள்

ஸ்ரீ ஸ்வாமிகள் ஆசார்ய கோடிகளிலே ஒருவராக அவதரித்து ஆத்மஞான ஒளியை எங்கெங்கும் வீசி, "அவனியே ஆத்மா, ஆத்மாவே அவனி," என்று அதிருரையாடுவோர், எவருமில்லாது, பரதகண்டத்தில் மாத்திரமன்று, வேறு பன்னாடுகளிலும் சென்று பறையறைந்து திக்விஜயம் செய்து, உண்மையொன்றே பொருளென உறைத்து, கடைசியாய் உண்மையில் உண்மையாகக் கலந்துகொண்ட ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தருக்கு இந்தியா தேசத்தின் மீதும், தமது ஜன்ம பூமியின்மீதும், மகரிஷிகளின் நாடாகிய இப்பரதக்கண்டத்தின் மீதும், அவருக்கிருந்த அன்புக்கு ஓர் அளவே யில்லை. தேசாபிமான் ஸிம்ஹமெனத் திகழ்ந்து, தேசத்திலே ஒரு புதிய உணர்ச்சியை உண்டாகினர். உறங்கிக்கிடந்த ஜனங்களைத் தட்டி எழுப்பிவிட்டார். உண்மையை உரைத்தார் ஆண்மக்கள் ஆகவேண்டுமென்றார்.

ஆனல், இவருடைய ஏகாந்த, சிஷ்ய சகவாசமே இவருடைய உண்மையை ஆயிரம் மடங்காகப் பிரகாசிக்கச் செய்கிறது. அமெரிக்காவிலே கோடைகாலத்தில் ஜனங்கள் நகரங்களில் வசிக்க முடியாமல் கிராமங்களுக்குச் சென்று விடுவது வழக்கம், அதுபோலவே நமதுஸ்வாமிகளும் தமதுஸ்திரீ சிஷ்யரொருவருடைய வேண்டுகோளுக் கிணங்கி அவருடைய வாசஸ்தலத்தில்போய்சுமார் 2-மாதகாலம் வசித்து வந்தார். அவ்வம்மையாருடைய வாசஸ்தலம் நான்கு பக்

கங்களிலும் நதிகளால் சூழப்பட்டு, ஸகஸ்ரா தீபவனம் என்னும் அழகிய பெயர் வாய்ந்ததா இருந்தது. அந்த ஸகஸ்ரா தீபவனத்திலே தினந்தோறும் ஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுள் சிலருக்கு உபதேசம் செய்து கொண்டுவந்தார். அந்த உபதேசங்களை சிஷ்யர்கள் அவ்வப்பொழுது குறித்துக்கொண்டு வந்தார்கள் பின்னர், அவ்வுபதேசங்களை யெல்லாம் சேர்த்து அருள் மொழிகள் எனப் பெயரிட்டு அமெரிக்காவிலே புத்தகரூபமாக அவற்றை வெளிப்படுத்தினார்கள்.

அக்காலத்தில் ஸ்வாமிகள் அடக்கமே ஸ்வரூபமாய், அருள் பெற்று விளங்கினர். அவருடைய அதரங்களின் வழியே அருள் பொங்கிப் பொங்கி வழிந்தது. அந்த "அமிர்தப் பெருக்கே" அருள் மொழிகள் என்னும் பெயருடன் இப்பொழுது அவ் ஆங்கில மொழி பெயர்ப்புக்குச் சரியாகத் தமிழில் ஸ்வதந்திரானந்தர் (சுப்பிரமண்ணிய சிவம்) மொழி பெயர்த்துள்ளார். துக்க நிவர்த்தியையும் மோக்ஷப் பிராப்தியையும் நாடும் எந்தத் தமிழருக்கும் இந்த நூல் ஒரு அரும் பெருந்துணையாய் நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடைசியாக ஒரு வார்த்தை; இந்த அருள் மொழிகள் உயர்ந்த உண்மைகளைப் பண்டித பாமர சாதாரண சர்வஜனங் கட்கும் தெளிவாக விளங்குமாறு எழுதப்பட்டிருக்கின்றன. இதுவே அருள் பெற்றோரது லக்ஷணம்.

ஸ்வாமிகள் படத்துடன் உயர்ந்தபயிண்டு விலை ரூபா. 1 8 0

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்தகாலை அவ்வப் பொழுது வெளியிட்ட அரிய கருத்துக்கள், நூல் வடிவாக வெளிவந்திருக்கின்றன. இதில் காணப்படும் அரிய உரைகள் யாவருடைய உள்ளத்தையும் கவரும். தமிழ் நாட்டார் இந்நூலைப் பொன்னே போல் போற்றல்வேண்டும்.

நவசக்தி மதிப்புரை [22-9-1922.]

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

[தமிழ் மொழி பெயர்ப்பு நூல்கள்.]

| | ரூ. | அ. |
|---|---|---|
| 4. விவேகாநந்தர் கடிதங்கள் 1-2-ம் பாகங்கள் | 0 | 14 |
| 5. கிழக்கும் மேற்கும் | 0 | 8 |
| 6. க்ர்ம யோகம் | 1 | 0 |
| 7. எதிரொலிகள் | 0 | 8 |
| 8. வேதாந்த தத்துவம் | 0 | 8 |
| 9. என தூகுருநாதர் | 0 | 8 |
| 10. 1001 உபதேசங்கள் | 2 | 0 |
| 11. தற்கால இந்தியா | 0 | 10 |
| 12. ஞானரத்னவளி1-ம்பா | 1 | 8 |
| 13. ஷை 2-ம் பாகம் தனித் | 1 | 8 |
| 14. ராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம் | 1 | 4 |
| 15. ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸர் ஞாநாம்ருதசம் பாஷனைகள் | 2 | 4 |
| 16. இராமாயணரகசியம் பாரதரகசியம் | 1 | 0 |
| 17. ராமதீர்த்த விஜயம் 2 ம் பாகம் | 3 | 0 |
| 18. இராஜயோகம் பதஞ்சலி யோகமும் | 2 | 4 |

# 19. நாமாவளி கதம்பம்

[இரண்டாவது பதிப்பு.]

இதில் விஷ்ணு ஸஹஸ்ர நாமாவளி ௧-ம், அஷ்டோத்ர ஶதநாமாவளிகள் ௧௦-ம் அடங்கியிருக்கின்றன. விவரம்:—

௧. ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமாவளி.
௨. ” ந்ருஸிம்ஹ அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௩. ” லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௪. ” ராமாஷ்டோத்தர ஶதநாமாவளி.
௫. ” க்ருஷ்ணாஷ்டோத்தர ஶதநாமாவளி.
௬. ” லக்ஷ்மீநாராயண அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௭. ” ஸூர்யநாராயண அஷ்டோத்தர ஸதநாமாவளி.
௮. ” லக்ஷ்மீ அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௯. ” ஸரஸ்வதி அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௧௦. ” ஆஞ்ஜநேய அஷ்டோத்தர ஶதநாமாவளி.
௧௧. ” ஹரிஹராஷ்டோத்தர ஶதநாமாவளி.

இவை பல பிரதிகளைக் கொண்டாராய்ந்து ஸம்ஸ்க்ருதபண்டிதர்களாலும் தமிழ்ப் பண்டிதர்களாலும் பார்வையிடப்பட்டுப் புதுவிதமாக கிரவுன் 32-பேஜ் பாக்கெட் அளவில் தமிழில் அச்சிடப்பட்டிருக்கின்றன. நாமங்களின் முதலில் பிரணவம் சேர்த்திருக்கின்றது. வடமொழி நாமங்களைத் தமிழ் எழுத்தாற் படிக்கையில் ஓசைகள் பிழைபடுவதை யாருமறிவர் இதோடு வடமொழி தெலுங்கு எழுத்துப் பிரதிகளைப்போல் தமிழில் உள்ள பிரதியை உச்சரிப்புப் பேதம் தெரிந்துகொண்டு உச்சரிக்கக் கூடாமையாயிருக்கிற" தென்று பலரும் குறை கூறுகின்றனர். இவ்வித குறை நீங்கும்பொருட்டுத் திருநாமங்கள் முற்றிலும் தமிழெழுத்தி லெழுதப்பட்டும், வடமொழியின்படி கூ, வ, ட, த, வ இந்த வர்க்கங்களிலுள்ள எழுத்துகள் மொத்தம் 20-ல் கிரந்தாக்ஷரத்தின்படி கூ, வ, ட, த, வ இவ்வைந்தெழுத்துகளுக்குப் பதில் தமிழெழுத்துகள் க, ச, ட, த, ப, இவைகள் போடப்பட்டும், மற்றப் பதினைந்து எழுத்துகள் உச்சரிப்புப் பேதம் வருமிடங்களில் தமிழ் எழுத்துக்கப்புறம் இருதலைப்பிறை( )-க்குள் கிரந்தாக்ஷரத்தில் போடப்பட்டுமிருக்கின்றன. ஒவ்வொரு திருநாமமும் இன்ன இலக்கமுள்ள ஶ்லோகத்திலடங்கியிருக்கின்ற தென்கிற விவரம் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஶ்லோகத்தின் இலக்கமும் இதில் காட்டப்பட் டிருக்கின்றது. இப்புத்தகம் நெடுநாள் சிரமத்தின்பேரில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்க்ருத பண்டிதர்களும் தமிழ்ப்பண்டிதர்களும் இப்புதிய நாமாவளியின் விதத்தைப் பார்த்துச் சம்மதியும் கொடுத்துள்ளார். இதன்கீழ் காட்டியிருக்கும் பண்டிதர்களுடைய அபிப்பிராயங்களாலும், பத்திரிகைகளின் அபிப்பிராயங்களாலும் இப்புத்தகத்தைப் பற்றிய மற்ற விவரங்கள் தெரிந்துகொள்ளலா.

| | | | | |
|---|---|---|---|---|
| இதன் விலை பாக்கெட் அளவு | அணா | 0 | 8 | 0 |
| 21. சங்கரர் அருளிய அத்வைத உபதேசபஞ்சரத்நம் பாக்கெட் அளவு | விலை அணா | 0 | 6 | 0 |
| 22. வீரரத்நபாஜிப்ரபு | விலை அணா | 0 | 3 | 0 |

நெ .4/34, நயினியப்ப நாயக்கன்வீதி, பார்க்டவுன், சென்னை.

Ganesa Press, Vepery, Madras. 1923.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை

நெ. 4/34 நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன் P. O., சென்னை

## ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த

## பரமஹம்ஸ விஜயம்

இந்நூலில் அடங்கிய விஷயங்கள். (1) முன்னுரை, (2) இராம தீர்த்தரின் அற்புத சரித்திரம், (3) ஆத்மாநுபவத்திற்கு மார்க்கம் (4) ஓங்காரத் தொனி, (5) "ஓம்" என்ற மஹாமந்திரத்தின் மகிமை, (6) பின் வரும் காரணங்களுக்காகத் தனியே நடந்து உல்லாவச் செயல், (7) உண்மையான சுகம் எது? (8) மதப்பயிற்சியின் பூர்த்தி, (9) கிருஷ்ண பரமாத்மா, (10) மாயை, (11) சமாதிநிலை கலையாத குடும்பவாழ்க்கை, (12) தேசபக்தி, (13) ஹிந்துமதத்தின் முற்கால தற்கால நிலை, (14) எக்ஞம் செய்வதன் இரஹஸ்யம், (15) வேதாந்தமும் தனசேர்க்கையும், (16) ஜாதி தத்துவம், (17) சிலகதைகள், (18) ஹிமாசல காடுகளிலிருந்து கடிதங்கள் வருதல் முதலியன. ஸ்வாமிகள் படத்துடன் உயர்ந்த பயிண்டுடன். [முதற்பாகம்] விலை ரூபா 1 4 0

## ஸ்ரீ இராமதீர்த்த

## பரமஹம்ஸ விஜயம்

### [இரண்டாம் பாகம்]

(1) முன்னுரை, (2) வெற்றிபெறும் இரகஸ்யம் (3) இந்தியாவின் தற்கால தேவதைகள், (4) ஆத்மதர்மம், (5) ஸ்வாமிகள் எழுதிய கடிதங்களின் சாரங்கள், (6) பரிபூர்ண அன்பும் குணசோதனையும், (7) சோம்பேறித்தனம் அல்லது தமோகுணம், (8) சுயம் ஜோதி, (9) சஷ்டி பாவனையும், ஆத்மாநுபவமும், (10) பிரஹ்மமும் சிஷ்டியும், (11) ஆத்ம விரிவு, (12) சகோதரத்துவமா? ஏகத்துவமா? (13) துக்கநிவர்த்தியும், சுவாநுபோகமும், (14) இரகஸ்ததர்மம் பேரானந்தத்தைத் தருவதெப்படி, (15) தன்வழிக்குத்தானே கர்த்தா, (16) உன்னதமான ஊக்கம் என்றும் அமைதி, (17) அன்பெனப்படுவது யாது? (18) சத்சொரூபாநுபவம் சத்பொருளும் பாவரூபமும், (19) வேதாந்தமும் சமூக உணர்ச்சியும், (20) அஞ்ஞானமே பாபமாகிறது, (21) ஆத்மதர்ம விதி, (22) வேததத்துவ பொக்கிஷம், (23) மாகதர்மமும் கண்ணாடி போன்றது, (24) சில சிறுகதைகள், (25) கடவுள் நன்றியறிவுள்ளவர், (26) ஒரு விசித்திரக்கதை, (27) ஸ்திரீகளிடம் ஆசை (28) பிராயணமம், (29) அழகிய சிறுகதைகள், (30) அமெரிக்கர்களுக்கு ஒரு விண்ணப்பம், (3[illegible]) வெற்றி பெறுதற்கேற்ற சாதனம்.

இதன் வி[illegible] சுவாமிகள் படத்துடன் உயர்ந்த பயிண்டு விலை ரூ. 3.

# Tamil Works of Swami Vivekananda.


| | Rs | A |
|---|---|---|
| The Secret of Vedanta (Gnana Yoga I part) 2nd Edition... | 1 | 12 |
| ,, Gnana Yoga ... | 2 | 4 |
| Karma Yoga—8 Chapters | 1 | 0 |
| Raja Yoga and Pathanjali Yogam | 2 | 4 |
| Bakthi Yoga ... | 0 | 12 |
| Vedanta Philosophy ... | 0 | 8 |
| My Master | 0 | 8 |
| East and West ... | 0 | 8 |
| Echoes of the Teachings | 0 | 8 |
| Epistle I & II part—each ... | 0 | 14 |
| Vivekananda Vijayam | 1 | 12 |
| Gnanaratnavali 2 parts | 3 | 0 |
| Atmagnanaratnam (1004 Sayings) ... | 2 | 0 |
| Inspired Talks (Sayings to Americans) ... | 1 | 8 |
| Modern India ... | 0 | 2 |
| The Secret of Ramayanam and Bharatham ... | 1 | 0 |
| Life of Sri Ramakrishna Paramahamsa 41 chapters 703 pages | 2 | 0 |
| Sri Ramakrishna Vibavam ... | 1 | 4 |
| ,, 1001 Sayings ... | 2 | 0 |
| Sri Ramakrishna Paramahamsa's Brahmananda Conversation ... | 2 | 4 |
| * Ramthirtha Paramahamsa Vijayam ... | 1 | 4 |
| ,, ,, parts ... | 3 | 0 |

*"This is a Tamil rendering of some of the highly inspiring lectures and writings of Swami Ramtirtha on Vedanta and nationalism. The book, consisting of more than 250 pages, contains also an account of the Sawmi's noble life. We hope the Tamilian public will welcome the publication since it presents an easily digestable form of the fundamental principles of our ancient philosophy with appealing illustrations from daily life and puranic stories."—Hindu (27—8—20.) Price Re. 1-4

*Apply to :—*

**Sri Sadhu Rathna Sarguru Book Depot**

**4/34, Nainiappa Naicken St, (Park Town P.O.) MADRAS.**



Title Page Printed at the Manoranjini Press, Madras.